# ஆசிரியர் கல்வியும் மாணவர் திறன்களும்



JPL
C12098

கலாநிதி த. கலாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

JPL.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 FEB 2017
யாழ்ப்பாணம்

# ஆசிரியர் கல்வியும் மாணவர் திறன்களும்

KOHA-JPL
254470

**கலாநிதி த.கலாமணி**
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்வியியல் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஜீவநதி வெளியீடு
2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
254470 CC

ஜீவநதி வெளியீடு - 69

371.1

## ஆசிரியர் கல்வியும் மாணவர் திறன்களும்

ஆசிரியர் : கலாநிதி த. கலாமணி

முதற்பதிப்பு : 2016 மார்கழி

பதிப்புரிமை: திருமதி கு.கலாமணி

வெளியீடு : ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

அட்டைவடிவமைப்பு : க.பரணீதரன்

பக்கம் : 100

விலை : 250/-

அச்சு: பரணீ அச்சகம், நெல்லியடி

ISBN : 978-955 - 4676 - 49 - 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

# என்னுரை

இன்று உலகளாவிய வகையில் சகலதுறைகளிலும் ஏற்பட்டு வரும் துரிதமான மாற்றங்களைப் போன்றே கல்வித்துறையிலும் புதிய சிந்தனைகளும் புதிய கோட்பாடுகளும் உருவாகி வருகின்றன. இச்சிந்தனைகளினதும் கோட்பாடுகளினதும் குவிமையமாக விளங்குபவர்கள் மாணவர்களே.

பாடசாலைக்காலத்திலேயே மாணவர்களுக்குக் கற்றலுக்கு வலுவூட்டல் இன்றைய காலத்தின் தேவையாகும். நாளைய உலகின் சிற்பிகளாக விளங்கப்போகும் மாணவர்களுக்கு வேண்டிய திறன்களை விருத்திசெய்து, ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்க வேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பு மாத்திரமன்று, சமூகத்தினதும் பொறுப்புமேயாகும். ஆனாலும், மாணவர்களிடத்தில் காணப்படக் கூடிய ஆற்றல்களை இனங்கண்டு அவற்றை மலர்ச்சியுறச் செய்யக் கூடிய வாய்ப்புகள் ஆசிரியர்களுக்கே அதிகம் உண்டு. இதனால் இன்றைய உலகியல் மாற்றங்களை ஒட்டியதாக ஆசிரியர்கள் செயலாற்றல் கொண்டவர்களாக விளங்க வேண்டுமெனில், ஆசிரியர்களுக்கு வலுவூட்டல்(empowering teachers) அத்தியாவசியமானதாகும்.

ஆசிரியர்களுக்கு வலுவூட்டுவதற்கான வழிவகைகள் குறித்து இன்று பல்வேறு மட்டங்களிலும் சிந்திக்கப்படுகின்ற போதிலும் தமக்கான கௌரவமும் மதிப்பும் குறைந்து செல்கின்றதோ என்ற ஐயப்பாடே ஆசிரியர்கள் மத்தியில் நிலவுகின்றது. அவ்வாறன்றி, கல்விசார் மாற்றங்களை விளைவிக்கக் கூடிய பாரிய விசையாக என்றும் விளங்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவர்கள் ஆசிரியர்களே என்ற நம்பிக்கையை அவர்களிடம் தோற்றுவித்து, விசைகொள்ளச் செய்ய வேண்டியமை ஆசிரியர் கல்வியின் நோக்காக இருக்க வேண்டும்.

இந்நோக்கில் அசிரியர் கல்விக்கான துணைநூலாகக் கொள்ளக் கூடிய வகையில் இந்நூல் வெளிவருகின்றது. இந்நூலில் எடுத்தாளப் பட்டுள்ள கருப்பொருள்கள் விரிவாக நோக்கத்தக்கன. ஆயினும், நீண்ட விபரிப்புகளைத் தவிர்த்து, அக்கருப்பொருள் குறித்த சுருக்கமான குறிப்பு களை உள்ளடக்கியனவாக அனேகமான கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இவ்விடயங்கள் ஆசிரியர் கல்விப் பயிற்சி நெறிகளிலும் கருத்தரங்குகளிலும் எடுத்தாளப்பட வேண்டியவை. அறிவுத்தேடலில் நாட்டம் கொண்டு மாணவர்களின் ஆளுமை மலர்ச்சிக்கு ஆதாரமாய் விளங்கும் ஆசிரியர்கள் இந்நூலை வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு என்றும் உண்டு.

**கலாநிதி த. கலாமணி** **25.12.2016**
**கலைஅகம்,**
**அல்வாய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. ஆசிரியமும் உலகியல் மாற்றங்களினூடான அறைகூவலும்

2. ஆசிரிய தலைமைத்துவத்தின் தேவையும் அதன் பின்னணியும்

3. வாண்மை விருத்தியும் மென்திறன்களும்

4. கட்டிளமைப்பருவத்திரை விளங்கிக் கொள்ளல்

5. கணிப்பீடும் மதிப்பீடும் பாடசாலை அடிப்படையிலானது மாணவர் அடிப்படையிலானது & சுயமதிப்பீடு

6. அனுபவ வழிக்கற்றல்

7. 5 S அணுகுமுறை - 5S ஒழுக்கமும் அதன் தூண்களும்

8. அளிக்கைத்திறன்கள்

9. பாடசாலை மாணவர்களின் உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்கான "கைசன்"

10. தொழிற் சூழிலில் முரண்பாட்டு உணர்திறன்

11. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பயனுள்ள குறிப்புகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியமும் உலகியல் மாற்றங்களினூடான அறைகூவலும்

உலகியல் மாற்றங்கள் இன்று மிகத்துரிதமாக இடம்பெற்று வருகின்றன. மனித சிந்தனை விருத்தி, அதன் பேறான விஞ்ஞான - தொழில்நுட்ப வளர்ச்சி, இலத்திரனியற் சாதன விருத்தி என்பன உலகியல் சார் நடவடிக்கைகளில் பாரிய மாற்றங்களை விளைவித்துள்ளன. உலகியல் மாற்றங்களைச் சார்ந்து கல்வியும் கல்விசார் செயற்பாடுகளும் நடைமுறை களும் காலத்துக்குக் காலம் மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டே வந்துள்ளன. இவ்வகையில் பாடசாலைக் கல்வியின் நோக்கம் பற்றியும் ஆசிரியர்களின் வகிபங்கு (role) குறித்தும் புதிய பார்வையும் சிந்தனையும் எழுந்துள்ளமையும் கண்கூடு. உலகியல் மாற்றங்களினுடான இன்றைய கல்விப் போக்கு ஆசிரியத்துவத்தின் மதிப்பார்ந்த நிலையைத் தாழ்வாக எடைபோடக் காரணமாகின்றதா எனப் பரிசீலிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இன்றைய உலகு முக்கியமான நான்கு அவத்தை நிலை களினுடாக மாற்றம் பெற்று வந்துள்ளது எனக் குறிப்பிடப்படு கின்றது. இந்நிலைகள் முறையே விவசாயயுகம், கைத்தொழில் யுகம், சமூகயுகம், இலத்திரனியல் யுகம் என அழைக்கப் படுகின்றன. விவசாயயுகத்தில் சனசமூக நிலையங்களாகவும் கைத்தொழில் யுகத்தில் தொழிற்சாலைகளாகவும் சமூக யுகத்தில் மருத்துவமனைகளாகவும் பாடசாலைகள் உருவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டன. இந்த உருவகங்களின் அடிப்படையில் விவசாய யுகத்தில் பொதுக் கலாசாரத்தையும் குடியுரிமையையும் முன்னேற்றுதலும் கைத்தொழில் யுகத்தில் குடியேற்றவாசிகளை கைத் தொழிற் சமுதாயத்துக்கான தொழிலாளர்களாகத் தயார் செய்தலும் சமூகயுகத்தில் எல்லாக் குழந்தைகளினது தேவைகளையும் நிறைவேற்றுவதற்கான சமூக சீர்திருத்தமும் பாடசாலைக் கல்வியின் நோக்கங்களாக இருந்தன. ஆனால் இன்றைய இலத்திரனியல் யுகமான தகவற் தொழில்நுட்ப யுகத்தில் கூட்டிணைந்த கற்போர் சமுதாயங்களாக அதாவது, ஒன்றிணைந்த அறிவார்ந்த சமுதாயங்களாக பாடசாலைகள் உருவகிக்கப்படுகின்றன. இவை புவிக்கோளத்துடன் இணைந்து கற்றலிலும் விருத்தியிலும் ஈடுபட வேண்டியுள்ளன. அதே வேளை எவ்வாறு கற்றுக் கொள்வதெனவும் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே இருப்பதை எவ்வாறு நேசிப்பதெனவும் கற்றுக் கொடுப்பதே பாடசாலைகளின் நோக்கமாகவும் கொள்ளப்படுகின்றது.

இன்றைய இலத்திரனியல் யுகத்தில் பாடசாலைகளுக்கான உருவகத்தையும் பாடசாலை நோக்கத்தையும் ஒட்டியதாகவே மாணவர்கள் குறித்த பார்வையும் ஆசிரியர்கள் குறித்த பார்வையும் மாற்றம் பெற்றுள்ளமையையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். விவசாய யுகத்தில் கருதப்பட்டது போல மாணவர்கள் சமூக மயமாக்கப்படவேண்டிய, ஒன்றுமே அறியாத தொடக்க நிலையாளர்கள் (neophytes) அல்லர். கைத்தொழில் யுகத்தில் கருதப்பட்டது போன்று தரப்படுத்தல், சோதித்தல், தரக்கட்டுப்பாடு என்பவற்றுக்கு உட்படுத்தப்படும் விளைபொருட்களாக மாற்றப்பட வேண்டிய மூலப்பொருட்கள் அல்லர்; சமூக யுகத்தில் கருதப்பட்டது போன்று சமூக கலாசாரத்தேவைகளின்பால் இழைக்கப்படும் சமூக அநீதிகளால் துயருற்றுக்காணப்படும் நிலையிலிருந்து பாதுகாப்பளிக்கப்படவேண்டிய காயமுறக் கூடியவர்களும் (vulnerable) அல்லள். இன்றைய இலத்திரனியல் யுகத்தில் அறிவியத்தைத் தேடிக் கண்டறிந்து அதனைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்பிக் கொள்வதோடு அறிவியத்தின் (body of knowledge) உற்பத்தியாளர்களாகவும் வாடிக்கையாளர்களாக வும் விளங்குபவர்கள் மாணவர்கள் ஆவர்.

மாணவர்கள் பற்றிய இச்சிந்தனை மாற்றத்துடன் இணைந்ததாய் ஆசிரியர்கள் குறித்த பார்வையும் இன்று மாற்றம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது விவசாயயுகத்தில் சேவைக்காக அழைக்கப்பட்ட புனிதமான தொழில் புரிபவரே ஆசிரியர்கள் என்று கொள்ளப்பட்டனர். கைத்தொழில் யுகத் தில், தரமான உற்பத்திப் பொருட்களின் /விளைபொருட்களின் உருவாக்கத்திலான மேற்பார்வையாளர்களே ஆசிரியர்கள் என்ற நிலைமை காணப்பட்டது. சமூகயுகத்தில், காயமுற்றவர் களுக்கான பராமரிப்பாளர்களாக விளங்க வேண்டியவர்களே ஆசிரியர்கள் என ஆசிரியர்களின் கடமைப்பொறுப்பு வகுக்கப் பட்டது. ஆனால் இக்கருத்துக்கள் யாவற்றிலிருந்தும் மாறு பட்ட வகிபாகம் ஆசிரியர்களுக்குரியதென இன்றைய இலத் திரனியல் யுகத்தில் வரையறுக்கப்படுகின்றது. மாணவர்களின் கல்விக்கான வசதி ஏற்பாட்டாளராகவும் (facilitator) பயிற்சி அளிப்பாளராகவும் (coach) ஆசிரியர்கள் விளங்கவேண்டும் என்ற புதிய வகிபாகம் ஆசிரியத்துவத்தின்பால் பலரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

"ஒன்றிணைந்த அறிவார்ந்த சமுதாயமே இன்றைய பாடசாலை" என்ற உருவகத்தை நாம் அங்கீகரிப்பின் , பாட சாலைகளின் அடித்தளமாக விளங்கவேண்டியது ஒன்றிணைவு கூட்டிணைவு (Collaboration) ஆகும். ஒரு சிலருக்கு மட்டும் வழங்கப்படுகின்ற அதிகாரமும் போட்டியும்போல அல்லாமல் பங்காண்மையும் பகிரப்படும் தலைமைத்துவமுமே (Partnership & Shared leadership) கூட்டிணைவின் பொருளாகும். கற்றுக் கொள்ளலே கூட்டிணைந்த அறிவார்ந்த சமுதாயத்தின் மைய நோக்காகும். மாணவர்கள் தமது கற்றல் (learning) பற்றி செயலூக்கத்துடன் செயல் விளக்கமளிப்பதைச் சுட்டுவது இது. அதாவது, அறிவியத்தைத் தெரிவித்தலே கற்பித்தல் (teaching astelling) என்பதையோ அறிவு அடைவின் ஒரே ஒரு சுட்டியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துப்பரீட்சைகளில் சித்திபெறலே அமையும் என்பதையோ இன்றைய பாடசாலைகள் முதன்மைப்படுத்த மாட்டா.

இன்றைய பாடசாலைகளின் மற்றுமொரு மையநோக்கு ஒன்றிணைந்த அறிவார்ந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல் ஆகும். கற்போரிடையேயும் கற்கும் முறைகளிடையேயும் வேறுபாடுகள் உண்டு-என்பதைப் பாராட்டி, வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity) காண விழைதலை இது சுட்டும். பாடசாலை என்பது பெரிய சமுதாயப் பின்னணியையும் குடித்தொகையையும் பிரதிபலிப்பதனால், அறிவார்ந்த கற்றற் சமுதாயத்தின் (learning Society) உறுப்பினர்கள் எல்லோருக்கும் பயனளிப்பதாயும் கற்றற் செயன்முறைக்கு வசதி அளிக்கும் வகையில் இச்சமுதாய உறுப்பினர்கள் யாவரும் பங்காளர் களாக விளங்குவதற்கு வேண்டிய மனப்பாங்கு, அறிவு, திறன்கள் என்பவற்றை மாணவர்கள் கற்றுக்கொள்ள உதவியளிப்பதாயும் ஒன்றிணைந்த அறிவார்ந்த சமுதாயம் விளங்கும்.

இந்நிலையில், இன்றைய இலத்திரனியல் யுகத்தில், மாணவர்கள் பற்றியதும் கற்றல் பற்றியதும் கற்பித்தல் பற்றியது மான எமது முன்னைய எடுகோள்களை மீளப்பார்வைக்குட் படுத்த வேண்டியது அவசியமாகும். மாணவர்களைப் பொறுத்தவரை, முன்னைய காலங்களில் நோக்கப்பட்டமை போன்று அவர்கள் வெற்றுப்பாத்திரங்களோ அல்லது வெற்றுக் கற்பலகைகளோ (empty vessels blank slates) அல்லர். கற்றல் என்பதும் வெறுமனே "சித்திரப்பாவை என அத்தக அடங்கி" ஆசிரியர் கூறுவதை அவ்வாறே ஏற்றுக் கொள்ளல் அன்று.

புதிய, மாற்றமுறும் உலகில் மாணவர்கள் அறிவியத்தை உற்பத்தி செய்பவர்களும் கட்டியெழுப்புபவர்களும் ஆவர். அவர்கள் தமக்குரிய கற்றல் நடையியலைக் (learning style) கொண்டவர்கள். தமக்கேயுரிய பாணியில் தமக்கேயுரிய நாட்டங்களுடன் கற்றலில் ஈடுபடுபவர்கள். கடமைப் பொறுப்பு அளிக்கப்படுகின்றபோது அவர்கள் அதனைச் சிரமேற்கொண்டு ஒருவருக்கொருவர் கற்றலில் பங்களிப்புச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யக்கூடியவர்களுமாவர். தகவல்களை வெறுமனே நுகர்வோராக மாத்திரமன்றி, அறிவியத்தை உருவாக்குபவர் களாகவும் கட்டியெழுப்புவர்களாகவும் அம்மாணவர்கள் விளங்கி, நாம் விரும்பும் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பு வதிலே எம்மோடு தோள் கொடுக்கக்கூடிய சிற்பிகளுமாவர் என்பதை நாம் விசுவாசமாக ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

இதேபோன்று, ஆசிரியர்கள் பற்றிய சிந்தனையிலும் இன்று மாற்றங்கள் அவசியம். ஆசிரியர்கள் எல்லோருமே இலட்சிய பூல்வமான புனிதமான சேவையாளர்கள் அல்லர். அவர்களுக்கும் தேவைகளும் மட்டுப்பாடுகளும் உண்டு. ஆசிரியர்கள் மதிக்கப்பட வேண்டியவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களும் ஆவர் என்பதோடு அறிவாற்றல் விருத்தி நோக்கியும் உடலியல்சார்; சமூகம் சார்; மனவெழுச்சிசார் நலம் நோக்கியும் அவர்கள் ஊக்கமளிக்கப்பட வேண்டியவர்களே. அதேவேளை, ஆசிரியர்கள் முதன்மையாக பரிசோதகர்களோ அல்லது பராமரிப்பாளர்களோ அல்லர். அவர்கள் கற்றலை வளப்படுத்தவேண்டியவர்கள். எனவே இன்றைய புதிய யுகத்தில் கற்பித்தல் என்பது வெறுமனே கூறுதல் அல்லது தெரிவித்தல் (telling) அன்று. உண்மையில், ஆராய்ந்தறிதல், வளம் திரட்டல், கண்டறியும் சந்தர்ப்பங்களையும் வினாக்களையும் மாணவருக்கு வழங்குதல் என அது பல்வேறு தொழிற் கூறுகளை உள்ளடக்கியது. மொத்தத்தில், கல்வி யூட்டல் என்பது இலத்தீன் மொழியில் பொருள் கொள்ளப் படுவதுபோல "முன்னோக்கிச் செலுத்துதல்" என்பதாகும்.

இப்புதிய சிந்தனைகளின் பின்னணியில், "இன்றைய ஆசிரியர்கள் வசதி ஏற்பாட்டாளர்களே" என்ற வாதம் ஆசிரியர் களின் மதிப்பார்ந்த நிலையையும் ஆசிரியத்துவத்தின் மேன்மையையும் தாழ்வுறச் செய்கின்றதோ என்ற ஐயப்பாடு பலரிடத்தில் தோன்றக் கூடும். ஆனால் ஆசிரியம் என்பது இன்று ஓர் உயர்தொழிலாக, வாண்மையாகக் (profession) கொள்ளப்படுகின்றது. ஒரு தொழில் உயர்தொழிலாக (வாண்மையாக) மதிக்கப்படுவதற்கு அத்தொழில் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்களின் நலனை முதன்மைப்படுத்துவதாகவும் அறிவார்ந்த நிலையில் தனது ஆற்றுகையை முன்னெடுப்பதாக வும் இருக்கவேண்டும். ஆராய்வுச் செயன்முறையூடாக மாணவர் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறை களைக் கண்டறிவதும் அவற்றைப் பிரயோகித்து அவற்றின் பலாபலன்களை மதிப்பீடு செய்வதும் இம் மதிப்பீட்டின் அடிப்படையில் கல்விச் செயற்பாடுகளை மீளமைப்பதும்கூட, ஆசிரியம் ஒரு வாண்மை என்ற நிலையில், ஆசிரியர்களின் கடமைப் பொறுப்புகள் ஆகின்றன.

ஆசிரியம் ஒரு வாண்மையாகக் கருதப்படும் நிலையில் இன்று ஆசிரியர்களுக்குப் புலமைசார்ந்த அதிகாரம் தரப் பட்டுள்ளது. எனவே, ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தமது செயலாற்றுகையின் தரத்துக்குப் (Quality of performance) பொறுப்புக்கூற வேண்டியவர்களாக உள்ளனர். அத்தோடு, கல்விக்குரிய முதலீடும் வளமும் நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ சமூகத்தாலேயே நிறைந்த எதிர்பார்ப்புகளுடன் வழங்கப்படுவன என்பதால் முழுச்சமூகத்துக்கும் பொறுப்புக் கூறல் அல்லது வகைகூறல் (accountability) என்பது ஆசிரியம் எதிர் நோக்கும் முக்கிய அறைகூவலாக உள்ளது. இப் பொறுப்பினை ஆசிரியர் ஒரு சுமையாகக் கருதாது ஆசிரியத் துவத்தின் மகத் துவம் பேணப்படுவதற்கெனத் தன்னை அர்ப்பணிக்க வேண்டும். இன்றைய புதிய கல்விப் போக்குகளுடன் இணைந்ததாய், பாடசாலைக் கல்வியி னூடான வரையறுத்த பாடவிதானத்துக்கும் மேலாக வாழ் நாட்கல்விக்கான தயார்ப்படுத்தலில் கற்பதற்குக் கற்றல் (learningto learn) எனும் கோட்பாட்டிற்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டிய பொறுப்பை ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த அறைகூவலை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் நிலையிலேயே “ஆசிரியம் ஒரு வாண்மை” என மதிக்கப்படுதல் அர்த்தம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய தலைமைத்துவத்தின் தேவையும் அதன் பின்னணியும்

உலகு இயங்கிக் கொண்டிருப்பது; மாற்றம் காண்பது, உலகியல் மாற்றங்களுக்கான பிரதான கருவியாகவும் இம்மாற்றங்களை விசைப்படுத்தும் கருவியாகவும் கல்வி விளங்குகின்றது. கல்வியினால் உலகு மாற்றம் காண்கின்ற போது, அம் மாற்றங்களை ஒட்டியதாக, கல்வியின் நோக்கமும் போக்கும் உள்ளடக்கமும் முறையியல்களும் மாறவேண்டும். பாடசாலைக் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தும் பிரதான முகவர்கள் ஆசிரியர்களே. மாற்றம் காணும் உலகில் தமது வகிபாகங்கள் குறித்து ஆசிரியர் களிடையே தெளிவு அவசியம்.

இன்றைய பாடசாலைகளில் நிலவும் பல குறைபாடுகள் ஆசிரிய தலைமைத்துவத்தினாலேயே தீர்க்கப்படமுடியுமென நம்பப்படுகிறது. மாணவர் கற்றலுக்காக தமது வகுப்பறைகளில் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்கின்ற ஆசிரியர்களே இன்றைய பாடசாலைகளின் தேவை ஆகும். ஆனாலும் ஆசிரிய தலைமைத்துவம் என்பது வகுப்பறையோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. அதற்கும் அப்பால், பாடசாலைக் கும் சமுதாயத் திற்கும் தொழில் வாண்மைக்கும் அது விரிவுபடுத்தப்பட வேண்டும். ஆசிரிய வாண்மைத்துவம் பற்றிய புதிய கருத்துகள் உருவாகியுள்ள நிலையில், ஆசிரியத் தொழில் குறித்த பழைய சிந்தனைகள் இன்று மாற்றம் பெற்றுள்ளன. இப்புதிய சிந்தனைகள் முன்னெடுக்கப்படுவதற்கு ஆசிரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவம் முக்கிய பங்களிப்புச் செய்யவல்லது.

### ஆசிரிய மாற்றமும் கல்வி விருத்தியும்

ஆசிரிய மாற்றம் என்பது இன்று பல்வேறு கல்விசார் ஆய்வரங்குகளின் முக்கிய கருப்பொருளாக விளங்குகின்றது. பொதுவாகவே, கல்வி பற்றியோ, கல்வி நடைமுறைகள் பற்றியோ கருத்துச் சொல்வதற்கு எவரும் தயங்குவதில்லை. கல்வியின் வெகு சனப் பண்பானது, கல்வி குறித்து எவருமே கருத் துரைக்கலாம் என்ற தைரியத்தை வழங்கிவிடு கின்றது.

இந்நிலைமை குறித்து ஹார்கிறீவ்ஸ் (Hargreaves) எனும் கல்வியியலாளர் பின்வருமாறு தெரிவிக்கிறார் :

"ஆசிரியர்கள் மாற்றமுற வேண்டும் என மக்கள் எப்போதும் விரும்புகிறார்கள். அண்மைக் காலங்களில் இக்குரல் அதிகமாக ஒலிக்கிறது. இன்றைய கோளமயமாக்கற் போட்டி நிலைகளில், எங்கள் நாடுகளில் எமது எதிர்காலச் சந்ததியினரை நாம் எவ்வாறு உருவாக்கப்போகின்றோம் என்ற அச்ச உணர்வு எம்மிடம் இன்று உள்ளது. பொருளாதாரம் குறித்து ஒரு சிலர் அதிகமாகப் பேசுகின்ற போதிலும், அரசியல்வாதிகளும் ஊடகவியலாளர்களும் பொதுமக்களும் என எல்லோரும் கல்வி பற்றி ஏதாவது சொல்ல விரும்பு கின்றார்கள்..."

ஹார்கிறீவ்ஸ் என்பாரின் இக்கூற்று ஆழ்ந்து நோக்கப் பட வேண்டியது. ஒரு நாட்டின் அல்லது சமு தாயத்தின் கல்வி விருத்தி என்பது, எழுந்தமானமாக, ஒரு நோக்கத்திற்காகத் திடீரென மேற்கொள்ளப்படு கின்ற ஒரு நடவடிக்கை (ad hoc activity) அன்று. அது, நன்கு திட்டமிட்ட முறையிலே, நேற்றைய அனுபவங்களின் அடிப்படையில், இன்றைய நடைமுறை களைப் பரிசீலனை செய்து, நாளைய உலகுக்கான தூர நோக்குடன் முன்னெடுக்கப்படவேண்டிய ஒன்று. இதுவே எதிர் காலவியல் நோக்காகும்.

கல்வியே ஒரு நாட்டின் சகல துறைகளிலும் செல் வாக்குச் செலுத்துகின்றது. ஒரு நாட்டின் தலா வருமானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுபூர்வமான, திறனாற்றல் வாய்ந்த மனிதவலுவில் தங்கியுள்ளது. மனிதவள விருத்திக்கான அவசியத்தை உணர்ந்து நாடுகள் பலவும் தரமான கல்வியைத் தமது நாட்டு மக்கள் அனை வருக்கும் வழங்க முன்வந்துள்ளன. கல்வியே ஒருவரில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவது. ஒருவர் ஒன்றைக் கற்றுக்கொண்டமையின் வெளிப்பாடாக, அறிவிலும் திறனிலும் மனப்பாங்கிலும் அவர் புலப்படுத்துகின்ற, ஓரளவுக்கு நிலையானதும் தொடர்ச்சியானதுமான நடத்தை மாற்றம் அமையும். அனுபவங்களும் உயர் மானுடப் பண்புகளும் சந்ததி சந்ததியாகக் கடத்தப்பட்டு வருகின்றன.

## ஆசிரியர்களுக்கு வலுவூட்டல்

ஆசிரியத் தொழில் இன்று ஓர் உயர் தொழிலாக, வாண்மைத் தொழிலாக (Profession) பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. பொறியியல், மருத்துவம், சட்டம் என்பன போன்று ஆசிரியமும் ஓர் உயர் தொழிலாகக் கொள்ளப்படுதல் ஆசிரியத் தொழிலுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும். ஆனாலும் ஆசிரியத் தொழில் ஒரு வாண்மையாகக் கொள்ளப் படும் அளவுக்கு ஆசிரியர்கள் இன்று நன்கு மதிக்கப்படுவதில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டு எம்மிடையே உண்டு. இக்குற்றச்சாட்டிலிருந்து விடுபடவேண்டுமாயின், ஆசிரியர்கள் உயர்தொழில் தகைமையாளர்களாக விளங்கும் வகையில் அவர்களுக்கு வலுவூட்ட வேண்டியது அவசியமாகும். இவ்வலுவூட்டலுக்கான நிகழ்ச்சித் திட்டம் வாண்மையின் பண்புகளைத் தெளிவுபடுத்துவதாகவும் வலியுறுத்துவதாகவும் வாண்மையாளர்களாக விருத்தி அடைவதற்கான பயிற்சிகளையும் திறன்களையும் வழங்குவதாகவும் இருக்க வேண்டும்.

## வாண்மையின் பண்புகள்

உயர்தர பயிற்சியையும் உயர் உளத்தொழிற்பாடுகளையும் வேண்டிநிற்கின்ற தொழிலே வாண்மையாகும். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலானது வாண்மைத் தொழிலாகக் கொள்ளப்படுவதற்கு குறிப்பான இரு பண்புகளை அது கொண்டிருக்க வேண்டும் என்பர் :

1) அறிவை அடிப்படையாகக் கொண்டிருத்தல் (knowledge - based)
2) வாடிக்கையாளரை அல்லது சேவை பெறுநரை மையப்படுத்தியதாக இருத்தல் (client - centred)

இவ்விரு பண்புகளுடன் பின்வரும் பண்புகளும் வாண்மைத் தொழிலின் பண்புகளாகக் கொள்ளப்படுகின்றன :

- குறித்த தொழிற்றுறை பற்றிக் கற்பதற்கான வாய்ப்புகள் இருத்தல்.
- குறித்த வாண்மைக்கென தனித்துவமான பயிற்சி அளித்தல் காணப்படல்.
- துறைசார் மொழிப் பிரயோகம் காணப்படல்.
- குறித்த வாண்மைத்தொழிலில் ஈடுபடுத்தப் படுவதற்குப் பொருத்தமான தகைமைச்சான்றிதழைக் கொண்டிருத்தல்.
- அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை இற்றைப் படுத்துவதற்கான கல்விநெறிகள் காணப்படல்.
- வாண்மைத்துவக் கழகம் ஒன்றில் உறுப்புரிமை பெறக்கூடியதாக இருத்தல்.

**ஆசிரிய வாண்மையாளர் பண்புகள் :**

ஆசிரிய வாண்மையாளர்களிடம் எதிர் பார்க்கப்படும் முக்கியமான பண்புக்கூறுகள் தேர்ச்சி, செயலாற்றுகை, நடத்தை என்பனவாகும். தேர்ச்சி என்பது, பல்வேறு பிரச்சினை களை எதிர்கொள்ளும் தயார்நிலை, முழுமையான பாடப்புல அறிவு, வினைத்திறன் மிக்க கற்பித்தல் நுட்பங்களைப் பிரயோகித்தல் போன்றவற்றை உள்ளடக்கும். தேர்ச்சிகளின் வெளிப்பாடாக பணியில் விசேடத்துவம், பொருத்தமான நுட்பமுறைகள், தொழில்நுட்பம் பற்றிய அறிவு, வாண்மைத் துவ சேவையின் ஒழுக்கக் கோவைக்கான நடத்தைசார் அமைப்பு, சேவையைப் பெறுவோரின் நம்பிக்கையைச் சிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமல் செயற்படல், தொழில்சார் குழுக்களின் ஒத்துழைப் புடன் செயற்படல் போன்றவை வாண்மையாளர் ஒருவரிடம் காணப்படவேண்டும்.

ஆசிரிய வாண்மையில் செயலாற்றுகை என்பது கற்பிக்கும் ஆற்றலைக் குறிப்பதாகும். மாணவர் பற்றிய உளவியல்சார் அறிவு, பாடப்புல அறிவு, முறையியல் பற்றிய அறிவு, மாணவ மதிப்பீடு செய்யும் ஆற்றல், சுய மதிப்பீடு செய்யும் ஆற்றல் போன்றவற்றில் கற்பிக்கும் ஆற்றல் தங்கி யுள்ளது.

தொழில் வாண்மையில் நடத்தை என்பது வாண்மை யாளரின் தோற்றம், நடை, உடை, குரல் வளம், தொனி, கற்பித்தல் பாணி போன்றவற்றைக் குறிப்பதாகும். ஆசிரிய வாண்மையாளர் இந்நடத்தைகளில் கவனம் செலுத்த வேண்டியது அவசிய மாகும்.

இவ்வகையில், ஆசிரியத்தொழில் ஒரு வாண்மைத்துவத் தொழிலாகக் கொள்ளப்படும் நிலையில் வாண்மைத்துவப் பயிற்சியானது இரு நிலைகளில் நோக்கப்படவேண்டும். அதாவது, தொடக்க நிலையில் முன்சேவைப் பயிற்சியாக வழங்கப்படும் வாண்மைத்துவப் பயிற்சி, பணியிடைப் பயிற்சியாக வழங்கப்படும் தொடருறு வாண்மைத்துவப் பயிற்சி ஆகிய இரண்டுமே ஆசிரியர் கல்விக்குரிய இரு நிலைகளாகும்.

### அத்தியாவசிய வாண்மைத்துவத் தராதரங்கள்

ஆசிரிய வாண்மைத் தொழிலில் அத்தியாவசிய வாண்மைத் தராதரங்கள் பேணப்படுவதை உறுதிசெய்து கொள்வதற்காக சில கல்வி அதிகார பீடங்கள் நெறிமுறைகளை விருத்தி செய்துள்ளன. அவ்வாறான வாண்மைத் தராதரங் களாகக் கொள்ளப் படத்தக்கவை :

1. ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடங்களில் போதிய அறிவுடையவர்களாக இருக்க வேண்டும்.
2. பிள்ளைகளின் வளர்ச்சி பற்றியும் விருத்தி பற்றியும் நன்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து வைத்திருக்க வேண்டும்.

3. பிள்ளைகள் வெவ்வேறு முறைகளில் கற்றுக் கொள் கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.
4. பிள்ளைகளுக்கு எவ்வாறு கற்பிப்பது என அறிந்திருக்க வேண்டும்.
5. வகுப்பறையை எவ்வாறு முகாமை செய்ய வேண்டு மென அறிந்திருக்க வேண்டும்.
6. சிறந்த தொடர்பாடல் மேற்கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும்.
7. வெவ்வேறு பாடங்களைத் திட்டமிடக் கூடியவராக இருக்க வேண்டும்.
8. மாணவர் முன்னேற்றத்தைச் சோதித்தறியக் கூடியவராக இருக்க வேண்டும்.
9. தம்மைத்தாமே சுயமதிப்பீடு செய்யக் கூடியவராக இருக்க வேண்டும்.
10. பிற ஆசிரியர்களுடனும் சமூகத்துடனும் ஊடாட்டம் உள்ளவராக இருக்க வேண்டும்.

**ஆசிரிய வகிபாகமும் கட்டளைக் கோள் மாற்றமும்**

இன்று பாடசாலைக் கல்வியில் கட்டளைக் கோள் மாற்றம் ஒன்று (paradigm shift) நிகழவேண்டும் என எதிர் பார்க்கப்படுவதாகக் குறிப்பிடுவர். இவ்வகையில் பாடசாலைக் கலைத் திட்டமானது தெரிந்தவற்றைப் பேணும் நிலையை விடுத்து தெரிந்தவற்றை மீள் நோக்குச் செய்யும் வகையிலும், முன்னரே தீர்மானிக்கப்பட்டவற்றைக் கற்பதை விடுத்து தீர்மானிக்கப்படாதவற்றைத் தேடும் வகையிலும், நிகழ் காலத்துக்கானவற்றை கட்டி யெழுப்புவதை விடுத்து எதிர் காலத்துக்குத் தேவையானவற்றைக் கட்டியெப்பும் வகையிலும் மாற்றம் பெற வேண்டும். இதேபோல், வந்தபின் செயற்படும் அணுகு முறையைத் (Reactive Approach) தவிர்த்து, வருமுன் செயற் படும் அணுகுமுறையைக் (Proactive Approach) கடைப் பிடிப்பதும் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி களுக்குப் பதிலாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

254470



விரும்பத்தகு கற்றல் தேர்ச்சிகளை மாணவரிடையே விருத்தி செய்தலும் இக் கட்டளைக் கோள் மாற்றத்தின் வழியேயான சிந்தனைகளே ஆகும்.

இதனாலேதான் ஆசிரியர் வகிபாகம் கூட, முன்னைய கடத்தும் வகிபாகம், பரிமாற்றம் செய்யும் வகிபாகம் என்பவற்றுக்கும் அப்பால், நிலைமாற்றம் (Transformation) செய்யும் வகிபாகமாக மாற்றம் பெறவேண்டும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது. அதாவது, ஆசிரியர் ஒருவர் அறிவை வழங்குநர், வசதி ஏற்பாட்டாளர் என்ற நிலைகளுக்கும் அப்பால் சிறந்த வளவாளராகவும் விளங்கவேண்டும்.

**பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி (SBTD)**

உலகியல் மாற்றங்கள் பற்றிய அறிநிலை யுடன் வழங்கப்படும் ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவப் பயிற்சியில், தொடருறு பயிற்சியானது தளமட்டப் பயிற்சியாக (Site - based training) அமைதலே விரும்பத்தக்கது. இதற்காக, இன்று, பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத் திட்டத்தின் குறிக் கோள்கள் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளன. அவையாவன :

மாணவர்களதும் ஆசிரியர்களதும் தனித்தன்மை வாய்ந்த தேவைகளை நிறை வேற்றல்.

பாடசாலையினுள் வாண்மைத்துவக் கலாசாரத்தை உருவாக்குதல்.

பாடசாலை வளங்களைப் பயனுறுதி உள்ள வகையில் பயன்படுத்துதல்.

பாடசாலையிலுள்ள எல்லோரிடையேயும் புரிந் துணர்வை ஏற்படுத்துதல்.

பாடசாலையின் கொள்கைகளுக்கும் முன்னுரிமை களுக்கும் ஆதரவளித்தல்.

பாடசாலை மட்டத்தில், தேசிய மட்டக் கொள்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் கலைத் திட்டத்தையும் நடைமுறைப் படுத்தல்.

தொடர்ச்சியான ஆதரவு வழங்குதல்.

இக்குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் ஆசிரியர்களுக் குள்ள சவால்களையும் நோக்க வேண்டியது அவசியமாகும்.

## இருபத்தோராம் நூற்றாண்டில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் ஆசிரியர்கள் ஆற்ற வேண்டிய பல பணிகள் உள்ளன. விரைவான மாற்றம் கண்டு கொண்டிருக்கும் இவ்வுலகில், உலகோடு ஒட்ட ஒழுகுவதற்கு மாணவர்களில் வேண்டிய மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய பிரதான முகவர்கள் ஆசிரியர்களே. ஆனால், இன்று ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடசாலைகள், அன்று அவர்கள் படித்த பாடசாலைகள் போல இல்லை.

இன்று பாடசாலைகளில் காணப்படும் மூன்று முக்கிய மான யதார்த்த நிலைமைகள் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களாகும். அவையாவன :

1. தராதரங்களுக்கும் வகை கூறுதலுக்குமான சமூக அழுத்தம்
2. அதிகரித்த வகையிலான மாணவர் பல்வகைமை
3. தொழில்நுட்பத்திலும் கோளமயமாக்கலிலும் ஏற்பட்டுள்ள அடிப்படை மாற்றங்கள்

இன்று எமது பெற்றோர் எதிர்பார்ப்பது தராதரங்களை அடிப்படையாகக் கொண்ட கல்வியே ஆகும். எல்லோருக்கும் கல்வி என்ற இலக்கின் அடுத்த கட்டமாக, எல்லோருக்கும் தராதரமான கல்வி என்பதே இன்றைய இலக்காக உள்ளது. இந்த இலக்கு எய்தப்படக்கூடியதுதான் என்பதனை நிறுவும் வகையில், இது தொடர்பாக பிரதான நம்பிக்கைகள் சில கட்டியெழுப்பப்பட்டுள்ளன. அவையாவன :

1. கற்றல் - கற்பித்தற் செயன்முறையை வழிப்படுத்து வதற்காக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தராதரங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி உருவாக்கப் படலாம்.

2. இத்தராதரங்களை எய்துவதற்கான உயர் எதிர்பார்ப்பு களை பிள்ளையிடம் உருவாக்கலாம்.

3. சான்று - அடிப்படையிலான நடைமுறைகள் மூலம் ஆசிரியர்கள் உயர் தராதரத்தை அடையலாம்.

4. மாணவர் கற்றலுக்குப் பொறுப்பாக ஆசிரியர்கள் விளங்கலாம்.

அடுத்து, வகுப்பறைகளில் அதிகரித்த அளவில் மாணவர்கள் பல்வகைமை (student diversity) காணப்படுவதும் ஆசிரியர்கள் கவனத்திற் கொள்ள வேண்டிய ஒன்றாகும். இவ்வாறு அதிகரித்த அளவில் மாணவர் பல்வகைமை காணப்படுதல் ஆசிரியர் களுக்கு நன்மை அளிக்கக்கூடிய பல உட்கிடைகளைக் கொண்டுள்ளது.

வகுப்பிலே பல்வகை ஆற்றல்களைக் கொண்ட, தனியாள் வேறுபாடுகளுள்ள மாணவர்கள் காணப்படுதல் பல்வேறுபட்ட போதனை முறைகளை ஆசிரியர்கள் கையாள்வ தற்கு வழிவகுக்கின்றது. சராசரி மாணவர்களுக்கான கற்பித்தல் முறையிலமைந்த, வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களுக்கு மான கற்பித்தல் இன்று வேண்டப்படுவதன்று. தனியாள் வேறுபாடுகளைக் கவனத்திற் கொண்டு, அந்த மாணவ திறமைகளுக்கு ஏற்ற வகையில் கற்பித்தல் மேற்கொள்வதற்கு திட்டமிட வேண்டியது ஆசிரியர் கடமைகளில் ஒன்றாகும்.

அத்தோடு, இயலாமைகளுடன் கூடிய மாணவர்களை யும் உட்படுத்திக் கற்பிக்க வேண்டும் என்பது இன்று அப் பிள்ளைகளினதும் பெற்றோர்களினதும் பராமரிப்பாளர் களினதும் குரலாக ஒலிக்கின்றது. அப்பிள்ளைகளை இயலாமை உள்ளவர் களாக கருதிப் புறம்தள்ளாமல் அவர்களை மாற்று வலுவுள்ளவர்களாகக் கொண்டு சாதாரண வகுப்பறை யில் உள்ளடக்க வேண்டும் என்ற சிந்தனை இன்று ஆழ வேர் கொண்டுள்ளதோடு, அதற்கான நடைமுறைகளும் திட்டமிடப் படுகின்றன.

அதேவேளை, தனியாள் வேறுபாடுகளுள்ள மாணவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் அடைவுகளிலுள்ள இடைவெளிகளை இல்லாமல் செய்வதற்கு பாடசாலை மட்டுமே தனியாக முயற்சிப்பது போதாததாகும். இதனால் பாடசாலைக்கு வெளியேயான மாணவ வாழ்க்கையையும் வளப்படுத்தக் கூடியதாக, ஆசிரியர்கள் கல்வியாளர்களுடனும் வேறு பலருடனும் இணைந்து தொழிற்பட வேண்டியுள்ளனர். புலமை சார்ந்த, அறிகை சார்ந்த விடயங்களில் மாத்திரம் கவனம் கொள்ளாமல், பாடசாலைகளுக்கும் குடும்பங்களுக்கும் உள்ளூர் சமுதாயங்களுக்குமிடையே வலிமையான இடைத்தொடர்புகளைப் பேணுவதற்கும் இணைந்து தொழிற்படுவதற்குமான கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டியதும் இன்று அவசியமாகி உள்ளது. இவற்றை எல்லாம் நோக்கும்போது மாணவர்களின் பல்வகைமையானது கல்வியாளர்களுக்கான ஒரு சவால் மாத்திரமன்று; அது ஒரு சந்தர்ப்பமும் ஆகும். மூன்றாவது நிலைமையானது தொழில் நுட்பத்திலும் கோளமயமாக்கலிலும் ஏற்பட்டுள்ள அடிப்படையான மாற்றங்கள் குறித்த நிலைமையாகும். இந்நிலைமையை தோமஸ் ஃபிரீட்மன் (Thomas freedman) என்பார் "ஒற்றைப் படையான உலகில் கற்பித்தல்" (Teaching in flat world) எனக் குறிப்பிடுகின்றார்.

### ஒற்றைப்படை உலகில் கற்பித்தல்

தொழில்நுட்பவியலும் பூகோளப் பொருளியலும் எவ்வாறு உலகை ஒற்றைப் படையாக்கி உள்ளன என்பதையும் எவ்வாறு எமது வாழ்க்கைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன என்பதையும் விபரிக்கும் வகையில் தோமஸ் ஃபிரீட்மன் தமது கருத்துகளை முன்வைத்துள்ளார். ஒற்றைப் படை உலகில் கற்பித்தல் என்பது இவரது சிந்தனையின் முக்கிய கருப்பொருளாகும். இச்சிந்தனை தொடர்பான பிரதான அம்சங்களைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1. பூகோளமானது இன்று சுருங்கி வருவதோடு, போட்டி நிலையும் அதிகரித்து வருகிறது.
2. உலகின் எப்பாகத்திலுமுள்ள தகவல்களை யும் தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளைத் தொழில் நுட்பவியல் முன்னேற்றங்கள் ஏற்படுத்தியிருப்பதோடு, தொடர்பாடலை உடனடியாக மேற்கொள்ளக் கூடியதாகவும் மாற்றியுள்ளன.

3. துடிப்பான, விரைவூக்கமுடைய எவரும் உலகின் எப் பாகத்தில் உள்ளவர்க்கும் இணையத் தளத்தினூடாக சேவை களையும் உற்பத்திப் பொருட்களையும் வழங்கக் கூடியதாக உள்ளது.

4. ஒற்றைப்படை உலகில் கற்றல் என்பது இலகுவான தாகும். அதேவேளை, கற்றல் சிக்கலாகியுள்ளது எனவும் குறிப்பிடலாம். ஏனெனில் ஒரு குறித்த விடயம் தொடர்பாகப் பெருமளவு தகவல்களைப் பெறக்கூடியதாக உள்ளதெனினும் இப்பெருந்தொகையான தகவல்களிலிருந்து வேண்டிய வற்றைத் தெரிவுசெய்தல் சிக்கலானதாகும்.

5. இன்று இணையத்தளத்தில் எந்த விடயத்தையும் கண்டறிந்து கொள்ளமுடியும். ஆயினும், பரந்த தகவல்களி லிருந்து வேண்டியவற்றைத் தெரிந்தெடுத்துக் கொள்வதும் அவ்வாறு தெரிந்தெடுத்துக் கொண்டவற்றின் தரம், துல்லியம், நம்பகம் என்பவற்றைத் தீர்மானிப்பதும் பிரச்சினைக்குரியன வாகும்.

6. தொடர்பாடல் ஊடகங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற் றங்கள் மாணவர்களை ஈர்த்து கற்றலில் ஈடுபாடு கொள்ளலை அதிகரிக்கச் செய்துள்ளன. ஆயினும், இம் முன்னேற்றங்கள் காரணமாக, கற்றலுக்கான மரபார்ந்த அணுகு முறைகளி லமைந்த கற்பித்தலில் நாட்டம் குறைந்தவராக, அமைதி குன்றியும் மாணவர்கள் வகுப்பறையில் காணப்படு கின்றனர்.

7. அண்மைக் காலங்களில் சர்வதேச ரீதியான ஆய்வுகள் மூலமும் சோதனைகள் மூலமும் உலகின் சிறந்த பாடசாலை முறைமைகளை இனங்காணக்கூடியதாக இருப்பதோடு, அவற்றை ஒப்பிடக்கூடியதாகவும் உள்ளது. இந்த இருபத் தோராம் நூற்றாண்டிலுள்ள மாணவர்களுக்கு கல்வி ஊட்டுதலின் பிரச்சினைகளையும் சாத்தியப்பாடுகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆய்வுகள் முதன்மைப்படுத்துகின்றன.

8. இந்த ஒப்பீடுகளில் அதி முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குவன ஆசிரிய விளைதிறனுக்கும் ஆசிரிய தலைமைத் துவத்துக்கும் வழங்கப்படும் முதன்மையும் தொடர்ச்சியான கற்றலினூடாக இவை எவ்வாறு விருத்தி செய்யப்படலாம் என்ற கரிசனையும் ஆகும்.

**கற்றற் சமுதாயமாகப் பாடசாலை**

சர்வதேச ரீதியான ஆய்வுகளினூடாக "ஆசிரிய விளை திறனும் தலைமைத்துவமும்" எனும் கருப்பொருள் குறித்த ஒப்பீடு முதன்மை பெற்றுள்ள நிலையில், மாணவ கற்றலுக்கான கற்பித்தல் அல்லது போதனை என்பது மூன்று முக்கியமான இலக்கு களின் அடிப்படையில் நோக்கப்படுகின்றது. அந்த இலக்குகளாவன :

1. தராதரத்தை அடிப்படையாகக் கொண்ட சூழலில் கற்பித்தல்
2. ஆசிரிய விருத்தியை கவனத்திற் கொள்ளல்
3. ஆசிரிய தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்

இப்பின்னணியில் நோக்கும்போது, இன்றைய பாட சாலைகளில் கற்பித்தல் என்பது சிக்கலானதாகவும் சவால் மிக்க தாகவும் மாறியுள்ளது. இந்நிலையில் ஒவ்வொரு பாட சாலையையும் கற்றற் சமுதாயமாக மாற்றவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். இன்று பாடசாலைக்கான புதிய உருவகமே கூட்டிணைந்த கற்கும் சமுதாயம் (a collaborative learning community) என்பதுதான்.

இக் கற்றற் சமுதாயமானது எப்போதும் ஆசிரிய கற்றலுக்கு (teacher learning) ஆதரவளிப்பதாக இருக்கவேண்டும். இவ்வகையில் பல்வேறு உபாயங்களும் அணுகுமுறைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். சகபாடித் தரிசிப்பு (peer visitation) என்பது இவ்வகை உபாயங்களுள் ஒன்றாகும். ஆசிரியர் ஒருவர் தன்னுடன் கற்பிக்கும் சக ஆசிரியர் ஒருவரின் அழைப்பின்பேரில் அவரின் கற்பித்தலை அவதானித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியமான கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளலே சக பாடித் தரிசிப்பு ஆகும். இதேபோல, ஆசிரியர்கள் தம்மிடையே கற்றல் வட்டங்களை (study groups) உருவாக்கி, பல்வேறு பிரச்சினைகளுக்குரிய விடயங்களைக் கலந்துரையாடி, தீர்வு களைக் கண்டறிவது மற்றுமோர் அணுகு முறையாகும். அதே வேளை, கற்றல் - கற்பித்தலுக்கான புதிய உபாயங்களை இனங் காண்பதும் அவற்றை அறிமுகம் செய்து கலந்துரையாடுவதும் கூட ஆசிரிய கற்றலுக்கான அணுகுமுறையே ஆகும். அத்தோடு, ஆசிரிய அமர்வுகளை ஏற்படுத்தி சிந்தனைத் தெறிப்பு உரையாடல்களை (Reflective Dialogues) மேற்கொள்வ தும் கூட, ஆசிரிய கற்றலை வளப்படுத்தும்.

## ஆசிரிய தலைமைத்துவம்

மாணவர் கற்றலை மேம்படுத்துவதற்காக, ஆசிரிய கற்றல் முதன்மைப்படுத்தப்படுகின்ற நிலையில், ஆசிரிய வாண்மை விருத்தியின் பிரதான அம்சமாகக் கொள்ளப்படுவது ஆசிரிய தலைமைத் துவம் (Teacher Leadership) ஆகும். இது புதிய விடயம் அன்று. எனினும் பின்வரும் காரணங்களுக்காக இது இன்று அழுத்தம் பெறுகின்றது.

1. கடந்த மூன்று தசாப்தங்களில் உலகு இணைப்புடைய தாக மாறியுள்ள நிலைமை யில் வகுப்பறைகள் பல்வகைத் தன்மையுள்ளவையாக மாறியுள்ளன. ஒவ்வொரு பிள்ளையும் கற்கக் கூடியது, சிறந்த தராதரத்தைப் பெறக்கூடியது என்ற எடு கோளின் அடிப்படை யில், புத்தாக்கமுள்ள நடைமுறைகளை ஆரம்பிப்பதற்குப் பாடசாலைகளில் ஆசிரிய தலைமைத்துவம் அவசியமாகின்றது.

2. பாடசாலைகளில் புதிய நடைமுறைகளை மேற் கொள்வதற்கு அதிபரின் தலைமைத் துவம் மாத்திரம் போதிய தன்று. பாடசாலைச் செயற்பாடுகள் பல்வேறு கூறு களையும் அம்சங்களையும் உள்ளடக்கியவை. இவை ஒவ்வொன்றிலும் அதிபரின் தலைமைத்து வத்தோடு ஆசிரிய தலைமைத்துவமும் இணைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆசிரிய வாண்மைத்துவம் பற்றிய புதிய சிந்தனைகள் முன்னெடுக்கப்படுவதற்கு ஆசிரிய தலைமைத்துவம் முக்கிய பங்களிப்புச் செய்யவல்லது.

4. ஆசிரிய தலைமைத்துவம் பற்றிய வெவ்வேறு கண்ணோட்டங்களும் பாதைகளும் உருவாகி இன்று வளர்ந்து வருகின்றன.

5. இன்று முறைசார்ந்த தலைமைத்துவ வகிபாகங்களை ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில், வள நிபுணர், போதனா நிபுணர், கலைத்திட்ட நிபுணர், ஆளணி விருத்தியாளர், வழிகாட்டல் நிபுணர் என விரி யும் பல்வேறு வகிபாகங்களையும் அவர்கள் வகிக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

## ஆசிரிய தலைமைத்துவத்தின் பண்புக்கூறுகளும் திறன்களும்

ஆசிரிய தலைமைத்துவம் என்பது, அதன் அர்த்தம் சரியாக விளங்கிக்கொள்ளப்படாத நிலையில் பிரச்சினைக்குரியதாகத் தோன்றக் கூடும். ஆனால் விளைதிறன் மிக்க ஆசிரிய தலைவர்கள் ஆசிரிய தலைமைத்துவத்துக்குரிய பண்புக் கூறுகளையும் திறன்களையும் கொண்டிருப்பர்.

இப் பண்புக் கூறுகளாகக் கொள்ளப்படக் கூடியவை :

1. மாணவ கற்றலுக்காகத் தம்மை அர்ப்பணித்தல்
2. திறந்த மனதுடன் பிறரின் கருத்துகளுக்கு மதிப்பளித்தல்
3. எதிலும் நலம் காண்பவராகவும் உற்சாகமுள்ளவராகவும் விளங்குதல்
4. தமக்காகவும் பிறருக்காகவும் உயர் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருத்தல்
5. ஆக்கத்திறனுள்ளவராகவும் நெகிழ்ச்சித் தன்மையுடையவராகவும் இருத்தல்
6. ஒன்றைச் செய்து முடிக்கமுடியும் என்பதில் விடாப்பிடியாக இருத்தல்
7. கடுமையாக உழைப்பதற்கு விருப்பமுடையவராக இருத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய தலைமைத்துவத்துக்கான திறன்களாகக் கொள்ளப் படக் கூடியவை :

1. தீர்மானம் மேற்கொள்வதற்கு தரவுகளையும் சான்றுகளையும் பயன்படுத்தக் கூடியவராக இருத்தல்.
2. ஒன்றை ஏற்றுக்கொண்டு தொடங்குவதில் தன் முனைப்பு உள்ளவராக இருத்தல்.
3. ஒரு பொதுநோக்கத்தின் வழியே பலரையும் திசைப் படுத்தி வழிகாட்டக் கூடியவராக இருத்தல்.
4. பொதுவான இலக்குகளை எடுத்துக்கூறி, ஒன்றாகப் பணி புரியும் சக ஆசிரியர்களையும் தூண்டக் கூடியவராகவும் அப்பொதுஇலக்குகளை நோக்கிய கருமங்களில் இணையச் செய்யக் கூடியவராகவும் இருத்தல்.
5. சிறந்த கருத்துக்களைத் தேடுபவராகவும் வளங்களை இனங்காணக் கூடியவராகவும் செயல் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியவராகவும் இருத்தல்.
6. முன்னேற்றத்தைக் கண்காணித்து, பிறரின் அர்ப் பணிப்பைத் தொடர்ந்து பேணக் கூடியவராக இருத்தல்.
7. சிறந்த ஆளிடைத் திறன்களையும் குழு நிலைக்கான திறன்களையும் கொண்டிருத்தல்.

## ஆசிரிய தலைமைத்துவம் எதிர்கொள்ளும் விவகாரங்களும் சவால்களும்

மரபார்ந்த ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட பாடசாலைகள் ஆசிரிய தலைமைத்துவத்தை முற்றாக நடைமுறைப் படுத்துவதில் தடைகளை உருவாக்கியுள்ளன. இத்தடைகள் உருவாக்கியுள்ள விவகாரங்களாகக் கொள்ளத்தக்கவற்றுள் முக்கியமானவை வகி பாகம் பற்றிய குழப்பம், ஆசிரியர்களிடமிருந்தான எதிர்ப்புணர்வு, அதிபரின் ஒத்துழைப்பின்மை என்பனவாகும்.

முதலாவதாக, ஆசிரிய தலைமைத்துவத்தின் வகிபாகங்கள் நன்றாக வரையறை செய்யப்படாத நிலையில், வகிபாகக் குழப்பம் ஏற்படுவதோடு, பல ஆசிரிய தலைவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்றுக்குட்டிகளாகவோ" அல்லது நிர்வாகத்திற்கு உதவி செய்பவர்களாகவோ இருக்கும் நிலை காணப்படுகின்றது.

அடுத்து, மரபார்ந்த நியமங்களைக் கடைப்பிடிக்கும் ஆசிரியர்கள், சுயாதீனம், சமத்துவம், முதுநிலை என்பவற்றைக் காரணம்காட்டி, ஆசிரிய தலைமைத்துவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். தமது போதனா வெளியினுள் (instructional space) ஆசிரிய தலைவர்கள் அனாவசியமாக மூக்கை நுழைப்பதாகவே இவர்கள் கருதுகின்றனர்.

மூன்றாவதாக, ஆசிரிய தலைமைத்துவத்தை வளர்த்தெடுப்பதில் அதிபரின் ஒத்துழைப்பு என்பது மிகவும் அவசிய மானதாகும். ஆசிரிய தலைமைத்துவம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு செயலூக்கத்துடன் ஒத்துழைக்க மறுக்கும் அதிபர்களுடன் பணிபுரிவது சிரமமானது.

இங்கு குறிப்பிடப்பட்ட சவால்களும் விவகாரங்களும் ஆசிரிய தலைமைத்துவம் பற்றிய தெளிந்த விளக்கமின்மை காரணமாகவே எழுகின்றன. தொடக்கநிலை வாண்மைத்துவப் பயிற்சிகளின் போதும் தொடருறு வாண்மைத்துவப் பயிற்சிகளின் போதும் "ஆசிரிய தலைமைத்துவம்" என்ற கருப்பொருள் வலியுறுத்தப்பட்டு, தெளிவுபடுத்தப்படின் இச் சவால்களை வெற்றிகொள்ளலாம்.

ஆசிரியம் ஓர் அறப்பண்புசார் தொழில் என்பதை நாம் மனங்கொள்கின்றபோது, நாம் எப்போதும் மானிடப் பரிமாணங்களைப் பேணி வெளிக்காட்டக்கூடியவர்களாக இருக்க வேண்டும். நாம் ஆசிரியராக வாழ்தலுக்கான பயிற்சியைப் பெறும்போது, எதிர்கால சமூகத்தை உருவாக்கும் சிற்பிகள் நாமே என்ற பெருமித உணர்வு ஏற்பட்டு, மாணவர் கற்றலை வளப்படுத்துவதற்கான புதிய சிந்தனைகளையும் கருத்துக்களையும் பரிசீலிப்ப தற்கும் தக்கனவெனின் அவற்றை ஏற்றுக்கொள்வ தற்குமான மனப்பாங்கையும் நாம் பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

254470

# வாண்மை விருத்தியும் மென்திறன்களும்

## (Professional Development and Soft Skills)

ஒரு தொழில் உயர் தொழிலாக அல்லது வாண்மைத் தொழிலாகக் கருதப்படுவதற்கு அது குறிப்பான சில நியமங்களை நிறைவேற்ற வேண்டும். அவ்வாறான நியமங்களுள் குறிப்பான இரு நியமங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. அது அறிவை அடியாதாரமாக கொண்டிருத்தல். (Knowledge - based)
2. அது வாடிக்கையாளரை முதன்மைப்படுத்துவதாக இருத்தல். (Client - centred)

உயர் தொழிலொன்றில் அமர்த்தப்பட்ட பின், வாண்மையை விருத்தி செய்து கொள்வதற்கு வாண்மைத்துவப்பயிற்சி அவசியம். இந்த வாண்மைத்துவப் பயிற்சியானது வாண்மைத் தொழில் புரிவோரின் வாண்மைத்துவப்பொறுப்பை உணர்த்துவதோடு மட்டுமல்லாமல் மாற்றமுறும் நடைமுறைகளை அறிந்து கொள்ளவும் அவற்றில் தேர்ச்சி பெறவும் வழிவகுக்க வேண்டும். நீண்ட காலமாக, வாண்மைத்துவப்பயிற்சி என்பது, பல்கலைக்கழகங்களிலோ அல்லது வேறு நிறுவனங்களிலோ இடம்பெறும் விசேட நிகழ்ச்சித்திட்டங்களில் அல்லது பாட நெறிகளில் பங்கு பற்றுவதையே குறித்து வந்தது. ஆனால், அண்மைக்காலங்களில் ஏற்பட்டுள்ள உலகளாவிய மாற்றங்கள் காரணமாக, வாண்மை விருத்திப்பயிற்சித்திட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்திறன்களை அல்லது மிருதுமுறைத்திறன்களை (Soft skills) விருத்திசெய்தலை மறைக்கலைத்திட்டமாக (The HIDDEN CURRICULUM) உள்ளடக்கியிருக்க வேண்டுமென வலியுறுத்தப் பட்டு வருகின்றது.

இக்குறிப்பான நிலைமை தோற்றுவிக்கப்பட்டமைக்கு பல்வேறு காரணங்களைக்குறிப்பிடலாம்:

- வாண்மைத்துவ சூழலானது (Professional environment) சிக்கலானதாகவும் சவாலுக்குரியதாகவும் போட்டி மிக்கதாகவும் மாறியுள்ளமை.
- பணியிடத்தின் கலாசாரத்தில் ஏற்பட்டுள்ள பாரிய, கட்டளைக்கோள் மாற்றம் (Paradigm shift)
- சுயவிருத்தியையும் வாண்மைத்துவ வெற்றியையும் எய்துவதற்கு பல்வேறு திறன்கள் அவசியமானவை யாய் இருத்தல்.

வாண்மைத்துவதொழில் ஒன்றில் ஈடுபடுவோர் கொண்டிருக்க வேண்டிய திறன்களைப் பொதுவாக வன் திறன்கள், மென்திறன்கள் ஆகிய இரு வகுதிகளுள் அடக்கலாம். கல்விப்புலமைத்துவத் திறன்களும் அநுபவங்களும் நிபுணத்து வமும் உள்ளடங்கியதான தொழிலுக்கு வேண்டிய தொழில் நுட்பத்திறன்கள் (Technical skills) வன்திறன்கள் என்ற வகுதிக்குள் அடங்குவன. ஆனால், மென்திறன்கள் எனப்படுபவை சுயவிருத்தித்திறன்களையும் இடை வினையுறு திறன்களையும் தலைமைத்துவத் திறன்களையும் ஒழுங்கமைக்கும் திறன்களை யும் தொடர்பாடற்திறன்களையும் உள்ளடக்குவன.

மென்திறன்கள் குறித்து பயிற்சியளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று பின்வரும் குறிக்கோள்களை நிறை வேற்றுவதாக இருக்க வேண்டும்.

- மென்திறன்கள் பற்றிய விழிப்புணர்வை பங்கு பற்றுநர்களிடையே ஏற்படுத்தல்.
- மென்திறன்களைப் பங்கு பற்றுநர் களிடையே விருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்கான பயிற்சிகளை வழங்குதல்.

- பொருத்தமான ஆளுமையுள்ளவர்களாக பங்குபற்றுநர் களை உருவாக்குதல்.
- மொத்தத்தில், பங்குபற்றுநர்களின் தொழில் சார்ந்த வினையாற்றலை மேம்படுத்தல்.

வழமையாக, தொழில் நுட்பத்திறன்கள் தொடர்பான வாண்மைத்துவ விருத்தி என்பது குறிப்பான சில நடைமுறை களை உள்ளடக்கும். அவையாவன:

- கருத்தரங்குகளில் அல்லது மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தல்.
- செயல்முறை சார்ந்த பயிற்சிப்பட்டறைகளில் கலந்து கொண்டு அநுபவம் பெறல்.
- ஆய்வேடுகளினூடாகவும் பருவஇதழ்களினூடாகவும் அறிவை இற்றைப் படுத்தல்.
- கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் பங்குபற்றல்.
- புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளலும்பயன்படுத்தலும்.
- உயர் தகைமைப் பட்டநெறிகளை மேற்கொள்ளல்.
- புதிய முறையியல்களை ஆய்வு செய்தல்.
- ஆய்விதழ்களிலும் பருவ இதழ்களிலும் கட்டுரைகளை எழுதுதல்.
- துறைசார் பாடநூல்களை எழுதுதல்.

ஒரு தொழிலில் நிபுணத்துவம் பெறுவதற்கான தொழில் நுட்பத்திறன்கள் முக்கிய மானவையெனினும், ஒருவரின் வினை யாற்றலில் வளர்ச்சி அல்லது மாற்றம் அருகிக் காணப்படும் நிலை ஏற்படும் போது, அதாவது, தொழிலொன்றை ஆற்றும் திறனில் தேக்கநிலையொன்று எற்படும்போது, தொழில் நுணுக்கத் திறன்களுக்கு அப்பால், வினைத்திறன்மிக்க வினையாற்றலை ஒருவர் வெளிக்காட்டுவதற்கு மேலும் சில திறன்கள் அவசியமாகின்றன. வேலைத்தளத்தில் அல்லது நிறுவனத்தில் உள் ளோருடன் ஒன்றாக இணைந்து ஒத்துழைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடன் பணியாற்றுவதற்கு வேண்டிய திறன்களை ஒருவர் கொண்டிருக்க வேண்டுமென்பது இன்று உலகளாவிய ரீதியில் உணரப்பட்ட ஓர் அம்சமாகும். இத்திறன்களே மென்திறன்கள் எனப்படுகின்றன. தேக்க நிலையைத்தாண்டி, அடுத்த கட்டத் திற்கு அல்லது மட்டத்திற்கு நகர்வதற்கு, ஒவ்வொருவரும் தமது இயல்பான திறன்களைப் பற்றியும் மென்திறன்களை எவ்வாறு பிரயோகிப்பது என்பது பற்றியும் விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமான தாகும்.

இன்று மனவெழுச்சி நுண்மதி (Emotional Intellegence) என்ற பதம் அறிமுகமாகி யுள்ளது. இது மனவெழுச்சிகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆற்றலைக்குறிக்கும். மன வெழுச்சி நுண்மதியின் ஓர் அளவீடாக மன வெழுச்சி நுண்மதி ஈவு (EQ) என்பது கொள்ளப்படுகின்றது. ஒருவரின் ஆளுமை இயல்புகள், சமூக வசீகரங்கள், தொடர்பாடல் ஆற்றல், மொழி ஆற்றல், தனியாள் பழக்கவழக்கங்கள், சிநேக பாவம், நேர்மய மான சிந்தனை மனப்பாங்கு போன்றவற்றுடன் தொடர்பு பட்டதான ஓர் அள வீடாக மனவெழுச்சி நுண்மதி ஈவு விளங்கு கின்றது. எனவே ஒருவரின் மனவெழுச்சி நுண்மதியுடன் சம்பந்தப்பட்ட மனவெழுச்சி சார் நுண்மதித்திறன்களே மென் திறன்களாகும். இவை, ஒரு தொழிலுக்கும் அத்தொழில் சார் ஏனைய நடவடிக்கைகளுக்கும் அவசியமான தொழில் நுணுக்கத்தேவைகளான வன்திறன் களோடு (Hard skills) சேர்ந்து அவற்றை நிரப்புவன ஆகும்.

ஒரு நிறுவனத்தின் வெற்றி என்பது இன்று அந்நிறுவனத் திலுள்ள பணியாளர்களின் தொழிற்தகைமைகளுக்கும் அப்பால் மென்திறன் களில் பெரிதும் தங்கியுள்ளமை உணரப் பட்டுள்ளது. அதனால் தொழில் தருநர்கள் தேர்வு நாடிகளிடம் தொழிலுக்கான நியமமான தகைமை களும் மென்திறன்களும் உள்ளனவா என பரிசீலிக்கின்றனர். ஆளிடைத் தொடர்பு களை கையாளுவதற்கும் பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதற்கும் வினைத்திறன் மிக்க வகையில் தொடர்பாடல் மேற்கொள்வதற்கும் நல்ல மனப்பதிவை ஏற்படுத்துவதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென் திறன்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

இன்று மிருதுமுறைத்திறன்களாக ஒரு நீண்ட பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் குறிப்பானவை:

- தொடர்பாடல் திறன்கள;(Communication skills)
- உடல்மொழி(Body language)
- எழுத்து மூலமான தொடல்பாடல் திறன்கள் (Writing communication skills)
- அளிக்கைத்திறன்கள் (Presentation skills)
- அணி முகாமை (Team management)
- வாண்மைத்துவ ஒழுக்கம் (Professional skills)
- ஆளிடைத்திறன்கள் (Interpersonal skills)
- நேரமுகாமை (Time management)
- நெருக்கிடை முகாமை (Stress management)
- தலைமைத்துவத்திறன்கள்(Leadership skills)

இவற்றோடு பிறரை வசீகரித்தல், பொறுப்பு ஒப்படைத்தல், மதிப்பிடுதல், அறிக்கையிடல், ஊக்கப் படுத்தல், முரண்பாடு தீர்த்தல், இலக்குத்தீர்மானித்தல், தீர்மானம் மேற்கொள்ளல், ஆக்கநிலைச்சிந்தனை என்பன தொடர்பான திறன்களும் ஆளகத்திறன்களும் (Intra-personal skills) மென்திறன்களாக கொள்ளப்படத்தக்கவையாகும்.

மென்திறன்களுள் அடியாதாரமாக, முதன்மைக்கூறாக விளங்குவது தொடர்பாடற் திறன்களாகும். ஒவ்வொரு மனிதரும் பிறருடன் நல்ல முறையில், விளைதிறன் மிக்க வகை யில் தொடர்பாடலை மேற்கொள்ளவேண்டியது இன்று அவசிய மாகியுள்ளது. விளைதிறன் மிக்க தொடர்பாடல் என்பது ஒருவர் பெற்றுள்ள கல்வி யின் தனிச்சிறப்பை காட்டுவ தாகும்.

அதேவேளை வார்த்தைகளின்றி உடல் மொழியின் மூலம் ஒரு விடயம் தொடர்பாக எமது விருப்பங்களை அல்லது கருத்துகளை பிறருக்குத் தெரிவிக்க முடியும். “அகத்தின் அழகு முகத்தில் தெரியும்” என்பது முதுமொழி. உதாரணமாக எமது தலையை ஆட்டும் முறையில் கூட, ஒரு குறித்த விடயம் தொடர்பாக எமது எண்ணங்களை அல்லது உணர்வுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு வகையில் பிரதிபலிக்கமுடியும். எழுந்து நிற்கும் முறை, இருக்கையில் அமர்ந்திருக்கும் முறை, கைகளை வைத்திருக்கும் நிலை எனப்பல்வேறு நிலைகளிலும் உடல் மொழி வெவ்வேறு அர்த்தங்களைத் தரவல்லது. செய்தி யொன்றை அனுப்புநரதும் பெறுநரதும் மனவெழுச்சிகள் கூட அவர்கள் தொடர்பாடல் மேற்கொள்ளும் முறையைத் தீர்மானிப்பன.

தொடர்பாடலின் இன்னொரு வகையான "எழுத்து மூலமான தொடர்பாடல்" மிகுந்த கவனத்துடன் மேற் கொள்ளப்படவேண்டியதாகும். ஒருவரின் எழுத்தாற்றலையும் பொதுத்திறமை யையும் கூட அவர் எழுதும் சிறு செய்திகளி லிருந்தே அறிந்து கொள்ள முடியும். எழுத்துப் பிழையின்றி இலக்கண சுத்தியோடு அமையும் எழுத்துக்களே (Writings) மதிப்பைப்பெறுவன. சுற்றறிக்கைகளையும் அறிக்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் எழுதும் போது ஒருவர் விடுகின்ற தவறுகள் அவர் பற்றிய பிரதி விம்பத்தை (Image) தகர்த்து விடக்கூடியன.

வாண்மைத்துவ விருத்தியில் செல்வாக்குச் செலுத்து கின்ற மற்றுமொரு வகை மென்திறன்கள் அளிக்கைத் திறன் களாகும். ஏனெனில், ஒரு விடயத்தை அல்லது செய்தியை திட்டமிடல், தயாரித்தல், வழங்குதல் என்பவற்றோடு தொடர்புடைய சகல திறன்களையும் அளிக்கைத் திறன்கள் உள்ளடக்கியுள்ளன. முறைசார்ந்த பேச்சு அல்லது விரிவுரை என்பது அளிக்கையின் ஒரு வகையாகும். அளிக்கை என்பது உடல்அசைவு சார்ந்ததாக, வாய்மொழி மூலமானதாக அல்லது இலத்திரனியல் சாதனங்கள் மூலமானதாக அமையலாம். நல்ல முறையில் காட்சித்துணைக் கருவிகளின் உதவியோடு வழங்கப்படும் அளிக்கைகள் பலரை யும் கவரவல்லன. விளக்க வரையுருக்கள் (Graphics), படங்கள், சமநிலைப்பட்ட வடி வமைப்பு, ஒழுங்கமைவு போன்றன யாவும் சிறந்த முறையில் காட்சியளிக்கை மேற்கொள்வதற்கு அவசியமானவை. வேண்டிய விளக்கக் குறிப்புக்களையும் அவையினர்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதற்கான கையேடுகளையும் (Handout) தயாரித்துக் கொள்ளலும் கூட அளிக்கைக்கு அவசியமான திறன்களாகும்.

வாய்மொழிமூலமான அல்லது பேச்சு மூலமான அளிக்கை என்பது அளிக்கை செய்பவரின் குரலிலும் தொனியிலும் பெரிதும் தங்கியுள்ளது. அவையினரின் கண்களை நோக்கியவாறே, இயல்பாக உரையாற்றும் போது அவையினரை ஈர்த்துக்கொள்ளமுடியும். இடையிடையே வினாக்களை எழுப்பியும் மௌனம் (Pause) சாதித்தும் அவையினரின் சிந்தனையை கிளறிவிட்டு உரையாற்றப்படும் விடயத்தில் அவையினரை ஈர்த்துவைத்தல் என்பது ஒரு கலையும் (Art) ஆகும். கலந்துரையாடலுக்கு அல்லது அவையினரின் கருத்துக்களுக்கு இடமளித்து விரிவுரையாற்றப்படும்போது, ஒருவர் அவையினரின் பின்னூட்டலைப் (Feedback) பெற்றுக் கொள்ள முடியும்.

நிறுவனமொன்றில் அல்லது நிகழ்ச்சித் திட்டமொன்றில் குழுவாகப் பணியாற்றும் போது, அந்தப்பணியை நிறைவேற்றும் பொருட்டு அணி முகாமை செய்வதற்கு வேண்டிய திறன்களைப் பெற்றிருப்பதும் அவசியமான ஒன்றாகும். பணியாளர்களின் ஒன்றிணைந்த பிரயாசைகளே நிறுவனத்திற்கு வெற்றியீட்டித்தருவன. பணியாளரிடையே பிணக்குகளைக் களைந்து இணக்கத்தை ஏற்படுத்தி ஒருங்கிணைந்த முறையில் செயற்பட வைப்பதற்கான அணி முகாமைத்துவத் திறன்களும் மற்றுமொரு வகை அளிக்கைத் திறன்களே.

வாண்மைத்துவ ஒழுக்கம் என்பது ஒரு நிறுவனத்தில் ஒவ்வொரு நிலையிலும் இன்று வேண்டப்பட்டதாகும். வேலைத்தளத்தில் ஒருவர் உள்ளபோது ஒருவர் தமது பணி பற்றியே சிந்திக்கவேண்டும்; அப்பணியில் தமது சிந்தனையையும் ஆன்மாவையும் அர்ப்பணிப்ப வராக விளங்க வேண்டும். ஒரு நிறுவனத்தின் உயிர்ப்பு நிலைக்கு அந்நிறுவனத்தில் பணியாற்றும் ஒவ்வொருவருமே காரணமானவர் என்ற வகையில் அவர்கள் ஒவ்வொருவருமே அர்ப்பணிப்போடு செயற்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதே நிறுவனம் நல்ல முறையில் தொழிற்பட முடியும்.

அடுத்த அம்சமாக அமையும் "ஆளிடைத்திறன்கள்" என்பது, பணியாளரிடையேயான தொடர்புகளையும் ஊடாட்டங்களையும் குறிக்கும். பணியாளர் ஒவ்வொருவரும் பிறரின் உணர்வுகளையும் கருத்துக்களையும் மதிக்க வேண்டும். பிறரின் கருத்துக்களுடன் ஒத்துப் போகாத போதும் நாகரிக மான முறையில் அதனை வெளிப்படுத்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

நேரத்தை முகாமை செய்வதென்பதும் நெருக்கீடுகளை முகாமை செய்வதென்பதும் பணியாளர் ஒவ்வொருவருக்கும் அவசியமான மென்திறன்களாகும். அவசியத்தைப்பொறுத்து வேலைகளை முன்னுரிமைப்படுத்தி, திட்டமிட்டு, நேர ஒதுக்கீடு செய்து ஒழுங்கமைந்த முறையில் பணியாற்றும் போது "நேரமுகாமை" பயனளிக்கும். இதனால் வேலைகள் சுமையாக அமைவதையும் அதனால் ஏற்படும் நெருக்கீடுகளை யும் கூட தவிர்த்துக் கொள்ளலாம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக தலைமைத்துவ தொடர்பாடற்திறன்கள் இறுதி வெற்றியைத்தீர்மானிப்பவை யாகும். பிறரிட மிருந்து நாம் எதிர்பார்ப்பவை குறித்த தெளிவும் புதிய விடயங்களைக் கற்றுக்கொள்வதிலுள்ள ஆர்வமும் தன்னம்பிக்கையும் நன்றி பாராட்டுதலும் சவால்களை எதிர் கொள்ளலும் பிரச்சினை விடுவித்தலும் பகிர்ந்து கொள்ளலும் தலைமைத்துவ தொடர்பாடற்திறன்களுக்கு செழுமை யளிப்பன. பிறருடன் நன்மதிப்பைப் பெறும் வகையில், சிரித்த முகத்துடன் உலாவந்து, பிறரின் சுகதுக்கங்களை விசாரித்து, அர்ப்பணிப்புடன் செயலாற்றல் என்பது தலைவர் ஒவ்வொரு வருக்கும் அவசியமானவை. மொத்தத்தில் வாண்மைத்துவ விருத்தி என்பது தொழில் நுணுக்கம் சார் திறன்களிலும் அவற்றுக்கு மிகை நிரப்பிகளாக அமையும் மென்திறன்களிலும் பெரிதும் தங்கியுள்ளதென்பதை வாண்மையாளர் ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டு தொழிற்படும் போதே வாண்மை சிறக்கும் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிளமைப் பருவத்தினரை விளங்கிக்கொள்ளல்

கட்டிளமைப் பருவத்தினரை எந்தக் காலத்திலும் பிரச்சினைக்குரியவர்களாகக் கருதும் போக்கே சமூகத்தில் பொதுவாக காணப்படுகின்றது. இதனால் பெற்றோரும் மூத்தோரும் ஆசிரியர்களும் கட்டிளமைப் பருவத்தினருடன் உரசல்களை ஏற்படுத்திக்கொள்ளும் உறவுகளைப் பேணி வருகின்றனர். இந்நிலைமை, கட்டிளமைப் பருவத் தினரிடையே இவர்களுடனான பகைமை உணர்வையும் முரண் பாடுகளையும் தோற்றுவித்து விட ஏதுவாகின்றது. உண்மை யில் கட்டிளமைப் பருவம் என்பது ஆளுமை மிக்கவராக கட்டிளமைப் பருவத்தினர் முதிர்ச்சியுறவேண்டிய பருவமாகும். இன்றைய கட்டிளமைப்பருவத்தினரே நாளைய தலைவர்கள் என்பதை நாம் மறந்துவிடலாகாது. நாளைய சமூகத்தை வளம் நிறைந்ததாகக் கட்டியெழுப்ப வேண்டியவர்கள் இவர்களே என்பதனால் கட்டிளமைப்பருத்தினர் குறித்த விளக்கத்தை சமூகத்தில் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

### கட்டிளமைப் பருவம் என்றால் என்ன?

மனித வாழ்க்கை வட்டமானது பல பருவங்களாகப் பகுத்து நோக்கப்படுகின்றது. பிறப்புக்கு முந்திய பருவம், மழலைப்பருவம், ஆரம்ப பிள்ளைப் பருவம், பிந்திய பிள்ளைப் பருவம், கட்டிளமைப் பருவம், இளம் வளந்தோர்பருவம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய வளந்தோர் பருவம், பிந்திய வளந்தோர்பருவம் என இப்பருவங்கள் அமையும். எனவே, கட்டிளமைப் பருவம் என்பது பிந்திய பிள்ளைப் பருவத்துக்கும் இளம் வளர்ந்தோர் பருவத்துக் கும் இடையிலானதும் பாலியல் முதிர்ச்சி பெற்றுள்ளதுமான மாறுநிலைப் பருவ மாகும்.

கட்டிளமைப்பருவமானது, ஏறத்தாழ பன்னிரண்டு வயதில் ஆரம்பித்து, வளர்ந்தோர் பருவத்திற்கான வகிபங்குகளையும் பொறுப்புக் களையும் எடுத்துக்கொள்ளும் வரை தொடர்கிறது. இக்கட்டிளமைப் பருவத்திலேயே முக்கிய மான உடல், உள மாற்றங்கள் நிகழ்கின்றன. குறிப்பாக, மிகப் பிரதான நிகழ்வான "பூப்படைதல்" அல்லது "பருவமடைதல்" இப்பருத்திலேயே நிகழ்கின்றது.

கட்டிளமைப் பருவமானது யௌவனப் பருவம், விடலைப் பருவம் ஆகிய பெயர்களாலும் அழைக்கப்பெறும். ஆங்கிலத்தில் இப்பருவத்தை Adolescence என்று குறிப்பிடுகிறார்கள். "முதிர்ச்சியை நோக்கி வளர்ச்சி அடைதல்" எனப் பொருள பெறும் இலத்தீன் சொல்லிலிருந்து இந்த ஆங்கிலப் பதம் உருவானதாகும்.

**கட்டிளமைப் பருவம் பற்றிய ஆரம்பகால உளவியற் கருத்துகள்**

ஒவ்வொருவரும் தமது சொந்தக் கட்டிளமைப் பருவத்தைக் குறித்து பின்னோக்கிச் சிந்தித்துப் பார்க்கும் போது, அது உணர்ச்சிக் கொந்தளிப்புள்ளதாகவும் பெற்றோருடன் உளத்தர்க்க யுத்தம் செய்யும் பருவமாகவும் இருந்ததா அல்லது எந்தவிதமான சிக்கலுமின்றி இளம் கட்டிளமைப் பருவத்துக்கான இடமாற்றம்(transition) நிகழ்ந்ததா என்ற வினாவை எழுப்பிக்கொள்ளலாம். ஸ்ரான்லி ஹோல்(stanley hall) எனும் அமெரிக்க உளவியலாளர் கட்டிளமைப் பருவத்தை "புயலும் நெருக்கீடும்" (storm and stress) நிறைந்த பருவம் என்று குறிப்பிட்டமை இன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல்யமானது.

முதன்முதலில்,ஜேர்மனியிலுள்ள லீப்சிக் பல்கலைக் கழகத்தில் வில்ஹெல்ம் வூண்ட் (wilhelm wundt) என்பவரால் நிறுவப்பட்ட உளவியல் ஆய்வுகூடத்தில் பணியாற்றியவர் ஸ்ரான்லி வேறால் ஆவார். இவர் விருத்தி உளவியலில் அதிகம் அக்கறை காட்டியவர். ஸ்ரான்லி ஹோல் 1904 இல் வெளியிட்டு வைத்த "கட்டிளமைப் பருவம்" எனும் முக்கிய நூலானது மனித விருத்தியின் தனித்துவமான பருவமாக கட்டிளமைப் பருவத்தை வரையறை செய்து கொள்வதற்குக் காரணமாகிறது.

கட்டிளமைப் பருவத்தின் அதிசயிக்கத்தக்க உடலியல் மாற்றங்கள் ஒருவரில் உளவியல் ரீதியான கொந்தளிப்புகளை யும் மனவெழுச்சி சார்ந்து உறுதியற்ற தன்மையையும் பெற்றோருடன் முரண்நிலையையும் தோற்றுவிப்பதாக ஸ்ரான்லி ஹோல் குறிப்பிட்டார். அவரது இந்நம்பிக்கை ஒழுங்கு முறையான ஆய்வின் அடிப்படையில் அமையாத போதும், "கட்டிளமைப் பருவம் என்பது புயலும் நெருக்கீடும் நிறைந்த பருவம்" என்ற அவரின் கண்ணோட்டம் மிகவும் செல்வாக்குப் பெற்றது. ஆனால், அவரின் கண்ணோட்டத் திற்கு மிகவும் குறைந்தளவு ஆய்வு ஆதாரமே உள்ளது. இக் கண்ணோட்டத்திற்குப் பதிலாக, சமகால உளவியலாளர்கள் கட்டிளமைப் பருவம் என்பதை வளர்ச்சிக்கும் நேர்விருத்திக்கும் சந்தர்ப்பங்களைக் கொண்ட காலப்பருவமாகவே காண்கிறார்கள்.

### கட்டிளமைப் பருவத்து இயல்புகளும் மாற்றங்களும்

கட்டிளமைப் பருவத்தினரிடையே ஏற்படும் உடலியல் மாற்றங்கள், மனவெழுச்சி மாற்றங்கள், உளவளர்ச்சி மாற்றங்கள் என்பன காரணமாகவும் சகபாடிகள் தொடர்பு, ஒத்த, எதிர்ப்பாலார் தொடர்பு ஆகியன சம்பந்தமாகவும் தொழில் தெரிவு, சுய எண்ணக்கரு, சுதந்திர உணர்வு , அறநெறிப்பண்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், ஒய்வு நேரச்செயற்பாடு ஆகிய அம்சங்கள் தொடர்பாகவும் பல்வேறு தனித்துவமான இயல்புகள் காணப்படுவதை அவதானிக்கலாம். இவ்வியல்புகள் யாவும் ஒவ்வொரு கட்டிளமைப் பருவத்தினரிடமும் காணப்படும் எனக் கருதுதல் இயலாது. வெவ்வேறு ஆளிடம் வெவ்வேறு இயல்புகள் முதன்மை பெறலாம். இவ்வியல்புகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுக் காணப்படுவதோடு மாத்திரமன்றி, இவ் வியல்புகளின் இடைவினைகளும் ஆளுக்காள் வேறுபட்டுக் காணப்படும்.

கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் உடலியல் மாற்றங்களைப் பொறுத்தவரை உடலின் பரிமாணத்திலும் வெளித்தோற்றத்திலும் துரித மாற்றம் காணப்படும். பாலியல் உறுப்புக்களும் துணைப்பாலுறுப்புக்களும் முதிர்ச்சியுற்று. குறிப்பான இடங்களில் உரோமம் வளர்தல், குரல்வளை வளர்ச்சி பெற்று குரல்மாற்றமடைதல், மார்பு அகலமாதல், தசைநார் பலமடைதல் போன்ற மாற்றங்கள் ஏற்படும். பாலியல் உறுப்புக்களும் துணைப்பாலியல் உறுப்புக்களும் இனம் பெருக்கும் ஆற்றலைப் பெறும்வகையில் முதிர்ச்சியடைதலே பூப்படைதல்/பருவமடைதல் எனப்படும்.

சடுதியான, அளவுக்கு மீறிய கை, கால் வளர்ச்சி, பாலியல், துணைப்பாலியல் உறுப்புக்களின் வளர்ச்சி என்பன காரணமாக குழப்பமும் பதகளிப்பும் ஏற்படும், உறுதியற்ற மனவெழுச்சியைக் கட்டிளமைப் பருவத்தினர் பெறுவர். தமது உறுப்புக்களின் வளர்ச்சியை பிறருடன் ஒப்பிட்டுப் பார்த்து, சிலர் குழப்பமடைவதோடு, தாழ்வுச் சிக்கலுக்கும் உள்ளாவர்.

கட்டிளமைப் பருவம் என்பது அறிகை விருத்தி தொடர்பாக, பியாஷே(Piaget) எனும் உளவியலாளர் குறிப்பிட்ட நியம சிந்தனைப் பருவத்தை உள்ளடக்குவது. இப்பருவச்சிந்தனையானது இலட்சியமானதாகவும் தர்க்க ரீதியானதாகவும் அருவநிலையிலும் காணப்படும். நுண்மதி முதிர்ச்சிபெறுவதோடு கட்டிளமைப்பருவத்துக்குரிய அகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியாகக் கொண்ட இயல்பும் காணப்படும்.

கட்டிளமைப் பருவத்தினரிடையே காணப்படும் சுதந்திர உணர்வு காரணமாக, மூத்தோரினதும் பெற்றோரின தும் கட்டுப்பாட்டை இவர்கள் விரும்பமாட்டார்கள், விடுதலையையே நாடுவர். இவர்கள் தமது எண்ணங்கள், முடிவுகள், உணர்ச்சிகள் என்பவற்றுக்குத் தாமே பொறுப் பேற்பதோடு, பிறர் தம்மைக் குறை கூறுவதையும் விரும்ப மாட்டார்கள். முழுவளர்ச்சி பெற்றவர்களாக தம்மைப் பெற்றோர் மதிக்கவேண்டுமென இவர்கள் விரும்புவர். சமூகத்தின் நீதிக்காகப் போராட முன்வருவதோடு, இவர்களிற் பலர் வீரத்துடன் தியாகம் செய்யவும் முன்வருவர்.

கட்டிளமைப் பருவத்தினரிடையே காணப்படும் சக பாடிகள் தொடர்பு குறித்த இயல்புகள் கவனத்தைப் பெறுவன. கட்டிளமைப்பருத்தினர் சமவயதினருடன் பழகுவதைப் பெரிதும் விரும்புவர். எதிர்ப்பாலார்மீது காட்டும் ஆர்வம் இப்பருவத்தில் அதிகரிப்பதால் அவர்களின் வரவேற்பையும் அன்பையும் பெரிதும் விரும்புவர். அவர்களோடு இணைந்து மேற்கொள்ளக் கூடிய சமுதாய வேலைகள் மீதும் அதிக உற்சாகம் காட்டுவர். சமவயதினரும் சகபாடிகளும் கடைப் பிடிக்கும் பழக்கவழக்கங்களும் கருத்துக்களும் கட்டிளமைப் பருவத்தினர் மீது ஆழமாகச் செல்வாக்குச் செலுத்துவதால், அவர்களுடன் இணைந்து துணிகரமான செயல்களிலும் ஆபத்தானவற்றிலும் ஈடுபடவும் முனைவர். குழு நிலை இயக்கத் தினூடாகத் தமது சமூகத் தொடர்புகளை கட்டிளமைப் பருவத்தினர் விருத்தி செய்வதோடு, தலைமை தாங்குவதையும் விரும்புவர்.

கட்டிளமைப் பருவத்தினரிடையே எதிர்காலத் தொழில் பற்றிய அங்கலாய்ப்பு காணப்படும். தொழில் பற்றிய நிச்சயமின்மை காரணமாக பொருத்தமான கல்வி நெறியைத் தெரிவு செய்வதிலும் குழப்பம் காணப்படும்.

சூழல், சந்தர்ப்பம் என்பவற்றைப் பொறுத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிளமைப் பருவத்தினரின் கவர்ச்சிகளும் பொழுது போக்குகளும் ஆளுக்காள் வேறுபடுகின்றன. உடற் பயிற்சிகளிலும் தீரச்செயல்களிலும் இவர்கள் அதிகம் ஈடுபடுவர். சிற்றின்ப சஞ்சிகைகள், நாவல்கள் போன்றவற்றைப் படிப்பதிலும் சினிமா, தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றிலும் நாட்டம் காணப்படும்.

ஒருவர் தம்மைப் பற்றிக் கொள்ளும் கருத்து சுய எண்ணக்கரு எனப்படும். இச்சுய எண்ணக்கரு கட்டிளமைப் பருவத்திலேயே விருத்தியடைகின்றது. தாம் யார்? தாம் எதற்காக உள்ளார்? வாழ்க்கையில் தாம் எதனை அடைய விரும்புகிறார்? என்பன போன்ற வினாக்களை தம்முள் எழுப்பி தம்மை இனங்காண்பதனூடாக சுய எண்ணக்கருவையும் ஒருவர் வளர்த்துக்கொள்ள முடியும்.

ஒருவரின் தொழில் தெரிவு, ஆன்மிக நம்பிக்கைகள், ஆளுமை இயல்புகள், பாலியல் விருப்புக்கள், அரசியல் நிலைப்பாடு, பொழுது போக்குகள் போன்றவற்றிலெல்லாம் தம்மை இனங் கண்டு உருவாக்கிக் கொண்ட சுயஎண்ணக்கரு செல்வாக்குச் செலுத்துகின்றது. கட்டிளமைப்பருவத்தினர் தம்மை இனங்கண்டு சுயஎண்ணக்கருவை வளர்த்துக் கொள்ளும் வகையிலேயே அறநெறிப் பண்புகளை மதிக்கும் பண்பும் காணப்படும்.

கட்டிளமைப் பருவத்தினரைப் பொறுத்தவரை, சக பாடிகளுடனான தொடர்புகள் காரணமாகவும் இவர்களுக்கு நாட்டமுள்ள துறைகளில் வெளியாகும் நூல்களைப் படிப்பதனால் உண்டாகும் எழுச்சி காரணமாகவும் பிறருடனான உறவுகள், ஊடாட்டம் காரணமாகவும் தமக்கான ஒரு வாழ்க்கைத் தத்துவத்தை இவர்கள் உருவாக்கிக் கொள்கின்றனர்.

### கட்டிளமைப் பருவத்தினரின் பிரச்சினைகளும் சவால்களும்

கட்டிளமைப் பருவத்தினரின் பிரச்சினைகளும் எதிர்கொள்ளும் சவால்களும் இப்பருவத்தினர் ஆரம்பப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைப்பருவத்தினர் போன்று அதிக கரிசனைக்குரியவர்கள் என்பதை எடுத்துக்காட்டு கின்றன. இவர்களின் பிரச்சினை களையும் சவால்களையும் பின்வருமாறு பட்டியலிடலாம்

- இப்பருவத்தில் துரிதமாக ஏற்படும் உடலியல் மாற்றங்களுக்கு ஏற்றவாறு தமது நடத்தைகளை மாற்ற முடியாமல் இப்பருவத்தினர் நெருக்கிடைக்குள்ளாவர்.
- உடலியல் குறைபாடுகளினால் ஏற்படும் தாழ்வுணர்ச்சி யும் மனவெழுச்சிக் குழப்பங்களும் கட்டிளமைப் பருவத் தினரிடையே பிரச்சினைகளைத் தோற்று விக்கின்றன.
- பாலியல் தொடர்பான தெளிவான அறிவின்மை இப்பருவத்தினரில் மனக்குழப்பத்தை ஏற்படுத்துகின்றது.
- பெற்றோர், முதியோர், ஆசிரியர்கள் என்போரின் கோணத்திலிருந்து விலகி, பிறிதொரு கோணத்தில் உலக நிகழ்வு களைக் கட்டிளமைப்பருவத்தினர் நோக்கு வதால், பல சந்தர்ப்பங்களில் இந் நோக்குகள் எதிரும் புதிருமாக அமைந்து பிரச்சனைகளாகவும் முரண்பாடுகளாகவும் புலனாகின்றன.
- தமது சகபாடிகளிடம் கணிப்பைப் பெறுவதற்காக அவர்களுடன் சேர்ந்து புகைபிடித்தல், மது அருந்துதல் போன்ற தீய நடவடிக்கைகளில் இப்பருவத்தினர் சிலர் ஈடுபடுவ தனால் பிரச்சினைக்குள்ளா கின்றனர்.
- பெற்றோரின் கட்டுப்பாட்டை விரும்பாமையால் ஏற்படும் பெற்றோருடனான விரோத உணர்வு பிரச்சினைகளை தோற்றுவிக் கின்றன.
- கணிப்புப் பெறுவதற்காகவும் சுயஎண்ணக் கரு காரண மாகவும் சமூகத்துக்கு ஒவ்வாத துணிகரமான செயல்களிலும் அசாதாரண நடத்தைகளிலும் இப்பருவத்தினர் ஈடுபடுவதால் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

**கட்டிளமைப் பருவம் குறித்த அண்மைக்கால விமர்சனங்களும் ஆய்வுமுடிவுகளும்**

இதுவரை நோக்கியவற்றிலிருந்து, பொதுவாகவே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிளமைப் பருவத்தினர் பற்றிய எதிர்மறையான கருத்துகளே உருவாக்கம் பெற்று வளர்ந்துள்ளன. பெற்றோருடனும் சகபாடிகளுடனும் கட்டிளமைப் பருவத்தினர் கொண்டுள்ள இடைத் தொடர்புகள் குறித்து நோக்கும்போது, கட்டிளமைப் பருவத்தில் பெற்றோருடனான முரண்பாடுகள் தவிர்க்கப் படமுடியாதவையா என்ற வினாவே ஆய்வாளர் மத்தியில் முதலில் எழுந்தது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பதின்ம வயதினரில் (teenagers) அநேகர், பலர் நினைப்பது போலன்றி, தமது பெற்றோரைக் குறித்து சிலாகித்து வியப்புக்கொள்வதாகவும் அவர்களின் புத்திமதிகளைக் கேட்பதாகவும் தெரிவித் துள்ளனர். பெற்றோரர் - பிள்ளைத் தொடர்பு, கட்டிளமைப் பருவத்திற்கு முன் நன்றாக இருந்திருப்பின், கட்டிளமைப் பருவத்திலும் ஒப்பீட்டளவில் சுமுகமாகத் தொடர்வது ஒரு பொது விதியாகவே உள்ளது.

குறைந்த சதவீதத்தினரே சீராக்கற் பிரச்சினைகளையும் சமூகத்துடன் எதிர் நடத்தை களையும் வெளிக்காட்டுகின்றனர். பிள்ளைப் பருவத்தில் இடம் பெற்ற உளவியல் சார்ந்ததும் நடத்தைசார்ந்ததுமான பிரச்சினைகள் கட்டிளமைப் பருவத்தி லும் தொடர்வதாலேயே இவர்களில் பிரச்சினைகள் காணப்படு கின்றன. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்களில் 10% இலும் குறைந்த குடும்பங்களே கட்டிளமைப்பருவத்தில் பெற்றோர் - பிள்ளை தொடர்புகள் கணிசமான அளவு குழப்பங் களை விளைவிப்பதாகத் தெரிவித்துள்ளன.

கட்டிளமைப் பருவத்தில் பொதுவாக பெற்றோர் - பிள்ளை தொடர்புகள் நேராக உள்ள போதும், குறிப்பாக ஆரம்ப கட்டிளமைப்பருவத்தில், இடை இடையே வாக்கு வாதங்கள் இடம் பெறுகின்றன. இவ்வாறான உரசல்கள், குறிப்பான ஒரு விவகாரத்தில் யார் இறுதி முடிவெடுப்பது அல்லது அதிகாரம் செலுத்துவது என்பது குறித்தே இடம் பெறுகின்றன. கட்டிளமைப்பருவத்தில் "நண்பர்களின் தெரிவு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது இவ்வாறான முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் ஒரு விடயமாகும்.

கட்டிளமைப்பருவத்தில் பிள்ளைகள் மீது பெற்றோர் அதிக செல்வாக்கை கொண்டுள்ள போதும், நண்பர்களுடனும் சகபாடிகளுடனுமான இடை உறவுகளும் தொடர்புகளும் கூட முக்கியத்துவம் பெறுகின்றன. கனிஷ்ட இடைநிலை மட்டத்தி லிருந்து சிரேஷ்ட இடைநிலை மட்டத்துக்கான இடைமாற்றத் தின் போது பெருமளவு வேறுபாட்டை கட்டிளமைப் பருவத்தினர் காட்டுகிறார்கள். பிள்ளைப் பருவத்தை விட அதிகளவுக்கு கட்டிளமைப்பருவத்தினரின் சமூக வலை அமைப்பும் சமூகச் சூழமைவும் சமுதாயமும் அவர்களின் பெறுமானங்கள், நியமங்கள், எதிர் பார்ப்புக்கள் ஆகியவற்றில் அதிக அளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இதேவேளை, சகபாடிகளுடனான உறவும் அவர்களின் செல்வாக்கும் தமது பிளளைகளிடத்து விரும்பத்தகாத நடத்தைகளைத் தோற்றுவித்துவிடும் என்றே பெற்றோர் கவலைப்படுகின்றனர். ஆனால், பிள்ளைப்பருவத்தில் பெற்றோர் வளர்த்தெடுத்த பண்புக்கூறுகளும் இலக்குகளும் சகபாடி உறவி னால் மீள்வலியுறுத்தப்படும் என்றே ஆய்வாளர் கண்டறிந்துள்ளனர். ஏனெனில், கட்டிளமைப் பருவத்தினர் தம்மை ஒத்த வயதினருடனும் தமது சமூகவகுப்பினருடனும் தமது இனத்தவருடனும் பல்வேறு விடயங்களில் ஒத்த நம்பிக்கைகளைக் கொண்டுள்ளோருடனும் தான் நட்பை உருவாக்கிக் கொள்கிறாாகள்.

நன்கு கற்கவும் சிறந்த தராதரங்களைப் பெறவும், பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லவும் சமூக இணக்க நடவடிக்கைகளில் ஈடுபடவும் நண்பர்கள் அதிக அழுத்தம் தருகின்றனர். சகபாடிகளின் செல்வாக்கு சில வேளைகளில் விரும்பத்தகாத நடவடிக்கைகளைத் தோற்றுவிக்கக் கூடு மெனினும், நேரான முறையில் சகபாடிகள் ஒருவர் மீது ஒருவர் செல்வாக்குச் செலுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிளமைப்பருவத்தில் அடையாளப்படுத்தல் உருவாக்கம் (Identity formation) என்பது கவனத்துக்குரியதாகும். ஒருவரின் அடையாளம் அல்லது தனித்துவம் எனும் போது ஒருவரின் நடத்தையை வழிநடத்தக் கூடிய அவரின் பெறுமானங்கள், நம்பிக்கைகள், இலட்சியங்கள் என்பவற்றையே உளவியலாளர்கள் கருதுகின்றனர். எம்மை நாமே இனங்காணல் என்பது, அதாவது எமது சொந்த அடையாளம் என்பது எமது சுயம் பற்றிய ஒன்றிணைந்த உணர்வையும் நம்பிக்கையையும் எமக்குத்தருகிறது. இவ்வாறு எம்மை இனங்காணல் என்பது எமது வாழ்க்கை வட்டம் முழுவதும் இடம்பெறுகின்ற ஒரு செயன் முறையாகும். எமது வாழ்க்கைக் காலத்தில் புதிய வெவ்வேறான வகிபாகங்களை நாம் தழுவிக் கொள்ளும் போது, புதிய வழிகளில் எம்மை நாமே வரையறை செய்து கொள்கிறோம்

மனித வாழ்க்கை வட்டத்தில் முதற் தடவையாக, கட்டிளமைப்பருவத்தினரே அடையாளப்படுத்தல் விவகாரங்கள் தொடர்பாக கருத்துள்ள வகையில் கையாள்வதற்கான அறிகைத்திறன்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். பிள்ளைப் பருவத்திலிருந்து கட்டிளமைப்பருவத்தின் ஆரம்பத்தில் சுயம் பற்றிய கருத்து, மாற்றம் பெறுவதை அவதானிக்கலாம். பிள்ளைப்பருவத்தில் பொதுவாக சுய விருப்புக்களுடன் கூடியதாக அமையும் சுயம் பற்றிய கருத்து கட்டிளமைப்பருவத்தில் அதிகம் அருவநிலைக்குரியதாகவும் சுயவிருப்புக்களாகவும் உருமாற்றம் பெறுகிறது. இவை சொந்தக் குணவியல்புகளையும் பெறுமானங்களையும் நம்பிக்கைகளையும் இலக்குகளையும் பிரதிபலிப்பவையாகும்.

சொந்த அடையாளம் காணலின் சில அம்சங்கள், கட்டிளமைப்பருவத்தினர் கட்டுப்பாடு செலுத்த முடியாத பண்புகளைக்கொண்டுள்ளன. இவற்றுக்கு உதாரணங்களாக பால்நிலை, இனம், இனத்துவப்பின்னணி, சமூக பொருளாதார மட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் நூலகம்

அடையாளம் காணலில் பண்புகள் நிலைநிறுத்தப்பட்டவை யாகவும் கட்டிளமைப்பருவத்தை எய்தும்போது ஏற்கெனவே காலத்தினால் அகப்படுத்தப் பட்டவையாகவும் இருக்கும்.

இவ்வாறான நிலைநிறுத்தப்பட்ட பண்புகளுக்கு அப்பால் பல்வேறு பரிமாணங்களில் கட்டிளமைப்பருவத்தினர் தம்மை மதிப்பீடு செய்யத் தொடங்குகின்றனர். சகபாடிகளி னால் ஏற்கப்படும் தன்மை, கல்விசார் ஆற்றல்களும் விளையாட்டுப் போட்டி சம்பந்தமான ஆற்றல்களும், தொழில் ஆற்றல்கள், சொந்த உருவத்தோற்றம், கவர்ச்சியான தன்மை போன்றவை சுயத்தை வரையறை செய்வதற்கான சில முக்கிய அம்சங் களாகும்.

கட்டிளமைப்பருவத்திலுள்ள ஒருவர் எதிர்நோக்கும் மற்றுமொரு சவால், அவரது குடும்பத்துடனான பிணைப்புப் பற்றிய உணர்வை பேணிக்கொண்டே அவரது பெற்றோரைச் சாராது சுயாதீனமான அடையாளத்தை விருத்தி செய்து கொள்ளலாகும். எனவே கட்டிளமைப்பருவத்திலுள்ள ஒருவர் "நான் யார்?" எனும் வினாவுக்கு விடையளிப்பதற்கு, இசை வானதும் ஒருமுகமானதுமான முழுமையைக் கொண்டிருப்ப தற்காக ஒன்றிணைக்கப்பட வேண்டிய பல சுய எண்ணக்கருக் களைக் கொண்டிருப்பார்.

### கட்டிளமைப்பருவத்தினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அணுகுமுறைகள்

"உன்னை நீயே அறிந்துகொள்" (know thyself) என்ற சோக்கிரட்டீசின் தத்துவம் பெரும்பாலான தீர்வு முறை களுக்குப் பொருந்தும் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப் படும் பின்வரும் அணுகுமுறைகள் கட்டிளமைப்பருவத்தினர் தொடர்பான பிரச்சினைகளில் சுமுகமான நிலைப்பாட்டினை ஏற்படுத்த வல்லன.

- கட்டிளமைப்பருவத்தினர் தமது பருவத்து இயல்புகள் பற்றிய அறிவியல் ரீதியிலான விளக்கத்தைப் பெறுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகை செய்தல்.

- பெற்றோர், முதியோர், ஆசிரியர் ஆகியோர் கட்டிளமைப்பருவத்தினரின் நிலைப்பாட்டினை நடுநிலை நின்று உணர்ந்து கொள்ள வைத்தல்

- புரிந்துணர்வின் அடிப்படையில் ஒவ்வொரு சாராரும் மறுசாராரின் உணர்வுகளுக்கும் செய்கைகளுக்கும் மதிப்பளிக்கும் மனப்பாங்கினை வளர்த்தெடுத்தல்

- நடுநிலை நின்று நிலைமைகளை நோக்கும் மனப் பாங்கினை வளர்க்கக் கூடிய கல்வி, கலாசார, சமூகசெயற்பாடு களில் இரு சாராரும் ஈடுபடுதல்.

- சட்டம், மரபு ஆகிய இரண்டினையும் மதிப்பதற்கும் பேணுவதற்கும் கட்டிளமைப்பருவத் தினரைத் தயார்படுத்தல்

- கட்டிளமைப்பருவத்தினர் தலைமைத்துவப் பணிகளில் அனுபவம் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தல்.

இதுவரை நோக்கியவற்றிலிருந்து, கட்டிளமைப் பருவத்தினர்க்கே உரிய இயல்புகளையும் பிரச்சினைகளையும் விளங்கிக்கொண்டு, கட்டிளமைப்பருவத்தினர் குறித்த நேர் மனப் பாங்கை வளர்த்துக்கொள்ள வேண்டியதும் அவர்களுக்கு மதிப்பளித்து ஆக்க பூர்வமான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடு படத்தூண்டுவதும் எம் ஒவ்வொருவரதும் கடமைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிப்பீடும் மதிப்பீடும் : பாடசாலை அடிப்படையிலானது, மாணவர் அடிப்படையிலானது & சுயமதிப்பீடு

**பாடசாலைக் கலைத்திட்டமும் கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றின் முக்கியத்துவமும்**

- இன்றைய பாடசாலைக் கலைத்திட்டத்தின் முக்கிய மான அம்சங்கள்:
  1. தேர்ச்சி அடிப்படையிலானது (Competency-based)
  2. மாணவர் அடிப்படையிலானது (Student-based)
  3. செயல் நடவடிக்கை அடிப்படையிலானது (Activity-based)
- மாணவர்களைக் கணிப்பீடு செய்தலும் மதிப்பிடலும் என்பது ஆசிரியர் ஒவ்வொருவரினதும் வேலைத்திட்டத்தின் முக்கியமான ஓர் அம்சமாகும்.
- கடந்த இரு தசாப்தங்களில், இது அதிகரித்த கவனத்தைப் பெற்று வருகின்றது.
- ஆசிரியர்கள் தமது வேலை நேரத்தில் அனேகமாக 30% அளவிலான நேரத்தை மதிப்பீட்டுடன் சம்பந்தப்பட்ட நட வடிக்கைகளில் செலவழிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன (Stiggins, 2004).
- கணிப்பீடும் அதன்பேறான தரமும் மாணவர்களுக்கு முக்கியமானவை.
- கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றுக்காக ஆசிரியர் பிர யோகிக்கும் நடைமுறைகளும் உபாயங்களும் மாணவர்களின் கற்றலில் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அத்தோடு, மாணவர்கள் உயர் கல்விக்காகச் செல்லும் நிறுவனத்தின் வகை., எதிர்கால வாழ்க்கைத்தொழில், வாழ்க்கைப்பாணி போன்ற நீண்டகால விளைவுகளிலும் கூட இவை செல்வாக்குச் செலுத்துகின்றன.
- அனுபவமுள்ள ஆசிரியர்களும்கூட, கணிப்பீடு, மதிப் பீடு என்பன தொடர்பாக சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

**பாடசாலை அடிப்படையிலான கணிப்பீடும் மதிப்பீடும்.**

- பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் கணிப்பீடும் மதிப்பீடும். பாடசாலை அடிப்படையிலான கணிப்பீடு/ மதிப்பீடு எனப்படுகின்றது.
- ஆசிரியர்கள் பாடசாலை அடிப்படையிலான கணிப்பீட்டு/மதிப்பீட்டுத் தேர்ச்சிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- இதற்கு ஆசிரியர்களுக்கு நிறைந்த அறிவும் பயிற்சியும் அவசியம்.

**கணிப்பீடு - மதிப்பீடு வேறுபாடு**

- கணிப்பீடு, மதிப்பீடு ஆகிய பதங்கள் பல சந்தர்ப்பங் களில், அவை இரண்டும் ஒன்று என்ற வகையிலேயே பயன் படுத்தப்படுகின்றன. ஆயினும், இவற்றிடையே வேறுபாடு உண்டு.
- கணிப்பீடு என்பது மாணவர் கற்றல் பற்றியும் ஆசிரியர்களின் போதனைச் செயன்முறைகள் பற்றியும் முறை சார்ந்ததும் முறைசாராததுமான தகவல்களைத் தொடர்ச்சி யாகச் சேகரித்துக் கொள்ளுதலாகும்.
- மதிப்பீடு என்பது மாணவர்களைத் தரமிடவும் முன்னேற்றத்தை அதிகரிக்கவும் கூடிய வகையில் மாணவர் அடைவு மட்டம் குறித்த தீர்ப்பை மேற்கொள்ளலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீடும்/மதிப்பீடும் போதனையும்**

- வகுப்பறையில் பயன்படுத்தப்படும் கணிப்பீட்டு/ மதிப்பீட்டுச் செய்முறைகள் பல நோக்கங்களை நிறைவேற்றுவதோடு, பல வகைகளிலும் பல வடிவங்களிலும் பல பாணிகளிலும் இடம் பெறுகின்றன.
- கணிப்பீடு/மதிப்பீடு என்பது போதனையின் ஒன்றிணைந்த ஓர் அம்சமாக இருக்க வேண்டும்.
- அது நன்கு திட்டமிடப்பட்டு, பாடத்தோடு (Leason) ஒன்றாக இழைக்கப்பட்டதாய் உள்ளடக்கத்தையும் போதனையின் தன்மையையும் பிரதிபலிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.
- அத்தோடு, அதுபற்றி மாணவர்களுடன் கலந்துரையாடி நன்கு தெளிவுபடுத்தப்படவும் வேண்டும்.

**கல்விசார் அளவீடு**

- கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றோடு இணைந்த ஒன்று அளவீடு (Mesurement) என்பதாகும்.
- கல்விசார் அளவீடு என்பது கல்விச் செயற்பாட்டில் எல்லா அளவீடுகளையும் உள்ளடக்கும்.
- கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றுக்கு அடிப்படையாக அமைவது, பொருத்தமானதும் திருத்தமானதுமான அளவீடு ஆகும்.
- மாணவர்களின் அடைவுப் புள்ளிகளை மாத்திரமன்றி, மனப்பாங்குகள், கவர்ச்சிகள், திறன்கள், உளச்சார்புகள் போன்றவற்றின் அளவீடுகளையும் கல்விசார் அளவீடு என்பது உள்ளடக்கும்

**கூட்டிணைந்து கற்கும் சமுதாயமும் ஆசிரியர் கற்றலும்**

- இன்றைய பாடசாலையில் கற்பித்தல் என்பது சிக்கலானதும் சவாலுக்குரியதுமாகும்.
- பாடசாலை என்பது கூட்டிணைந்து கற்கும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயமாக இன்று உருவகிக்கப்படுகின்றது.

- இந்த உருவகத்தில் ஆசிரியர் கற்றல் என்பது முக்கியமான ஒன்று.
- இன்றைய ஆசிரியர்களிடமிருந்தான எதிர்பார்ப்புகள் உயர்வானவை.
- அவர்களுடைய கடமைப் பொறுப்புக்களில் முயற்சி, கவனம், திறன் முதலியவை வேண்டப்படுகின்றன.

## இருபத்தோராம் நூற்றாண்டுப் பாடசாலைகளும் யதார்த்த நிலைமைகளும்

- இன்றைய பாடசாலைகளில் மூன்று முக்கியமான யதார்த்த நிலைமைகளை நாம் காணலாம்.
  1. மாணவர்கள் உயர் தராதரங்களைப் பெறுவதில் ஆசிரியர்களின் பொறுப்புகளை வலியுறுத்தும் சமூக அழுத்தம்
  2. அதிகரித்துள்ள மாணவர் பல்வகைமை
  3. தொழில்நுட்பத்திலும் கோளமயமாதலிலும் ஏற்பட்டுள்ள அடிப்படையான மாற்றங்கள்
- இவையாவும் ஆசிரியர்களிலும் அதிபர்களிலும் தாக்கத்தை விளைவிப்பன.

## அறிவார்ந்த சமூகமும் ஆசிரியர்களுக்கு வலுவூட்டலும்

- இன்றைய, அறிவை மையமாகக் கொண்ட சமூகத்தில் ஆசிரியர்களுக்கு வலுவூட்டல் என்பது அத்தியாவசியமானது.
- ஆசிரியர்களுக்கு பாடப்புல அறிவு, கற்றல்-கற்பித்தல் குறித்த முறையியல்சார் அறிவு, வளப்பகுப்பாய்வுத் திறன், தேடல் நாட்டம், ஆய்வு முயற்சிகள் என்பன அவசியமானவையாக உள்ளன.
- மாணவர் கற்றலுக்கு உதவக்கூடிய நேரான கற்றற் சூழலை உருவாக்க வேண்டியது ஆசிரியர்களின் பணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய வாண்மையும் வாண்மைத்துவ தராதரங்களும்

- ஆசிரியத் தொழில் என்பது இன்று ஒரு வாண்மையாக/ உயர்தொழிலாக மதிக்கப்படுகின்றது.
- இவ்வகையில் ஆசிரியம்/ஆசிரியவாண்மை உயர்தரப் பயிற்சியையும் உயர் உளத்தொழிற்பாடுகளையும் வேண்டி நிற்கின்றது.
- வாண்மைத்துவ தராதரங்களாகக் கருதப்படுபவை:


1. பாடப்புல அறிவைக் கொண்டிருத்தல்.
2. பிள்ளை வளர்ச்சி, விருத்தி என்பன பற்றிய அறிவைக் கொண்டிருத்தல்.
3. மாணவர்கள் வெவ்வேறு முறைகளில் கற்றுக் கொள்வார்கள் என்பதை விளங்கிக் கொள்ளல்.
4. எவ்வாறு கற்பிப்பது என அறிந்திருத்தல்.
5. வகுப்பறையை எவ்வாறு முகாமை செய்வதென அறிந்திருத்தல்.
6. தொடர்பாடல் மேற்கொள்ளும் ஆற்றலைக் கொண்டிருத்தல்.
7. வெவ்வேறு வகையான பாடங்களைத் திட்டமிடும் ஆற்றலைக் கொண்டிருத்தல்.
8. மாணவர் முன்னேற்றத்தை கணிப்பீடு/மதிப்பீடு செய்யும் ஆற்றலைக் கொண்டிருத்தல்.
9. தம்மைத்தாமே சுயமதிப்பீடு செய்யும் ஆற்றலைக் கொண்டிருத்தல்.
10. ஏனைய ஆசிரியர்களுடனும் சமூகத்துடனும் இணைந்திருத்தல்.

## மதிப்பீட்டின் நோக்கங்கள்

- வாண்மைத்துவ தராதரங்களுள் கணிப்பீடு/மதிப்பீடு என்பதும் முக்கியமானதாக இருப்பதால் ஆசிரியர் பயிற்சித் திட்டங்களில் இதற்கு இடமளிக்கப்பட வேண்டும்.
- கணிப்பீடு/மதிப்பீடு வெவ்வேறு நோக்கங்களைக் கொண்டிருக்கின்றது.

1. கற்றலுக்கான மதிப்பீடு
2. கற்றலின் மதிப்பீடு
3. கற்றலாக மதிப்பீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**கற்றலுக்கான மதிப்பீடு**

- கற்றலுக்கான மதிப்பீடு என்பது அமைப்பு மதிப்பீடு எனவும் அழைக்கப்படும்.
- மாணவர்களின் முன்னறிவையும் மாணவர் கற்றலில் போதனை காரணமாக ஏற்படும் முன்னேற்ற விளைவுகளையும் ஆய்ந்தறிவதற்காக வடிவமைக்கப்படுவது அமைப்பு மதிப்பீடு ஆகும்.
- இது மாணவர் கற்றலுக்கான முக்கிய தகவல்களை அவர்களுக்கு வழங்குகின்றது.
- மாணவர்கள் கற்றலுக்காகப் பயன்படுத்தும் பல்வேறு உபாயங்களின் விளைதிறன் குறித்தும் அறியத் தருகின்றது.
- கல்விக் கொள்கை வகுப்பாளரகளிடமும் பத்திரிகை களிலும் கற்றலுக்கான மதிப்பீடு அதிக கவனத்தைப் பெற்றுக் கொள்ளாத போதிலும், மாணவர் கற்றல் தொடர்பாக அதிக முக்கியத்துவத்தைப் பெறும் மதிப்பீட்டு வடிவம் இதுவாகும்.
- கற்றலுக்கான மதிப்பீடு என்பதே மாணவர் அடிப் படையிலான மதிப்பீடு ஆகும்.
- எனவே, விளைதிறன்மிக்க கற்றலுக்கான மதிப்பீட்டு நடைமுறைகளை விருத்தி செய்தலும் பயன்படுத்தலும் கல்விச் செயற்பாட்டில் முக்கிய கவனத்தைப் பெறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றலின் மதிப்பீடு

- கற்றலின் மதிபீடு என்பது கூட்டு மதிப்பீடு எனவும் அழைக்கப்படுகின்றது.
- போதனைத் திட்டமொன்றின் முடிவில், தவணை அல்லது ஆண்டு இறுதியில் பாடப்பரப்பு முழுவதிலும் இது மேற்கொள்ளப்படுகின்றது.
- எனவே, எல்லா அம்சங்களிலும் மாணவர் தேர்ச்சியின் மொத்த விளைவை இது குறிப்பிடுகின்றது.
- இறுதிப் புள்ளி, தரம் என்பன வழங்கப் பயன்படும்.
- தொடர் கல்விக்கும் உயர் கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவதற்குமான தகுதிநிலைகாண் மதிப்பீடாகவும் இது கொள்ளப்படுகின்றது.
- பாடசாலை பற்றிய மதிப்பைச் சமூகத்தில் உருவாக்கு வதில் இது பெரும்பங்கு வகிக்கின்றது.

## கற்றலாக மதிப்பீடு

- "கற்றலாக மதிப்பீடு" என்பது மதிப்பீட்டை, போதனை யுடன் ஒன்றிணைந்த ஒன்றாக ஆக்குகின்றது.
- இது, மாணவர்களை, தமது சொந்தக் கற்றல் குறித்து, தொடர்ந்து சுயமதிப்பீடு செய்தலில் ஈடுபாடு கொள்ளச் செய்கின்றது.
- இவ்வாறான சுயமதிப்பீடு காரணமாக மாணவர்கள் கற்றலில் தம்மைத்தாமே நெறிப்படுத்தம் கற்போராக விளங்குவர்.
- "கற்றலாக மதிப்பீடு" என்பது சகபாடிகளுடனான இடைவினை, பின்னூட்டல் என்பவற்றை உள்ளடக்கிய சக பாடி மதிப்பீடு என்னும் வடிவத்தையும் உள்ளடக்குகின்றது.
- கற்றலுக்கான மதிப்பீடு, கற்றலின் மதிப்பீடு ஆகிய வற்றுக்கான உபாயங்களுடன் ஒப்பிடும் போது. "கற்றலாக மதிப்பீடு" என்பதற்கான சுயமதிப்பீட்டு உபாயங்கள், சகபாடி மதிப்பீட்டு உபாயங்கள் என்பன நன்கு விருத்தி செய்யப்பட வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• ஆயினும், இரு காரணங்களுக்காக இது முக்கியத்துவம் உடையது.

1. இந்த மதிப்பீடானது, சிலர் கல்வியின் இறுதி இலக்கு எனக் கருதுவதை அடையத் துணைசெய்கின்றது. அதாவது, சுயாதீனமான கற்போரை இது உருவாக்குகின்றது.

2. அதிகாரபூர்வமாக வழங்கப்படும் பின்னூட்டல்களை விட, சகபாடியினரிடமிருந்தான பின்னூட்டல்களைத் திறந்த மனதுடன் ஏற்கக்கூடிய கற்போரை உருவாக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவ வழிக்கற்றல்
## Learning from experience

**கற்றல் என்றால் என்ன?**

கற்றல் என்பது மனித நடத்தையில் ஏற்படும் ஒப்பீட்டளவில் நிரந்தரமான மாற்றமாகும் என்பதே பொதுவாக மரபார்ந்த ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணமாகும். ஆனால் இது நடத்தை வாதிகளால் கொடுக்கப்பட்ட வரைவிலக்கணமே. உண்மையில் வெவ்வேறு உளவியற் சிந்தனா கூடங்களுக்கேற்ப கற்றல் என்பதற்கான வரைவிலக்கணமும் விளக்கமும் வேறுபடும். அறிகை வாதமானது கற்றலை ஓர் உள்ளார்ந்த உளச்செயற்பாடாகக் காண்கிறது. மானிடப் பண்புவாதம் மனிதரின் வலுவைப்பூர்த்தி செய்வதற்காக தனியாள் சார் செயற்பாடாக கற்றலை விளக்கமுறப்படுகின்றது. ஆனால், சமூக அறிகை வாதமானது ஒரு சமூகச் சூழமைவில் பிறருடனான இடைவினையும் பிறரைப்பற்றிய உற்றுநோக்கலுமே கற்றல் ஆகும் என வரைவிலக்கணம் கூறுகின்றது. மொத்தத்தில் கற்றல் என்பது ஒரு செயன்முறையும் (Process) விளைவும் (Product) ஆகும்

கற்றற் செயன்முறையானது கற்றல் நிகழும் போது யாது நிகழ்கின்றது என்பதில் கவனத்தைக் குவிக்கின்றது. அதே வேளை கற்றற் செயன்முறைக்கான விளக்கங்கள் கற்றற் கொள்கைகள் எனப்படுகின்றன. வெவ்வேறு உளவியல் சிந்தனா கூடங்களுக்கேற்ப இந்த விளக்கங்களும் வியாக்கியானங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபடலாம் என்பதால் கற்றற்கொள்கைகளும் வேறுபடு கின்றன.

**கற்றற்கொள்கைகளின் எடுகோள்கள்**

கற்றற்கொள்கைள் பொதுவாக குறிப்பான சில எடுகோள்களின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. இந்த எடுகோள்கள் முக்கியமாகப் பின்வரும் அம்சங்கள் தொடர்பாக உருவாக்கம் பெற்றவை.

- அறிதலுக்கான தேவை
- கற்போனின் சுய எண்ணக்கரு
- அனுபவத்தின் வகிபாகம்
- கற்பதற்கான தயார் நிலை
- கற்றலுக்கான திசைப்படுத்தல்
- ஊக்கல்

இந்த எடுகோள்கள் குழந்தைகளின் கற்றலுக்கும் வளர்ந்தோரின் கற்றலுக்கும் வெவ்வேறானவை ஆகும்.

நீண்ட காலமாக குழந்தைகளின் கற்றலுக்கான கொள்கைகளைத்தான் வளர்ந்தோருக்கான கற்றல் கொள்கை களாகவும் பயன்படுத்தி வந்துள்ளோம். இவ்வகையில் "pedagogy" என்ற ஆங்கிலப் பதம் பயன்படுத்தப்பட்டது. உண்மையில் இப்பதமானது குழந்தை என்பதைக் குறிக்கும் paid என்ற பதத்தினதும் வழிநடத்தல் என்பதைக் குறிக்கும் agogus என்ற பதத்தினதும் சேர்க்கை ஆகும். அதாவது, பிள்ளைக்குக் கற்பிக்கின்ற ஒரு கலையும் விஞ்ஞானமுமே pedagogy என்ப தாகும். அதேவேளை, வளர்ந்தோரின்/ வளர்ந்த கற்போரின் தனித்துவமான இயல்புகள் பற்றிய ஆய்வுகளிலிருந்து வளர்ந்தோர் கற்றலை விபரிப்பதற்கான "andragogy" என்ற பதத்தை உருவாக்கிக் கொண்டனர். மனிதனைக் குறிக்கின்ற andra என்ற பதத்தினதும் agogus என்ற பதத்தினதும் சேர்க்கை யாக அமையும் andragogy வளர்ந்தோர் கற்றுக்கொள்வதற்கு உதவுகின்ற ஒரு கலையும் விஞ்ஞானமும் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளுக்கும் வளர்ந்தோருக்குமான கற்றற் கொள்கைகளின் உருவாக்கத்திற்கான எடுகோள்கள் வெவ்வே றானவை என்ற வகையில் pedagogy இலிருந்து andragogy பல வேறுபட்டு நிற்பதை அறிந்து கொள்ள முடியும். குழந்தைக் கல்விக்கான மாதிரிகையிலே கற்போனின் அனுபவம் கற்றலுக் கான ஒரு வளமாக அவ்வளவு தூரம் கொள்ளப்படுவதில்லை. ஏனெனில், ஆசிரியரின் அனுபவம், பாடநூல் ஆசிரியரின் அனுபவம், கட்புல செவிப்புல சாதனங்களை உருவாக்குப வரின் அனுபவம் ஆகியனவே முக்கியமான அனுபவங் களாகும். எனவே கடத்தப்படும் நுட்பங்களே (transmitted techniques) கற்போனின் அனுபவங்களாகக் கொள்ளப்படு கின்றன. அதாவது, குழந்தைகளுக்கான கற்றல் மாதிரியிலே பாட உள்ளடக்கத்தைப் பெற்றுக் கொள்ளலே கற்றல் என்ப தால், குழந்தை களுக்கான கற்றல் அனுபவங்களானவை பாடப் பொருள் சார்ந்த உள்ளடக்கத்தின் தர்க்க அடிப்படையிலும் ஒழுங்கிலும் வழங்கப் படவேண்டும்.

## அனுபவம்சார் கற்றல்

1960 களில், வளர்ந்தோருக்கான ஐரோப்பிய கல்வியிய லாளர்கள் adragogy என்ற பதத்தை உருவாக்கினராயினும், நவீன வளர்ந்தோர் கற்றலுக்கான கொள்கையின் ஆரம்பகர்த்தாவாக மல்கம் நவுல்ஸ் (Malcolm Knowles) என்பவரே கொள்ளப்படு கின்றார். அவரின் கொள்கையின் பிரதான கோட்பாடு களானவை பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியவை.

குழந்தை நிலையில் பிறரில் தங்கியிருக்கும் நிலைபோல அல்லாமல் தம்மைத்தாமே திசைப்படுத்தி, தமது சொந்த வாழ்விற்காக தாம் மேற் கொள்ளும் தீர்மானங்களுக்குத் தாமே பொறுப்பாளர்கள் என்பதை ஏற்றுக் கொள்ளும் வகையில் வளர்ந்தோரின் சுய எண்ணக்கரு விருத்தியடைந்திருக்கும்.

அனுபவங்களின் திரட்டாக அமையும் அனுபவத் தேட்டமொன்றை ஒவ்வொருவரும் கொண்டுள்ளனர் இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துக்கொண்டே செல்வதோடு, கற்றலுக்கான வளமாக வும் அமைகின்றது.

தொழில் செய்யும் இடத்திலும் வாழிடச்சூழலிலும் பெற்றோர் என்ற வகையில் அமையும் ஒருவரின் சமூக வகி பாகங்களுடன் கற்றலுக்கான தயார்நிலை இணைந்துள்ளது.

கற்றலுக்கான திசைப்படுத்தலில் பாடமையம் குறைந்து செல்வதோடு பிரச்சினை மையம் அதிகரித்துக் காணப்படு கின்றது.

வளர்ந்தோரைப் பொறுத்தவரை உள்ளார்ந்த ஊக்கலே முதன்மையானது இக்கோட்பாடுகளுள் மிகவும் முக்கிய மானது, வளர்ந்தோர் செழிப்பான அனுபவங்களினதும் அறிவினதும் களஞ்சிய மொன்றை ஏற்கனவே கொண்டிருப்பார் கள் என்பது தான். இந்த அனுபவங்கள் மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டு, புதிய கற்றலுக்கான அடுக்குகளாக பயன்படுத் தப்படுகின்றன.

வளர்ந்தோர் கற்றலில் அனுபவத்தின் வகிபாகம் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. குழந்தைகளை விட வளர்ந் தோர் நிலையில் தனியாள் வேறுபாடுகள் அதிகம் காணப்படு கின்றன. இந்நிலையில் அனுபவம்சார் நுட்பங்களை வளர்ந் தோர் கல்வியில் அதிகம் பயன்படுத்தவேண்டியுள்ளது. வளர்ந் தோரிடையே அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள குழுக் கலந்துரையாடல், பிரச்சினை தீர்த்தல், தனியாள் ஆய்வு, ஆய்வு கூட முறைகள் போன்றவற்றை வளர்ந்தோர் கல்வியில் பயன் படுத்த வேண்டும். இதனூடாக சகபாடிக் கற்றலை (peer learning) ஊக்குவிக்க முடியும்.

ஒவ்வொருவரிடத்தும் அனுபவத் தேட்டம் உள்ள போதும் அதன் காரணமாக கற்றல் நிச்சயமாக நிகழும் எனக் கூறமுடியாது. அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டு மெனில் இந்த அனுபவங்களை கொள்கையோடு தொடர்பு படுத்துவதோடு அடுத்துவரும் ஒரு சந்தர்ப்பத்தில் எவ்வாறு மேலும் சிறப்பாகக் கற்றுக்கொள்ளலாம் என்பது குறித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடலையும் மேற்கொள்ள வேண்டும். இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதோடு மீண்டும் மீண்டும் சிந்தனைத் தெறிப்புச் செய்தலையும் தொடரவேண்டும். இவ்வாறான வட்டச் செயன்முறையானது "அனுபவம் சார் கற்றல் வட்டம்" (Experiential learning cycle) என அழைக்கப்படுகின்றது.

"அனுபவம் சார் கற்றல் வட்டம்" என்ற எண்ணக்கரு வானது ஏற்கெனவே பிரேரிக்கப்பட்டதெனினும் அது டேவிட் கொல்ப் (David Kolb) என்பவராலேயே நன்கு விருத்தி செய்யப் பட்டது. அனுபவம் சார் கற்றல் என்பதனை டுயி அவர்கள் பின்வருமாறு விளக்கிக் கூறினார்.

"ஒரு செயலில் ஈடுபட்டுள்ள ஒருவர் அதனை மீள் நோக்குச்செய்து அல்லது பின் திரும்பி நோக்கி, அதனை மதிப்பீடு செய்து, அதிலே பயனுள்ளது எது அல்லது ஞாபகப் படுத்தவேண்டியது எது என்பதைத்தீர்மானித்து, இத்தகவலை வேறொரு செயல் நடவடிக்கையை ஆற்றுவதற்குப் பயன் படுத்தும் போது அனுபம் சார் கற்றல் அல்லது அனுபவவழிக் கற்றல் இடம்பெறுவதாகச் சொல்லப்படும்"


டேவிட் கொல்ப் விருத்தி செய்த அனுபவம் சார் கற்றல் வட்டமானது பின்வருமாறு அமையும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம் சார் கற்றல் மாதிரிகை

கொல்ப் குறிப்பிட்ட அனுபவம் சார் கற்றல் மாதிரிகையின் சற்று விரிவாக்கம் பெற்ற அனுபவம் சார் கற்றல் மாதிரிகையாக பின்வரும் மாதிரிகை அமைகின்றது.




இங்கு குறிப்பிடப்பட்ட அனுபவம்சார் கற்றல் மாதிரிகையிலே உள்ள படிநிலைகள் அனுபவம் பெறல், பகிர்தல், முறைவழியாக்கம் செய்தல், பொதுமையாக்கம் செய்தல் பிரயோகித்தல் என அமைகின்றன. இப்படிநிலைகள் செய்தல், சிந்தனைத் தெறிப்புச் செய்தல் பிரயோகித்தல் எனும் மூன்று பிரதான செயற்பாடுகளுள் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது படிநிலையான அனுபவம் பெறல் என்பது குறித்த செயல்நட வடிவக்கை ஒன்றைச் செய்தலையும் அதனூடாக அனுபவம் பெறுதலையும் குறித்து நிற்கின்றது. இங்கு முதன்மையான எண்ணக்கரு கண்டறிதலுக்கான திட்டமிடலாகும். அதாவது இப்படி நிலையின் குறிக்கோள்கள் கண்டறிதலின் வழியே திசைப்படுத்தப்பட்டிருக்கும். பிரதான குறிக்கோள்களாக கண்டாய்தல் (Explore), பரிசீலித்தல் (examine), உருவாக்கல் (Construct), ஒழுங்கு படுத்தல் (Arrange) போன்றவை அமைந் திருக்கும்.

அடுத்து வரும் இரண்டாவது, மூன்றாவது படிநிலை களாக பகிர்தல், முறைவழியாக்கம் செய்தல் என்பன தனியாள் ரீதியானதும் குழு ரீதியானதுமான சிந்தனைத்தெறிப்புப் படி நிலைகளாகும். பகிர்தல் என்பதன் முதன்மையான எண்ணக்கரு துலங்குதல் ஆகும். என்ன நிகழ்ந்தது என்ற வினாவுக்கு இந்தப் படி நிலையில் விடை காணலாம். அதே போல, முறைவழி யாக்கம் செய்தல், என்பதன் முதன்மையான எண்ணக்கரு கோலங்களைப் பகுப்பாய்வு செய்தல் ஆகும். இந்தப் படிநிலை களில் தலைமைத்துவத்தின் வகிபங்குகளாவன.

- பகிர்தலுக்கும் முறைவழியாக்கம் செய்வதற்கும் போதியளவு நேரம் வழங்குதல்
- சிந்தனையையும் உணர்வையும் தூண்டும் வகையில் திறந்த வினாக்களை பயன்படுத்தல்
- சோடிசேர்ந்து பகிர்தலையும் (pair share) குழு நிலையி லான பகிர்தலையும் உற்சாகப்படுத்துதல்

எனவே இவ்விரு படிநிலைகளிலும் பெறுபேறுகளும் விளைவுகளும் அவதானிப்புகளும் பகிரப்பட்டு அனுபவங் களைக் குறித்து கலந்துரையாடியும் பகுப்பாய்வு செய்தும் சிந்தனைத் தெறிப்புச் செய்தும் முறைவழியாக்கம் செய்யப் படும்.

அடுத்து வரும் நான்காம், ஐந்தாம் படிநிலைகளான பொதுமையாக்கம் செய்தல், பிரயோகித்தல் என்பன தொடர்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கண்டு பிரயோகம் செய்யும் படிநிலைகளாகும். பொதுமையாக்கம் செய்தல் என்பதன் முதன்மையான எண்ணக்கரு அனுமானம் ஆகும். "அவ்வாறெனில் என்ன?" என்ற வினாவுக்கு இந்தப் படிநிலையில் விடை காணப்படும். இவ்விடத்தில் தலைமைத்துவத்தின் அல்லது வழிகாட்டுநரின் வகிபாகமானது குறித்த செயல் நடவடிக்கை பற்றி கற்போர் பெறும் அனுபவங்களை பரந்த உலக அனுபவத்துடன் தொடர்பு படுத்தலுக்கு வழிகாட்டுதல் ஆகும்.

இதேவேளை, பிரயோகித்தல் என்ற படிநிலையின் முதன்மை எண்ணக் கரு பிரயோகம் ஆகும். இங்கு "இனி என்ன செய்யப்போகிறோம்?" என்ற வினாவுக்கு விடைகாண முயற்சிக் கப்படும். இவ்வகையில் தலைமைத்துவத்தின் அல்லது வழி காட்டுநரின் வகிபங்கு கற்போர் தாம் கற்றுக்கொண்டவற்றை புதிய நிலைமைகளில் பிரயோகிப்பதற்கான வழிகளைக் கண்டறிவதற்கு அவர்களுக்கு வசதியளித்த லாகும்.

அனுபவம்சார் கற்றல் மாதிரிகையானது பல்வேறு திறந்த வினாக்களுக்கு விடை காண்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்கி, ஒரு தனிச்செயல் நடவடிக்கையில் அல்லது குறுந் தொடர்ச்செயல் நட வடிக்கையொன்றில் பல்வேறு திறன் களை ஒன்றிணைத்துச் செல்கின்றது. இத்திறன்களுள் வாழ்க்கைத் திறன்கள், செயல் திட்டத்திறன்கள், உள்ளடக்கம் சார் திறன் கள், விஞ்ஞான செயன்முறைத் திறன்கள், பிரயோகத்திறன்கள், தலைமைத்துவத்திறன்கள், சேவைக் கற்றல் திறன்கள் போன்றவை உள்ளடங்கும்.

**அனுபவவழிக்கற்றல் பற்றிய சில முன்மொழிவுகள்**

- கற்றலினது அடித்தளமும் கற்றலுக்கான தூண்டியும் அனுபவமே ஆகும்
- கற்போர் தமது அனுபவங்களைச் செயலூக்கத்துடன் கட்டியெழுப்பு கின்றனர்.
- கற்றல் என்பது சமூகரீதியாகவும் கலாசார ரீதியாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்பப் படுவதாகும்.

- கற்றல் என்பது ஒரு முழுமையான செயன்முறையாகும்.
- கற்றலானது அது இடம்பெறும் சமூகமனவெழுச்சிச் சூழமைவின் செல்வாக்குக்கு உட்பட்டதாகும்.

இதுவரை கூறியவற்றைச் சுருக்கமாக நோக்குமிடத்து, அனுபவ வழிக் கற்றல் அல்லது அனுபவம் சார் கற்றல் என்பதன் அடிப்படை அனுபவத்தைப் பரிசீலிப்பதன் மூலம்கற்றலைக் கட்டியெழுப்பலாம் என்பதாகும். வளர்ந்தோர் கல்விக்கான கல்வியாளர்கள் சிலர், கற்போர் தமது அவ்வனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளவும் ஊக்கமளிக்கும் வகையில், பல்வேறு கற்றல் - கற்பித்தல் நுட்பங்களின் வடிவங்களைப் பயன்படுத்தி அனுபவங்களைப் பெறுவதற்கான பயிற்சிகளை வழங்கி, அப்பயிற்சிகளை மீள்நோக்குவதன் மூலம் மாணவர்கள் கற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுக் கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5S அணுகுமுறை:
# 5S ஒழுக்கமும் அதன் தூண்களும்

**5S என்றால் என்ன?**

அலுவலகத்திலோ, வேலை செய்யும் இடத்திலோ, வீட்டிலோ அல்லது வேறு எந்த இடத்திலோ தரமான சுற்றுச் சூழலை உருவாக்கி, அதனைப் பேணுவதற்குப் பயன்படுத்தும் நுட்பம்/ஒழுக்கம்/அணுகுமுறை 5S ஆகும். 5S என்பது ஐந்து ஜப்பானியச் சொற்களின் சுருக்கமாகும். இந்த ஐந்து சொற்களும் அவற்றின் ஆங்கில, தமிழ்க்கருத்துகளும் பின்வருமாறு:

1. SEIRI (செய்ரி) - SORT தேவையற்றதை அப்புறப்படுத்தல்

தேவையற்றதை அப்புறப்படுத்தல் என்பது குறித்த இடத்திலுள்ள (அலுவலகத்திலோ, வேலை செய்யும் இடம், வீடு) பொருட்களை தேர்ந்து, தேவையானதை விடுத்து தேவையற்றதை அப்புறப்படுத்தலே இதுவாகும். இதன் பிரதான நோக்கம் குழப்பமான தோற்றத்தை இல்லாதொழித்து, ஒழுங்கு முறையில் இடத்தை சிக்கனப்படுத்தி, வேறு தேவைக்குப் பயன் படுத்துவதாகும். எப்போதாவது தேவை ஏற்படும் என்ற நோக்கோடு பொருட்கள் எல்லாவற்றையும் வைத்துக் கொள்ளாது தற்போதைய தேவைக்குரியதை மாத்திரம் வைப்பதால் அவ்விடத்தை வேறு தேவைக்குப் பயன்படுத்துவதே சிறந்த பலனைத்தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. SEITON(செய்ரன்) - SYSTEMATISE ஒழுங்கு முறையாக வைத்தல்

தேவைகேற்றவாறு பொருட்களையோ/ கருவிகளையோ(Tools) நேரத்தை மீதப்படுத்தி இலகுவாகவும் விரைவாகவும் எடுக்கக் கூடியவாறு பொருட்களை வைத்துக் கொள்ளலே முறையாக வைத்துக் கொள்ளல் எனலாம். ஏதாவது குழப்பம் இருப்பின் அவை உடனே சரி செய்யப் படுவதோடு, இம்முறை மூலம், ஜப்பானியரின் நோக்கம், எத்தகைய பொருட்கள் எந்த இடத்தில் இருந்தாலும் ஆகக்கூடிய நேரம் 10 செக்கனில் எடுக்க கூடியதாக இருக்க வேண்டும் என்பதே ஆகும்.

3. SEISO(செய்சோ) - SHINE(SANITIZE) தரப்படுத்தல் (அங்கீகரித்தல்)

எமது வேலைத்தளமோ அல்லது வேறு எந்த இடமாயினும் எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்ளலே SEISO ஆகும். சுத்தமானதும் ஒழுங்கானதுமான வேலைத்தள இடச் சுற்றாடலே தொழிலாளர்களை நன்றாக ஊக்குவிப்பதோடு மற்றவர்களை கவரக்கூடியதாகவும் அதன் மூலம் வெளியிலிருந்து வரும் வேலையை நிச்சயமாக கூட்டுவதாகவும் அமையும். அத்துடன், தனிப்பட்டவரின் உடல் ஆரோக்கியம் பேணப்பட்டு, சுத்தமான பொருட்கள்/ கருவிகள்(Tools) எப்பொழுதும் விபத்துக்கள் குறைந்ததாகவும் அவற்றின் பாவனை நீண்டதாகவும் காணப்படும். பொருட்களின் கண்ணுக்குத் தெரியாத அழுக்குகள் கூட படியாதவாறு வைப்பதன் மூலம் எல்லாப்பொருட்களையும் உயர்தரத்தில் வைத்துக் கொள்ளப் பயன்படுகின்றது.

4. SEIKETSU(செய்கெற்சு)-STANDARDIZE தரப்படுத்தல் (அங்கீகரித்தல்)

மேற்குறிப்பிட்ட 3S முறைகளையும் செயற்படுத்துகின்ற போது பெறப்படும் முறையான பிரதிபலனை அறிந்து தொடர்ந்தும் அவற்றை நடைமுறைப்படுத்தலே இதுவாதலால் மிகக்கடினமான ஒரு முறையாகவே 4ஆவது S (அங்கீகரித்தல்) காணப்படுகின்றது. இவ்வளவு காலமும் செயற்படுத்தி வந்த 3S

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளிலுள்ள குறைகள் அவற்றின் பயனை சீரழியவைப்ப தால் அதன் காரணத்தை அடையாளம் காணவும், அவற்றிற் கான ஒழுங்கான முறையை கடைப்பிடிக்கவுமே இந்த நான்காவது S ஆன தரப்படுத்தல் முக்கிய இடம் வகிக்கின்றது.

5. SHITSUKE(சிற்சுகே) - SUSTAIN(SELF-DISCIPLINE) சுய ஒழுக்கம் (பயிற்சி)

எந்தவொரு வேலையையும் செய்யும்போது அதனைப் பொறுப்பேற்று முற்றுமுழுவதாக ஈடுபட்டு ஒழுங்குடனும் கட்டமைப்புடனும் செய்தலே 5ஆவது S ஆகும். இவற்றை வேறு விதமாகக் கூறுவதானால் முன்குறிப்பிட்ட 4 S முறை களிலும் செய்ய வேண்டியவைகளை அதே ஒழுங்கில் கடைப் பிடித்து வருவதே இதுவாகும்.

இவற்றின் வெற்றிக்கு ஒழுங்கும் தன்னடக்கத்துடன் வேலை செய்தலுமே கட்டாயமானதாகும். ஏனென்றால், தன்னடக்கம் என்பது 5S முறையில் (மூலப்பொருள்) இயந்திர மாகக் காணப்படுகின்றது. ஒவ்வொருவரும் தன்னடக்கத்தை ஏற்படுத்தி, தங்கள் விருப்புடன், பயன்தரக்கூடிய பழக்க வழக்கங்களையும், சரியான விதிமுறைகளையும் பின்பற்றி நடந்து கொள்ளப் பழக வேண்டும்.

மேலும், எந்தப் பொருட்களையோ/ தொழிலையோ அதன் பெறுமதியையும் பொறுப்பையும் தெரிந்து விருப்புடன் செய்யப்பழக வேண்டும். இதன் மூலம் சிறிய காலத்திலே இதனை அன்றாட வாழ்வில் ஓர் அங்கமாக மாற்றிக் கொள்ள வேண்டும். யாவரும் தன்னடக்கத்துடனும் ஊக்கத்துடனும் வேலை செய்வதன் மூலம் இந்த 5S திட்டத்தில் எதிர்பார்க்கும் சிறந்த அனுகூலத்தையும் கடின உழைப்பையும் பெறக்கூடிய தாக இருக்கும்.

இந்த ஐந்து 'S'களும் 5 S அணுகுமுறையின் ஐந்து தூண்கள் என எடுத்துரைக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



## 5 S அணுகுமுறையின் முக்கியத்துவம்

இன்று உலகம் முழுவதும் பல்வேறு நிறுவனங்களிலும் புரட்சிகரமான மாற்றத்தை விளைவிக்கும் ஒரு முறையாக அல்லது பராமரிப்பு முறையாக இது கைக்கொள்ளப்படுகின்றது.

சேவை புரியும் நிறுவனங்களை ஒழுங்குமுறையாக வைத்திருப்பதற்கும் அவற்றின் விருத்திக்கும் விஞ்ஞான பூர்வமான முறையில் இது உதவுகின்றது.

விளங்கிக் கொள்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் தொடர்ந்து பேணுவதற்கும் இது இலகுவானது.

இலங்கையிலும், எமது நாளாந்த வாழ்வுக்குப் பொருந்துவதாக, ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாக இருப்பதுடன், மிகவும் பிரபல்யம் அடைந்து வருகிறது.

## உயர் தரத்திலான 5S இன் பங்களிப்புகள்

உயர்தரத்திலான 5S அணுகுமுறையானது PQCDSM என்பதால் குறிக்கப்படும் ஒவ்வொன்றுக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

High Productivity உயர் உற்பத்தி/ பெறுபேறு

High Quality உயர்ந்த தரம்

Low in Cost குறைந்த செலவு

Accurate in Delivery செம்மையான விநியோகம்

Safe for people to work பணிசெய்யப் பாதுகாப்பு

High in Morale உயர் அறப்பண்பு / தார்மிகம்

## 5S அணுகுமுறையால் ஏற்படும் நலன்கள்

- உள்ளுணர்வில் மாற்றம்
- நிறுவனத்தின் உள்ளும் புறமும் மாற்றம்
- பண்டங்களின், சேவைகளின் தரம் விருத்தி
- பாதுகாப்பு விருத்தி
- பாவனையாளர்களின் திருப்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இயந்திரங்களின் திருத்தம், புதுப்பித்தல் குறைவடைதல்
- சேதாரங்கள் குறைவு
- சேவை உணர்வு, திருப்தி என்பவற்றைக் கொண்ட பணியாளர் குழுவை உருவாக்கல்
- பலருடைய பங்களிப்பையும் அவர்களின் உழைப்பையும் ஏற்றுக் கொள்ளுதல்
- தேவையான இடத்தினை உச்ச அளவில் பயன்படுத்தலும் அழகாக வைத்திருத்தலும்
- தேவையற்ற பொருட்களை இருப்பில் வைத்திருப்பதைத் தவிர்த்தல்
- தரமான உற்பத்தியையும் செயற்றிறனையும் உறுதிப்படுத்தல்
- விபத்துகளைத் தவிர்த்தல்
- மூலப் பொருட்களை சிறந்த முறையில் பயன்படுத்துல்

**உயர்தரத்திலான 5S இன்று பிரபல்யம் அடைந்து வருவதற்கான உறுதியான ஏழு காரணங்கள்**

- பணியிடம் தூய்மையானதாகவும் சிறந்த ஒழுங்கமைப்புடையதாகவும் மாறும்.
- பணியிடத்தை இயக்குவது இலகுவானதாயும் பாதுகாப்பானதாயும் இருப்பதோடு, கட்புலனாகக்கூடிய சிறந்த பெறுபேறுகளை அவதானிக்கக் கூடியதாகவும் மேம்பாடடையும்
- இத்தகைய பெறுபேறுகள் பணியிடத்தில் புத்தாக்க முயற்சிகளை முகிழ்ந்தெழச் செய்யும்.
- இயற்கையாகவே பணியாளர்கள் சிறந்த ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுவர்.
- தூய்மையானதாகவும் சிறந்த ஒழுங்கமைப்பாகவும் உள்ள தமது பணியிடம் தொடர்பில் பணியாளர் ஒவ்வொருவரும் பெருமை கொள்வர்.
- பணியிடத்தில் விளைதிறன் தொடர்ச்சியாக உயர்வடைந்து செல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பணியிடத்தில் பணியாற்றுவதில் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியடைவர்.

**5S இல் மாற்றம் - 6S**

- 6S என்பது. விரயங்களைக் குறைத்து உற்பத்தியை உச்சமாகப் பெறுவதற்காக, 5Sஅணுகுமுறையிலிருந்து உருவாக்கப்பட்டது.
- இதன் சென்முறைகளாவன:
  - ஒழுங்கையும் நேர்த்தியையும் உருவாக்கிப் பேணுதல்
  - நிலைபேறான தொழிற்பாட்டு விளைவுகளை அடைவதற்காக கட்புல சமிக்ஞைக் குறிப்புகளைப் பயன்படுத்தல்
  - குறைபாடுகளைக் குறைத்தலும் ஆபத்துகளை இயன்றவரை தவிர்த்தலும்
- 6S என்பது, 5S அணுகுமுறையின் ஐந்து தூண்களையும், மேலதிகமாக பாதுகாப்பு(Safety) எனும் தூணையும் பயன்படுத்துகிறது.
- சூழல், சுகாதாரம், பாதுகாப்பு(EHS) என்பது 6S நடைமுறையின் ஒன்றிணைந்த அம்சமாக இருக்க வேண்டும்.

**சில புதிய சொற்கள்**

- Red Tag (சிவப்பு விபர அட்டை)
  - வேலை இடத்தில் வேண்டப்படாத பொருட்களுக்கு சிவப்பு விபர அட்டை இணைத்து, அதனை அகற்றும் சென்முறை.
- Lean Manufacturing (லீன் உற்பத்திமுறை)
  - செயன்முறைகளில் தேவைப்படாத, கழிவுப் பொருட்களை அகற்றுவதன் மூலம் தொடர்ச்சியான முன்னேற்றத்தை நாடும் அடிப்படைக் கோட்பாடுகள்
- Kaizen(கைசன்) முன்னேற்றம் அல்லது எதனையும் சிறந்ததாக ஆக்குவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Kaizen Event and 5S Event (கைசன் நிகழ்ச்சியும் 5Sநிகழ்ச்சியும்)
    - குறிப்பான இடத்தில் அல்லது செயன்முறையில் மேற் கொள்வதற்குத் திட்டமிடப்பட்ட முன்னேற்றங்கள் (வழமையாக, 3-5 நாட்கள்). 5S நிகழ்ச்சிகள் குறிப்பாக 5Sமுன்னேற்றங்களை மையப்படுத்தியதாக இருக்கும்.
- Muda(மூடா) தேவைப்படாத, கழிவுப் பொருள;(Waste) அல்லது வீண் விரயப்பொருள்
- Gemba(கிம்பா) - வேலை இடம்.

**வீண் விரயப் பொருள்(Muda Waste) என்றால் என்ன?**

- மேலதிக உற்பத்தி(Overproduction)
- மூலப் பொருட்களுக்காக, யந்திரங்களுக்காக, அறிவுறுத்தல்களுக்காகக் காத்திருத்தல்
- ஆட்களை அல்லது பொருட்களை இடம் விட்டு இடம் கொண்டு செல்லுதல் அல்லது நகர்த்துதல்
- தேவைக்கு அதிகமான விவரப் பட்டியல்(inventory)
- வினைத்திறனற்ற யந்திர உற்பத்தியும் தொழிற்பாடும்
- உற்பத்திசார் குறைபாடுகள்
- நிறைவாக இல்லாத பராமரிப்பு
- தவறான தொடர்பாடல்
- குறைபாடுள்ள அறிவுறுத்தல்கள்

**கைசன் கோட்பாடுகள்**

- முன்னைய, தவறான எடுகோள்கள் யாவற்றையும் விலக்கிக் கொள்ளல்
- சாக்குப்போக்குகள் சொல்லாமல், ஒன்றை நிகழச் செய்வதற்கான வழிகளை நாடுதல்
- "பூரணத்துவம்" என்பதற்காகக் கவலைப்பட்டுக் காத்திருக்காது, ஓரளவு திருப்தியுடன் கருமத்தை தொடங்குதல்
- முன்னேற்றமான செய்கைகளுக்கு அதிகம் செலவு செய்யாதிருத்தல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சில கருமங்களில் தவறுகள் ஏற்படும் போது, உடனடியாகத் திருத்திக் கொள்ளல்
- கருமங்களில் நெருக்கடி ஏற்படும்போது சிறந்த எண்ணங்களையும் வழிகளையும் உருவாக்கிக்கொள்ளல்.
- அடிப்படையான, மூல காரணத்தை அறிந்து கொள்வதற்கு, ஐந்து முறை "ஏன்" என வினாவுதல்
- ஒருவரிடமிருந்து மதிப்பீடுகளை, அறிவைப் பெறு வதை விடுத்து, பத்துப்பேரிடமிருந்து நல்ல கருத்துக்களைப் பெறல்.
- கைசன் நடவடிக்கைகளை ஒரு போதும் கைவிடா திருத்தல்

பொழிப்பு

- 5S அல்லது 6S என்பது ஒவ்வொருவருக்குமுரியது.
- உங்கள் வேலையிடத்தை ஒவ்வொரு நாளும் ஒழுங்கு படுத்தி, சுத்தப்படுத்தி, முதல்நாள் இருந்ததை விட இலகுவாக வும் பாதுகாப்பாகவும் இருக்கக்கூடியதாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- உங்களுடைய எண்ணங்களை, கருமங்களை உங்களுடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் உங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.
- 5S அல்லது 6S தொடர்பான களஉலாக்களிலும் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு தொண்டாற்ற வேண்டும்.
- தொடர் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டும்.
- பூச்சிய விரயம், பூச்சியக் குழப்பநிலை என்பவற்றை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளிக்கைத்திறன்கள்
## Presentation Skills

### ஆரம்பம்

அளிக்கை செய்தல் என்பது பயணமொன்றில் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை உங்கள் அவையினரை அழைத்துச் செல்லலை ஒத்தது. இப்பயணத்தில் உங்களுடன் இணைந்து புறப்பட முன்னர், சில அடிப்படையான தகவல்களை உங்கள் அவையினர் பெற்றுக்கொள்ள விரும்புவர். அத்தகவல்களை அவர்கள் பெற்றுக்கொண்டதும் பயணம் நெடுகிலும் கவனமாக நீங்கள் சொல்பவற்றைச் செவி மடுப்பதற்கு தயாராகவே, உங்கள் பக்கமாகவே இருப்பர். இத்தகவல்களை நான்கு வினாச்சொற்களின் கீழ் வழங்கலாம்:

**யார்? ஏன்? என்ன? எவ்வாறு?**

**யார்? Who** - முதலில் உங்களை அறிமுகம் செய்ய வேண்டும். உங்களைப்பற்றியும் உங்கள் தொழில் பற்றியும் நீங்கள் கொடுக்கும் தகவல்களும் நீங்கள் பயன்படுத்தும் சம்பிர தாயங்களும் உங்களின் அளிக்கையைப் பொறுத்ததாகும்.

**ஏன்? Why** - அவையினருக்கு உங்கள் அளிக்கையின் நோக்கத்தை எடுத்துரைத்து, உங்களைச் செவிமடுப்பதற்கான காரணத்தையும் கூற வேண்டும். "ஏன்" என்பது முடிவுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திடன் தொடர்பு பட்டுள்ளமையினால், உங்கள் அளிக்கை யில் மிகவும் பிரதானமான பகுதியாகும்.

என்ன? What - "என்ன" என்பது உங்கள் அளிக்கையில் நீங்கள் குறிப்பிடவிருக்கும் பிரதான விடயங்களையும் அவற்றின் ஒழுங்கையும் கூறவதாகும்

எவ்வாறு? How - உங்கள் அவையினரின் நிலையிருந்து உங்களை நோக்கி, அவையினரின் தேவைகளைக் கவனிப்பதற்கு "எவ்வாறு" என்பது உதவுகின்றது. அவையினருக்கு வேறு தேவைகள் இருப்பின், பொதுவாக உங்கள் அளிக்கையைக் கவனிக்கமாட்டார்கள். எனவே, உங்கள் அவையினரை ஈர்க்கும் வகையில், அவையினரின் தொடக்கநிலை வினாக்களுக்கு விடை அளித்தல் அவசியம்.

அளிக்கைக்கான ஆரம்பம் இவ்விடயங்களை உள்ளடக்குவதாக இருக்கவேண்டும். அதேவேளை, நீண்டதாக இருக்கக் கூடாது. 90 செக்கன்களுக்குள் இந்த அறிமுகத்தை நிறைவுசெய்வது சிறந்தது.

குறிக்கோள்கள்

இந்த அளிக்கையின் முடிவில் பங்குபற்றுநர்கள் பின்வருவனவற்றை ஆற்றக்கூடியவர்களாக இருப்பார்கள்:

- பார்வையால் ஈர்த்தல், உடல்மொழி, குரல் என்பவற்றை அறிக்கையொன்றில் நன்கு பயன்படுத்தல்.
- அளிக்கைக்கான விடய உள்ளடக்கத்தை தயாரிப்பதில் 3A முறையைப் பிரயோகித்தல்.
- சிறந்த போதனை வடிவமைப்பு இயல்புகளைக் காட்டக் கூடிய கட்புல சாதனங்களை விருத்தி செய்தல்.
- வினாக்களுக்கு பயனுறுதியுள்ள வகையில் விடையளித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவான தேர்ச்சிகள்

- ஆளிடைத்தொடர்பாடல்
- வாண்மைத்துவம்
- பயிற்சி அடிப்படையிலான கற்றலும் முன்னேற்றமும்.

மேடையில் நிற்கும் போது திடீரென ஏற்படும் கலவரம் தொடர்பாகக் கவனத்திற்கொள்ள வேண்டியவை

- அவையினர் சிறுதவறுகளை பெரிது படுத்த மாட்டார்கள் என்பதை நினைவிற்கொள்ளல்.
- மனக்கலக்கம் கட்புலனாகாது என்பதை உணர்தல்.
- மூச்சுப்பயிற்சி.
- வசதியான இடத்தில் நின்று ஆரம்பித்தல்.
- ஆரம்பத்திலேயே அளிக்கை நிகழ்விடத்தை பரிசீலித்தல்.
- விடயத்தில் கவனத்தைக் குவித்தல்.
- நன்கு தயாரிக்கப்பட்ட அறிமுகத்துடன் மெதுவாக ஆரம்பித்தல்.
- உறுதியான, தெளிவான முடிவுரையுடன் நிறைவு செய்தல்.
- நன்கு ஆயத்தப்படுத்திப்பயிற்சி பெற்றிருத்தல்.

பார்வையாளர்களை ஈர்த்தல்

- எப்போதும் பார்வை ஈர்ப்பில் அவையினரை வைத்திருத்தல்.
- அவையினருடன் பார்வைத்தொடுகையில் உள்ள போது நீங்கள் சொல்வதைக்குறித்த மாற்றங்கள் அவையினரிடம் வெளிப்படுத்தப்படும்.
- பார்வை ஈர்ப்பினால் அவையோர் கூடுதலான ஈடுபாட்டைக் காட்டுவர்.

உடல்மொழி

உடல்மொழி பின்வருவனவற்றை ஆற்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

- சாய்ந்து நிற்றல், ஓரிடத்திலேயே உறுதியாக நிற்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உடம்பைக் குலுக்குதல், மெதுவாக சாய்ந்தாடுதல்.
- அசையாது நிற்றல்.
- மீண்டும் மீண்டும் ஒரே வகையான சைகையைப் பயன்படுத்தல்.
- விரல் நகங்களைக் கடித்தல் அல்லது பரிசீலித்தல்.
- கைகட்டிக் கொண்டு நிற்றல்.
- பேனை, பென்சில் போன்றவற்றை கையில் வைத்துக் கொண்டு தட்டுதல், "கிளிக்" செய்தல்.
- எதையாவது மென்று கொண்டிருத்தல்.
- ஒலிவாங்கியை நோக்கி உடம்பை வளைத்தல்.
- தேவையின்றி, குறிப்பு எழுதிய தாள்களைக் கலைத்தல்.
- கழுத்து "ரையை" இறுக்குதல், விரல்களை நொடித்தல்.
- திறப்புக்கோர்வையை கையில் வைத்துக் கொண்டு சுழற்றுதல் அல்லது ஒலிக்கச்செய்தல்.

குரல்

குரல் தெளிவு தொடர்பானவை.

- தெளிவாக உரைத்தல், உச்சரிப்பு.
- உரையின் போதான சிறு இடைவெளிகள்.
- தாழ்ந்த மட்ட இலக்கணத்தை தவிர்த்தல்.
- ஒரே வகையான உணர்ச்சி வெளிப்பாடுகளைத் தவிர்த்தல்.

குரல் மாற்றம் தொடர்பானவை.

- பேச்சின் வேகம். - பேச்சின் உரப்பு.
- தொனி. - அழுத்தம்.

விடயத்தானத்தைத் தயாரித்தல்

3A களில் கவனம் செலுத்த வேண்டும்.

- அவையினரைப் (AUDIENCE) பகுத்தாய்தல்.
- அவையினரின் செயல் நடவடிக்கையை (ACTION) வரையறை செய்தல்.
- அவையினர் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றாதாரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை (ARGUMENT) ஒழுற்குபடுத்தல்.

காட்சித்துணைக்கருவிகள்

- பின்வரிசையிலிருந்து வாசிக்கக் கூடிய எழுத்தின் அளவு.
- 6 வரிகள்.
- ஒரு வரியில் 7 சொற்களுக்கு மேற்படாமல்.
- தெளிவு.
- சிவப்பு, நிழற்றல், அதீத உயிரியக்கம் (Animation) போன்றவற்றைத் தவிர்த்தல்.
- குழப்பமில்லாத பின்னணி.

வினாக்களும் விடைகளும்

வினாக்களுக்கு ஆயத்தமாயிருத்தல்.

- ஒத்திகை பார்த்தல்
- விடைகளைச் சுருக்கமாகக் கையாளல்.
- எதிர்மறையான சொற்களையும் வினாக்களையம் தவிர்த்தல், நிபுணர்களைத் தவிர்த்தல்.
- வினாவைத் தெளிவுபடுத்தல்.
- அவையினருடன் தர்க்கித்தலைத் தவிர்த்தல்.
- வினாவை முழுமையாகக் கேட்டல்.
- விடையளிக்குமுன்னர் சிறிய இடைவெளிவிடல்.
- வினா எழுப்பியவலை முதலில் நோக்கி, பின்னர் ஏனையோரையும் நோக்குதல்.

நிறைவு செய்தல்

- அளிக்கையை நிறைவு செய்வதற்கான சமிக்ஞையை வழங்குதல்.
- ஏற்கனவே செய்யப்பட்டவற்றை சுருக்கமாக பொழிப்புச் செய்தல்.
- அளிக்கைமூலம்மேற்கொள்ளும்முடிவை வெளிப்படுத்தல்.
- நன்றி சொல்வதன் மூலமும் கையேடுகளை வழங்கு வதன் மூலமும் நிறைவுசெய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களின் உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்கான "கைசன்"(KAIZEN)

"கைசன்"(Kaizen) என்பது ஒரு ஜப்பானியச் சொல்லாகும். இது ஒரு கருமம் சார்பாக தொடர்ச்சியாக இடம் பெறும் சிறு சிறு முன்னேற்றத்தைக் குறிக்கின்றது. எதனையும் சிறந்ததாக ஆக்குவதே கைசன் என்ற பதத்தின் உட்பொரு ளாகும்.

ஏனைய ஜப்பானிய முகாமைத்துவக் கருத்துக்களைப் போல, கைசன் என்ற பதத்தால் குறிக்கப்படும் செயன்முறையும் இன்று பிரபல்யம் அடைந்துவருகின்றது. இதனால், இன்று பலராலும் உச்சரிக்கப்படும் ஒரு சொல்லாகவும் கைசன் என்ற பதம் விளங்குகின்றது. பொருளொன்றின் தரத்தைப் பேணுவதி லும் நாம் செய்யும் கருமம் ஒன்றை முன்னேற்றகரமாகச் செய்வதிலும் கைசன் கோட்பாட்டைப் பிரயோகிப்பதன் மூலம் அதிக நன்மைகளைப் பெறலாம்.

பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரை, அவர் களின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு கைசன் கோட்பாடு உதவமுடியும். நவீன முகாமையாளர்களின் முக்கிய நடைமுறை யொன்றாக இன்று மாற்றமடைந்து வரும் கைசன் கோட்பாடு பற்றி அறிந்து கொள்வதில், முகாமையாளர்கள் மாத்திரமன்றி வர்த்தகர்களும் கல்வியாளர்களும் கூட ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.

செல்வச்செழிப்படைந்துள்ள மேற்கத்தைய நாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை மேம்படுத்துவதற்காக விளைவு நோக்கிய முகாமை (Resuit Oriented Management) என்ற முகாமைத்துவ அணுகு முறையைக் கைக்கொண்ட வேளை, ஜப்பானியர்கள் தமது முன்னேற்றத்திற்காக கைசன் முறையைப் பயன்படுத்தினர். இது செயன்முறையை நோக்கிய முகாமை (Process oriented management) அணுகுமுறை என்பதால், நடைமுறையில் கருமங் களை ஆற்றுவதிலுள்ள படிநிலைகளை மேலும் மேலும் செழுமைப்படுத்தி நல்ல விளைவுகளைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. எனவே ஒரு நிறுவனத்திற் பணிபுரியும் ஒவ்வொரு பணியாளரும் தமது கடமையில் படிப்படியான முன்னேற் றத்தை எய்துவதை கைசன் அணுகுமுறை வலியுறுத்துகின்றது.

**கைசனுக்கான எளிய உதாரணங்கள்**

கைசனுக்கான பின்வரும் எளிய உதாரணங்களை நோக்குவோமாயின், அவை எமக்கு ஏற்கெனவே தெரிந்தவை யாக இருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

*01.* பாரம்பரியமாக இடம்பெற்றுவரும் மங்கல விளக்கேற்றல் நிகழ்வில் தேங்காய் எண்ணெயில் தோய்ந்த திரிகளை ஏற்றிவந்துள்ளோம். ஆனால், இன்று அத்திரிகளில் சிறிய கற்ப்பூரக் கட்டிகளை வைத்து விளக்கேற்றுவதன் மூலம் மங்கல விளக்கேற்றலை இலகுவாக்கியுள்ளோம்.

*02.* வழமையாக நாம் தேங்காய் துருவுவதற்காகப்பயன் படுத்தி வந்த திருகுவலையில், அலகானது ஒரு பலகையில் நிலைப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் இன்று கைப்பிடியுடன் கூடியதாக திருகுவலையின் அலகினை அமைத்து, ஒரு மேசை ஓரத்தில் அதனை பொருத்திய பின் கைப்பிடியைச் சுழற்றுவதன் மூலம் தேங்காய் துருவுதலை இலகுவாக்கியுள்ளோம்.

*03.* தொலைபேசி வாங்கியை (Receiver) அதனிடத்தில் வைக்கும் போது எழும் ஒலியைத் தவிர்ப்பதற்காக சிறிய துணித் துண்டுகளை வாங்கியை வைக்கும் இடத்தில் வைப்பதன்மூலம் சத்தமின்றி ஒலி வாங்கியை வைக்க முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக, பல்வேறு உதாரணங்களையும் நோக்கும் போது, கைசன் அணுகுமுறையானது எந்த ஒரு வேலையையும் சிறப்பாகச் செய்வதை ஊக்குவிப்பதைக் காணலாம். ஒரு வேலையை அல்லது கருமத்தை எவ்வளவுதான் சிறப்பாகச் செய்தாலும் அடுத்தமுறை அதே வேலையை மேலும் சிறப்பாகச் செய்யமுடியும் என்ற நம்பிக்கையை கைசன் அணுகுமுறை வளர்க்கின்றது.

**கைசன் அணுமுறையின் அடிப்படையான நம்பிக்கைகள்**

கைசன் கோட்பாட்டின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தவையென நான்கு நம்பிக்கைகளைக் குறிப்பிடுவார்கள். அவையாவன:

01. எப்பொழுதும் ஒரு வேலையைச் சிறப்பாகச் செய்வதற்கு இடம் இருந்துகொண்டே இருக்கும்

02. ஒரு வேலையை இதுவே முழுமையான வேலையென நாம் என்றுமே திருப்தியடைய முடியாது.

03. ஒரு சிறிய முன்னேற்றமாயினும் அதனைக் கருத்திற் கொள்ள வேண்டும், அது பெறுமதியானது என்ற எண்ணம் ஏற்பட வேண்டும்.

04. சிறு சிறு முன்னேற்றமாயினும் அது தொடர்ந்து இடம்பெற வேண்டும், முன்னேற்றத்துக்கு முடிவு இல்லை.

**கைசனும் உற்பத்தித்திறனும்**

உற்பத்தித்திறன் (Productivity) எனும் போது, பொருட் களை உற்பத்தி செய்யும் திறமை மாத்திரமன்றி, நாம் செய்யும் ஒவ்வொரு கருமத்தையும் சேவையையும் சிறப்பாக ஆற்றுவதை யும் குறிப்பதாகும். உற்பத்தி என்பது வேறு, உற்பத்தித்திறன் என்பது வேறு. உற்பத்தி நடைபெறும் எல்லா இடங்களிலும் உற்பத்தித்திறன் இருக்கவேண்டும் என்பதில்லை. விளை திறனும் (Effectiveness) வினைத்திறனும் (Efficiency) ஒன்றிணையும் போது உற்பத்தித்திறன் உருவாகின்றது என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைசன் செயற்பாடுகளினூடாக எமது சொந்த உற்பத் தித்திறனை மேம்படுத்தலாம். ஒரு குழுவிலுள்ள ஒவ்வொரு வரும் சொந்த உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்காக உழைக்கும் போது, குழு உற்பத்தித்திறன் மேம்பாடு கொள்வதோடு, தேசிய உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்கும் வழிவகுக்கும்.

அபிவிருத்தியடைந்த நாடுகள் உற்பத்தித்திறனுக்கு மதிப்பளிக்கும் அளவுக்கு, இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மதிப்பளிக்காமையினாலேயே இந்நாடுகளில் பல்வேறு உற்பத்தியும் வெளியீடும் மிகவும் மந்தநிலையில் உள்ளன. இதன் பேறான விளைவுகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

01. நிறுவனங்களில் அலுவலகங்களில் பல வேலைகளும் தாமதம் அடைகின்றன.

02. பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் சேவைகள் கிடைப்ப தில்லை.

03. எதிர்பார்க்கப்படும் புலப்பாடு அல்லது விளைவு (Out come) குறைவடைவதோடு அதன் காரணமாக பயன் அல்லது இலாபமும் குறைவடைகின்றது.

ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்கு வழமையாக எடுக்கும் நேரத்தைவிட குறைந்த நேரத்தில் அக்கருமத்தைச் செய்து முடிக்கும்போதே வினைத்திறன் உயர்வடைவதோடு உற்பத்தித்திறனும் அதிகரிக்கும். இவ்வாறு குறைந்த நேரத்தில் கருமங்களைச் செய்வதற்கு கைசன் அணுகுமுறை உதவவல்லது. ஒரு வேலையைச் செய்வதற்குச் சுலபமானதும் சரியானதுமான வழியைக் கண்டுபிடித்துக் கடைப்பிடித்து வரும்போது வினைத்திறனும் உற்பத்தித்திறனும் அதிகரிக்கும்.

சிலர் ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்யக்கூடிய ஆற்றலைக் கொண்டிருத்தல் உற்பத்தித்திறனுக்கான ஓர் எடுத்துக்காட்டாகும். உதாரணமாக, பல் துலக்கிக்கொண்டோ அல்லது குளித்துக்கொண்டோ இருக்கும்போதே, ஒருவர் அன்றைய வேலைகளையும் திட்டமிடக்கூடியவராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால் அவர் உற்பத்தித்திறன் மிக்கவராவார். ஒவ்வொரு வரும் ஒவ்வொரு வேலையையும் செய்யச் செய்ய அதில் தேர்ச்சி ஏற்படுமாயின், அவ்வேலையில் அல்லது வெளியீட்டில் ஒரு சிறிய மாற்றம் அல்லது முன்னேற்றம் ஏற்படும்.

கைசன் கோட்பாட்டின் அடிப்படையில் இச்சிறிய மாற்றம் அல்லது முன்னேற்றம் காண்பவர்கள், அடுத்த உற்பத்தியில் என்ன மாற்றம் செய்யமுடியும் எனச் சிந்திப்பர். சாதாரணமாக நடைபெறமுடியாது எனக்கருதும் ஒரு விடயத்தைக்கூட, கைசன் அணுகுமுறையைக் கடைப்பிடிப் போர், அது ஏன் நடைபெறமுடியாதென வினவுவர். இவ்வா றாக தாம் செய்யும் கருமம் ஒவ்வொன்றிலும் மேலதிக பெறுமதி (Added Value) இருக்கின்றதா என இவர்கள் நோக்குவதால், தமது காரியங்களில் வெற்றியும் பெற்று, முன்னேற்றமடைந்து வருகிறார்கள். ஜப்பான்,சிங்கப்பூர்,தாய்வான் போன்ற நாடு களில் உற்பத்தித்திறன் அதிகரிப்புக்கும் வெற்றிக்கும் இதுவே காரணமாகும்.

### ஒரு நிறுவனத்தில் அல்லது சொந்த வாழ்கையில் கைசன் முறையை ஆரம்பித்தல்

ஓரிடத்தில் கைசன் அணுகுமுறையை ஆரம்பிப்பதற்கு, பிரச்சினைக்குரிய இடங்களை முதலில் தெரிவு செய்ய வேண்டும். அப்பிரச்சினைக்குரிய காரணங்களை நுணுகி ஆராய்ந்து நிரற்படுத்த வேண்டும். பின்னர் நிரற்படுத்திய காரணிகளுள் ஒரு பிரதான காரணியைத் தெரிவு செய்து, அதிலிருந்து கைசன் நடவடிக்கையை ஆரம்பிக்கவேண்டும்.

உதாரணமாக, தொடர்ந்து சில நாட்களாக மாணவர் ஒருவர் பாடசாலைக்குத் தாமதமாகச் செல்கிறார் என்று கொள்வோம். அவ்வாறு தாமதமாகச் செல்வதற்கு ஒரு சில நிமிடங்களில் பஸ்ஸைத் தவறவிடுவது காரணமாகலாம். அவ்வாறெனின் பஸ்ஸைத் தவறவிடுவதற்கு மூலகாரணம் நேரத்துக்கு நித்திரை விட்டெழும்பாமையே என்று கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம். நேரத்திற்கு நித்திரை விட்டெழும்பாமைக்கு, தாமதமாகப் படுக்கைக்குச் செல்வதே காரணமாகலாம். படுக்கைக்கான அத்தாமதம் தொலைக்காட்சித் தொடர் நிகழ்ச்சி ஒன்றை இரவில் நேரம் கடந்து பார்வையிடுவதனால் ஏற்படலாம். எனவே, இந்த இரவுக் காட்சியைத் தவிர்ப்பதன் மூலம், நேரத்திற்குப் படுக்கைக்குச் சென்று, நேரத்திற்குக்கு நித்திரை விட்டெழ முடியும். இதனால் பாடசாலைக்கு நேரத்திற்குச் சென்று கருமங்களையும் ஒழுங்காகவும் சிறப்பாக வும் செய்யமுடியும்.

இவ்வாறாக, எமது செயற்பாடுகளில் படிப்படியான முன்னேற்றங்களை ஏற்படுத்தும் விதமாக கைசன் அணுகுமுறையைக் கடைப்பிடித்து நமது உற்பத்தித்திறனை அதிகரித்து, நமது கருமங்களிலும் வாழ்க்கையிலும் வெற்றி பெறலாம் என்பதை உணர்த்துவது ஆசிரியர்களின் கடமை யாகும். கைசன் அணுகுமுறையோடு தொடர்பான இன்னும் பல விடயங்கள் விரிவாக நோக்கத்தக்கன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் சூழலில் முரண்பாட்டு உணர்திறன்

தொழிற் சூழலில் முரண்பாடுகள் ஏற்படுவது இயல்பு, இம்முரண்பாடுகளை புரிந்து கொண்டு சரியான தீர்வுகளை நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டும். இதற்கு முரண்பாட்டு உணர்திறன் ஆற்றல் அவசிய மாகும். இருவருக்கிடையில் அல்லது இரு கூட்டத்தாருக் கிடையில் தோன்றக்கூடிய உடன்படின்மை காரணமாக அடுத்தவர் தனக்கெதிரி, அவரைக் கட்டுப்படுத்த வேண்டும். என இரு தரப்பினரிடையேயும் ஏற்படும் நிலைமை முரண்பாடான தாகும்.

## Nature of Conflict
## முரண்பாட்டின் தன்மை

உடன்பாடின்மை, எதிர்த்தவர் எதிரி என்ற எண்ணம், அவர்களைத் தோற்கடிக்க வேண்டும் என்ற உணர்வு அவர் களுக்குத் துன்பம் கொடுத்தல், மனவெழுச்சி உக்கிரமடைதல், மன அழுத்தம் ஏற்படல், மேலோங்கும் தன்மை, நீதியின்மை, ஊறுவிளைவித்தல், நம்பிக்கையீனம், உதவியின்மை ஆகிய வடிவங்களில் முரண்பாடு காணப்படலாம்.

## முரண்பாடுகள் எவ்வாறு உருவாகின்றன?

புரிந்துணர்வின்மை, மனதில் கொழுந்துவிட்டெரியும் பகைமை, நட்பான தொடர்புகள் துண்டிக்கப்படல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையோர்மேலும் பிரச்சினைகளைத் தூண்டிவிடல், விவேக மான முடிவுகளை எடுக்காமை, உணர்ச்சி வசப்பட்டு தீர்மானங் களை மேற்கொள்ளல், ஏனையோரது உரிமைகளை இனம் காணாமை போன்றவை முரண்பாடு தோன்றக் காரணமாகலாம்.

## Criticism and Decision making

## விமர்சனமும் தீர்மானங்களை மேற்கொள்ளலும்

- ஒரு முரண்பாடு தோன்றும் சந்தர்ப்பத்தில் அடுத்தவரது கருத்துக்களுக்கும் செவிசாய்த்து, அவற்றை ஆராய்ந்து விமர்சனத்திற்கு உட்படுத்துவோம்.
- எந்தவொரு கொள்கை அல்லது நோக்கு ஆயினும் அதனைத் தீர ஆராய்ந்த பின்னரே ஏற்போம். பக்கச்சார்பைத் தவிர்த்துக் கொள்வோம்.
- குறித்த பிரச்சினையின் பல்வேறு பக்கங்களையும் கவனத்தில் கொள்வோம்.
- எச்சந்தர்ப்பத்திலும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகித் தீர்மானங்களை மேற்கொள்ளா திருப்போம்.
- பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேர்ந்தெடுக்கும் தருணங்களில் இயன்றவரை மாற்று வழிமுறைகளை இனம் காண்போம்.
- தூரநோக்குடன் செயற்படுவோம். இயன்றவரை தகவல் களைத் திரட்டி அவற்றை ஆராய்ந்த பின்னரே தீர்மானங்களை மேற்கொள்வோம்.
- ஏனையோருடன் கலந்துரையாடிய பின்னர் பிரச்சினைத் தீர்வுகளை நடைமுறைப்படுத்துவோம்.

## முரண்பாடுகளின் வகைகள் (Types of Conflicts)

### 1. நிறுவனங்களுக்கிடையிலான முரண்பாடு (Inter - Organizational Conflict)

நிறுவனங்களுக்குள்ளே எழுகின்ற முரண்பாடுகளுக்கு மேலதிகமாக நிறுவனங்களுக்கிடையில் முரண்பாடுகள் எழுவதும் குறிப்பிடத்தக்கதாகும். ஒரே தொழிலில் போட்டியிடு கின்ற அல்லது வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்களுக்காகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியிடுகின்ற நிறுவனங்களுக்கிடையில் இத்தகைய முரண்பாடுகள் எழுகின்றன.

**2.** திணைக்களங்களுக்கிடையிலான முரண்பாடு (Inter - Departmental Conflict)

ஒரு நிறுவனம் அதன் செயற்பாடுகளை இலகுவாக்கும் பொருட்டு பல பகுதிகளாக அல்லது வரையறுக்கப்பட்ட வளங்களுக்கான போட்டி, புலனுணர்விலான வேறுபாடுகள், தனிநபர் முரண்பாடுகளின் விளைவுகள் போன்றவற்றினால் முரண்பாடுகள் எழுகின்றன.

**3.** குழுக்களுக்கிடையிலான முரண்பாடு (Inter - Group Conflict)

ஒரு நிறுவனத்தில் முறைசார்ந்த குழுக்களுக்கிடையிலோ அல்லது முறைசாராத குழுக்களுக்கிடையிலோ முரண்பாடுகள் காணப்படலாம். அவற்றின் இலக்குகள் வேறுபடுதல், வளங்களுக்களுக்கிடையிலான தங்கியிருக்கும் தன்மை, தனிநபர் முரண்பாடுகளின் விளைவுகள் என்பன மூலமாக குழுக்களுக் கிடையிலான முரண்பாடு எழுகின்றது.

**4.** தனிநபர்களுக்கிடையிலான முரண்பாடு (Interpersonal Conflict)

இது தனிநபர்களின் ஆளுமை வேறுபாடுகள், புலனுணர்விலான வேறுபாடுகள், வகிபங்கு வேறுபாடுகள் (Role differences) போன்றவற்றால் எழுகின்றது. இத்தனிநபர் முரண்பாடானது ஏற்றுக்கொள்ளக்கூடிய எல்லைக்குள் நிர்வகிக்கப்படுமாயின் அது புதிய கருத்துக்கள், சிறந்த தீர்மானங்கள் என்பவற்றுக்கு இட்டுச்செல்வதாக அமையும்.

**5.** வகிபங்கு முரண்பாடு (Role Conflict)

ஒரு வகிபங்கு (Role) என்பது ஒரு பகுதியிலுள்ள ஒரு நபரின் நடத்தை பற்றிய எதிர்பார்ப்புக்களின் தொகுதி ஆகும். நடைமுறையில் ஒருவர் உண்மையாக நடந்துகொள்ளும் விதம் ஆனது அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நடத்தை வடிவங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் இசைவற்றுக் காணப்படும்போது வகிபங்கு முரண்பாடு எழுகின்றது. பங்கு முரண்பாடு பின்வருவனவற்றால் ஏற்படு கின்றது.

அ) வகிபங்கின் ஒவ்வாத தன்மை - Role Incompatibility

ஆ) வகிபங்கின் நிச்சயமற்றதன்மை - Role ambiguity

இ) வகிபங்குச் சுமை - Role over load

ஈ) வகிபங்குச் சுமையின்மை - Role under load

ஒருவர் குறிப்பிட்ட ஒரு தொகுயினரின் எதிர்பார்ப்புக் களுடன் இணங்குவது சாத்தியமற்றதாகிறது. இதனால் பங்கின் ஒவ்வாத தன்மை காரணமாக முரண்பாடு ஏற்படுகின்றது.

பங்கின் நிச்சயமற்ற தன்மை ஆனது ஒரு நபர் என்ன செய்ய வேண்டும் என்பதனை நிச்சயப்படுத்த முடியாதுள்ள நிலையிலும், பங்கின் எதிர்பார்ப்புகள் பற்றி தெளிவு இல்லாத நிலையிலும் எழுகின்றது. இதனால் அவரது நடத்தை, ஏனையவர்களது எதிர்பார்க்கைகளிலிருந்து வேறுபாடலாம்.

ஒரு நபர் வேறுபட்ட பங்குகளை ஆற்றும்போது அல்லது வேறுபட்ட எதிர்பார்ப்புக்களுக்கு முகம்கொடுக்கும்போது பங்குச்சுமை எழுகின்றது. இங்கு அவர் எல்லா எதிர்பார்ப்புகளை யும் திருப்திகரமாக நிறைவேற்ற முடியாததால் முரண்பாடு ஏற்படுகின்றது.

ஒரு நபர் தனக்கு வழங்கப்பட்ட பங்கு தனது இயலளவுக்கு போதுமானதல்ல என உணரும் போது பங்குச்சுமையின்மை எழுகின்றது. இது ஒரு புதிய ஊழியர் முதன் முதலில் நியமிக்கப் படும் போதோ அல்லது அதிகார கையளிப்பின் விளைவாகவோ எழலாம்.

## முரண்பாட்டின் சாதக, பாதக விளைவுகள்
(Positive and Negative Outcomes of Conflict)

பொதுவாக நிறுவனங்களில் காணப்படும் உச்ச முரண்பாடுகள் ஊழியர்களுக்கிடையே அதிக குழப்பத்தை ஏற்படுத்துவதுடன், நிறுவனத்தின் செயற்றிறனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Performance) பாதிக்கும் மேலும் முரண்பாட்டு நிலமைகள், மிகையான மன அழுத்தத்தை அல்லது உடல் அழுத்தத்தை எழச் செய்யலாம்.

எனினும், முரண்பாட்டை உரிய முறையில் முகாமை செய்யும்போது, சாதகமான விளைவுகள் ஏற்பட முடியும். குழுக்களுக்கும் தனி நபர்களுக்கும் சுறு சுறுப்பூட்டுகின்ற ஒரு சக்தி யாகவும் முரண்பாடு அமையும். மேலும் நிறுவன வடிவமைப்பு : தொழிற்பாடு என்பனவற்றின் முன்னேற்றத்துக்கும், தீர்மானம் செய்யும் செய்முறைக்கும் உதவும் ஒன்றாக அமைய முடியும். உரிய முறையில் அடையாளங் காணப்பட்டு கையாளப்படும் முரண்பாடானது நிறுவனம் அழிந்துபோவதைத் தடுக்க உதவும்.

முரண்பாட்டு நிலைமைகளுக்கு கையாளுவதற்கு தமது நேரத்தில் 20%ஐ செலவிடுவதாக தெரிவித்த நடைமுறை முகாமை யாளர்களிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களை Schmidt என்பவர் ஆய்வு செய்தார். இதிலிருந்து முரண்பாட்டின் சாதகமான விளைவுகளையும் பாதகமான விளைவுகளையும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

**சாதகமான விளைவுகள் (Positive Outcomes)**

- சிறந்த எண்ணங்கள் (ideas) உருவாகும்.
- ஊழியர் புதிய அணுகுமுறைகளைக் தேடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவர்.
- நீண்டகாலமாக இருந்துவரும் பிரச்சினைகள் வெளிக் கொணரப்பட்டு தீர்க்கப்படும்.
- தனி நபர்களின் நோக்குகள் தெளிவாக்கப்படும்.
- வேலையில் விருப்பத்தையம் புதியனவற்றை உருவாக்கும் ஆற்றலையம் தூண்ட முடியும்.
- மக்கள் தமது இயலளவை சோதிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாதகமான விளைவுகள் (Negative Out comes)**

- சில ஊழியர்கள் தாம் தோற்கடிக்கப்படுவதாக அல்லது தாழ்த்தப்படுவதாக உணரலாம்.
- ஊழியருக்கிடையிலான இடைவெளி அதிகரிக்கப்படுகின்றது.
- நம்பிக்கையின்மையும் சந்தேகமும் கொண்ட ஒரு சூழ்நிலை விருத்தியடைகின்றது.
- தனி நபர்களும் குழுக்களும் தமது சொந்த நலன்களில் அக்கறையாக இருப்பர்.
- ஊழியர் குழுவாக வேலை செய்வது (Team work) பாதிக்கப்படும்.
- தொழிலாளர் விலகிச் செல்வது அதிகமாக இருக்கும்.

**நிறுவன முரண்பாடுகளை முகாமை செய்தல்**
**(Managing Organizational Conflicts)**

நிறுவனங்கள் வினைத்திறனான முறையில் இயங்குவதற்கு அங்குள்ள முரண்பாடுகள் சரியானமுறையில் முகாமை செய்யப்பட வேண்டும். இவ்வாறு சரியான முறையில் முரண்பாடுகளை முகாமை செய்வதன் மூலம் சாதகமான விளைவுகளை நிறுவனம் அனுபவிக்க முடிவதுடன் முரண்பாடுகளினால் பாதக விளைவுகள் ஏற்படாது. தவிர்க்கவும் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பயனுள்ள குறிப்புகள்

பரீட்சை பற்றிய பயம் மாணவர்களிடத்திலே காணப்படுவது இயல்பானது தான் பரீட்சையில் நான் எப் படிச் செய்யப்போகின்றேன் பரீட்சை கடினமாக இருக்குமா? பரீட்சைக்குப் போதிய அளவு என்னைத் தயார்ப்படுத்தி உள்ளேனா? - இவ்வாறான பல வினாக்கள் மாணவர்களிடத்தில் எழுவது வழமையானது தான். இதனால் பரீட்சை நெருங்கும் சமயத்தில் மெல்ல மெல்லப் பரீட்சை பற்றிய பயமும் உள்ளத்திலே ஒருவித பதகளிப்பும் தோன்றக்கூடும்.

ஆனால், மாணவர்கள் ஒருவிடயத்தைக் கவனத்திற் கொள்ளவேண்டும். மேற்கூறியவாறான வினாக்களை தம்மிடத்தே எழுப்பி, பரீட்சை நெருங்கும் நேரத்தில் மனப் பயங்கொள்வதாலோ பதகளிப்பு அடைவதாலோ எந்தவித மான நன்மையும் இல்லை. மாணவர்கள் போதிய அளவுக்குத் தம்மைத் தயார் செய்யவில்லையோ என ஐயுறவு கொண்டா லும் கூட பரீட்சைத் தினத்துக்குக் கிட்டிய நாட்களில் தம்மைத் தயார் செய்வதற்கான கால அவகாசமும் அவர்களுக்குத் கிடைக் காது. எனவே தான் பரீட்சை பற்றி எவ்வித பயமும் கொள்ளாது, மனப்பதகளிப்பின்றி நிதானமாக மனமகிழ்ச்சியோடு பரீட்சையை எதிர்கொள்வதற்குத் தயாராக வேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரீட்சை குறித்த பயத்தினாலும் பதகளிப்பினாலும் ஏற்படக்கூடிய விளைவுகள்**

நாம் எமது வாழ்விலே பல்வேறு மனவெழுச்சிகளுக்கு உள்ளாகின்றோம். மகிழ்ச்சி, துக்கம், கோபம், பயம் என பல்வேறு மனவெழுச்சிகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்படுவது வழமையானதுதான். இவற்றுள் பயம் என்ற மனவெழுச்சி வெவ்வேறு காரணங்களால் ஏற்படக்கூடியது. நாம் எதிர்பாக்கும் இலக்கை அடையத் தவறிவிடுவோமோ என்ற ஏக்கம் சில சந்தர்ப்பங்களில் எமக்கு மனப்பயத்தை ஏற்படுத்திவிடுகின்றது. தாம் பரீட்சையில் சித்தியடையத் தவறி விடுமோவோமா என்ற ஐயுறவும் ஏக்கமும் மாணவர் களிடையே பரீட்சை பற்றிய மனப்பயத்தை ஏற்படுத்தக் காரணமாகின்றன.

பரீட்சை பற்றிய பயம் எமக்கு ஏற்பட்டதும் அது எம்மிடத்தில் ஒரு பதகளிப்பு நிலையைத் தோற்றுவித்து விடுகின்றது. பொதுவாக நாம் உணரும் அசௌகரிய நிலையை, இடர்முன் உணர்தன்மையை அல்லது மனஇறுக்க உணர்வை பதகளிப்பு என்போம். எனவே பரீட்சை பற்றிய பயத்தினால் எமக்கு ஏற்படும் அசௌகரிய நிலையான பதகளிப்பு எமது பரீட்சை வெற்றியில் கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்திவிடலாம் என்ற எச்சரிக்கையுடன் மனப்பயத்தையும் பதகளிப்பையும் தவிர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றிச் சிந்திப்பது நன்மை தரக் கூடியதாகும்.

பதகளிப்புக்குள்ளாகும் மாணவர்கள் பொதுவாக தாழ்ந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதாக ஆய்வுகள் சில எமக்குத் தெரிவிக்கின்றன. பதகளிப்பு நிலையில் மன ஒருமைப்பாடின்றி, கவனம் திசைதிரும்பிய நிலையில் பல தவறு களை மாணவர்கள் விட்டுவிடுகின்றார்கள், பரீட்சையில் சித்தியெய்த தவறிவிட்டால் இடம்பெறக் கூடிய எதிர் விளைவு களைப் பற்றிய சிந்தனையே மாணவர்களிடத்தில் கவலையைத் தோற்றுவித்துவிடுகின்றது. அவ்வாறு எதிர்மறையான விளைவுகளைச் சந்திக்கப் போகின்றவர்களாகத் தம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனை செய்துகொண்டு, கவனக்குவிப்பிலும் படித்தவற்றை நினைவுகூர்வதிலும் இவர்கள் இடர் படுகின்றார்கள். இவற்றை விட உள்ளங்கை வியர்த்தல், வயிற்றுக், குழப்பம், இதயத் துடிப்பு வீதம் அதிகரித்தல் போன்ற உடற்கூற்றியல் விளைவு களையும் அதன் காரணமாக பயத்துக்கு உள்ளாகும் நிலையையும் இவர்கள் அடைகின்றார்கள்.

### பதகளிப்பு நிலையைச் சமாளித்தல்

பரீட்சை பற்றிய மனஅழுத்தங்களால் பதகளிப்பு ஏற்படாவண்ணம் மாணவர்கள் சமநிலையான ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கு ஆசிரியர்கள் உதவவேண்டும். மாணவர்களிடம் ஒழுங்கான படிப்புப் பழக்கத்தை ஏற்படுத் திவிட்டால் அது இலகுவாகின்றது. ஆனால், ஒழுங்கான படிப்புப் பழக்கத்தைக் கொண்ட மாணவர்களும், கூட பரீட்சை நெருங்கும் காலத்தில் இலகுவாக பதகளிப்பு நிலைக்கு ஆட்படுத்தப்பட்டுவிடும் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளுமே காணப்படுகின்றன. எனவே பதகளிப்புத் தொடர்பான நிலை எல்லா மாணவர்களுக்குமே பொதுவானது என்பதால் அந்நிலையைச் சமாளிப்பதற்கான உபாயங்கள் பற்றி நோக்குவது பொருத்தமானது.

பதகளிப்பு நிலைமைகளைச் சமாளித்தல் தொடர்பாக மூன்று முக்கியமான உபாயங்கள் முன்வைக்கப்படுகின்றன.

1. பிரச்சினை விடுவித்தல்
2. மனவெழுச்சியைச் சமாளித்தல்.
3. குறித்த நிலைமை ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களைத் தவிர்த்தல்.

பிரச்சினை விடுவித்தல் உபாயமானது பரீட்சைக்கு முன்பான தயார்நிலை குறித்த ஓர் உபாயமாகும் பரீட்சைக் காலத்துக்கு முன்பதாகவே போதிய காலஅவகாசம் எடுத்து, பரீட்சையை மையப்படுத்தி படிப்பதற்கான கால அட்டவணை ஒன்றைத்திட்டமிட்டுக் கொள்வதும் அக்காலஅட்டவணைப் பிரகாரம் படிப்பை மேற்கொள்வதும் சிறந்த பாடக்குறிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பெற்றுக்கொள்வதும் பரீட்சை நெருங்கும் காலத்தில் மீட்டல் செய்வதற்கான சுருக்கக் குறிப்புகளைத் தயார் செய்வதும் படிப்பதற்கென பிறரின் குறுக்கீடுகளுக்கு இடமளிக்காத பாதுகாப்பான இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதும் எனப்பல நடவடிக்கைகளை பிரச்சினை விடுவித்தல் உபாயம் உள்ளடக்கியுள்ளது. அதாவது, பரீட்சையை மையப்படுத்தி பரீட்சைக்கு முன்னரேயே மாணவர்கள் தம்மை நன்கு தயார்ப்படுத்தும் முன் திட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக பிரச்சினை விடுவித்தல் உபாயம் காணப்படுகிறது.

மனவெழுச்சியைத் சமாளித்தல் என்பது பரீட்சையின் போது அல்லது பரீட்சைக்காலத்தில் பதகளிப்பு உணர்வு நிலையைத் தணிப்பதற்கான உபாயமாகும். மூச்சுப்பயிற்சிகள், தளர்வுப் பயிற்சிகள் போன்றன மனவெழுச்சியைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகளாகும் சிலவேளைகளில் எம்மைத் திசை திருப்பி விடாமல் நாங்கள் சொல்பவற்றைப் பொறுமையோடு கேட்கக்கூடிய நண்பர் ஒருவரிடம் எமது பதகளிப்பு நிலை குறித்த அந்த மன உணர்வுகளை விபரிப்பதும்கூட எமக்கு ஆறுதல் தந்து எம்மை பதகளிப்பு நிலையிலிருந்து விடுவிக்கக் கூடும்.

குறித்த பதகளிப்பு நிலை ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களைத் தவிர்த்துக் கொள்ளல் என்பது மாணவர்கள் எல்லோரினதும் கவனத்தைப் பெறவேண்டிய முக்கியமான உபாயமாகும். நாம் பரீட்சைக்கு எவ்வளவு தூரம் எம்மைத் தயார் செய்தாலும் கூட இறுதிநேரத்திலே எங்களின் உறுதி நிலையைக் குலைத்து எம்மை பதகளிக்கச் செய்கின்ற செய்திகள் எம்மைவந்தடையலாம். உதாரணமாக, நாம் குறிப்பிட்ட ஒரு விடயம் முக்கியத்துவம் குறைந்ததெனக் கருதி அதனைத் தவிர்த்திருக்கும் போது, பரீட்சைத் தினத்தன்று சந்திக்கும் உங்களின் சகமானவர் அவ்விடயம் பரீட்சைக்கு வரலாம் என்று நம்புவதாகக் கறி, உங்களைக் குழப்பநிலைக்கு இட்டுச் செல்லலாம். எனவே இதை ஒத்த பல சந்தர்ப்பங்களைத் தவிர்த்தல் எங்களுடைய சமநிலையைப் பேண எமக்கு உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதகளிப்பு நிலையைத் தோற்றுவிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள்**

- பரீட்சை குறித்து போதிய அளவுக்குத் தயார், செய்யமுடியாமற்போனமை குறித்து, பரீட்சைக்கு ஓரிரு தினங்களுக்கு முன் அல்லது பரீட்சை தினத்தன்று சக மாணவர்களுடன் உரையாடுதல்.
- ஒரு பாடப்பரீட்சைக்கு முதற்தினத்தில் அப்பாடம் சம்பந்தமான சகல குறிப்புகளையும் படித்தல்.
- பரீட்சை நடைபெறவுள்ள நாளுக்கு இரண்டொரு தினம் முன்பாக நடைபெறும் நிபுணர்கள் நடத்தும் விசேட வகுப்புக்களுக்கும் கருத்தரங்குகளுக்கும் சமூகமளித்தல்.
- பரீட்சை தினத்தக்கு முதல் நாள் இரவில் சகமாணவர் களுடன் கலந்துரையாடிப் படித்தல்.
- பரீட்சைக்கு முன் சகமானவர்கள் கூறும் சந்தேகங்களைச் செவிமடுத்தல்.
- பரீட்சை மண்டபத்துக்கு பரீட்சை தொடங்கும் நேரத்துக்குச் சற்றுமுன்பாகவே சென்று சுட்டிலக்கத்தைக் காணாது தேடுதல்.
- பரீட்சை வினாத்தாளைச் சரியாக வாசிக்காமல் விடை எழுதத் தொடங்குதல்
- நன்றாகத் தெரிந்த வினாக்களில் அதிக நேரத்தைச் செலவழித்து ஏனைய வினாக்களுக்கு விடையளிப்பதற்குநேரம் போதாமையை உணர்தல்.

**பரீட்சை எழுது முன்னர் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள்**

- நேர அட்டவணை கிடைத்ததும் நீங்கள் தோற்ற விருக்கும் பாடங்களுக்கான கால அட்டவணையைத் தயாரித்து, எத்தினத்தில், காலையிலா, பிற்பகலிலா எனக் குறித்து வைத்துக்கொள்ளல்
- பரீட்சைக்கு முதல் நாளிலேயே பரீட்சைக்குத் தேவை யான பேனை பென்சில் ஏனைய சாதனங்கள் என்பவற்றைத் தயார் செய்து வைத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை போன்றவற்றை தயாராக வைத்திருத்தல்
- பரீட்சை மண்டபத்துக்கு பரீட்சை ஆரம்பிக்கும் நேரத்துக்கு - குறைந்தது அரை மணித்தியாலம் முன்னதாகவே சென்றடையக் கூடியதாக வீட்டிலிருந்து நேரத்துக்குப் புறப்படல்.
- சைக்கிளில் செல்பவராயின் ரயர்களில் காற்று உள்ளதா என நேரத்துக்கு பரிசீலித்தல்.
- பரீட்சை மண்டபத்திலோ அல்லது பரீட்சை மண்டபத்திலுள் நுழைய முன்னரோ ஒருவருடனும் அதிகம் கதைப்பதைத் தவிர்த்து கட்டிலக்கம் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து. உங்களின் இருக்கையில் அமைதியாக பரீட்சை மேற்பார்வையாளரின் அறிவுத்தலுக்காக எதிர்பார்த்திருத்தல்.
- இருக்கும் இடத்தில் போதிய வெளிச்சம் கிடைக்கின்றதா எனப்பார்த்துக் கொள்ளல்.
- முதல்நாளில் நடந்து முடிந்த பாடத்தின் வினாத்தளைப் பற்றி மீட்டுப் பார்க்காதிருத்தல்.

**பரீட்சை எழுதும் சமயத்தில் எடுக்க வேண்டிய கவனங்கள்**

1. வினாத்தாளைப் பெற்றுக்கொண்டதும் வினாத்தாளிலுள்ள அறிவுறுத்தலை மிகவும் கவனமாக வாசித்தல். பின்னர் வினாக்களை மேலோட்டமாக வாசித்து தெரிவு செய்யவுள்ள வினாக்களைத் தீர்மானித்துக் கொள்ளல்.
2. நன்கு தெரிந்த வினாவுக்கான விடையை எழுத ஆரம்பித்தல், அந்த வினாவுக்குரிய இலக்கத்தையே விடைத் தாளிலும் எழுதுதல்.
3. வினாவை ஒருமுறைக்கு இருமுறை வாசித்து வினாவிலுள்ள முக்கியமான பதங்களை (Key terms) அடிக் கோடிட்டுக் கொள்ளல்.
4. ஒவ்வொரு வினாவிலும் அதற்கான முதன்மைப் பதத்தைத் தீர்மானித்துக் கொள்ளல், உதாரணமாக விளக்குக, ஆராய்க, விபரிக்குக, மதிப்பிடுக போன்ற பதங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தங்களைப் புரிந்துகொண்டு பொருத்தமாக விடையளிக்க முற்படுதல்.

**கட்டுரை வினாக்களுக்கு விடையளிக்கும் போது எடுக்க வேண்டிய கவனங்கள்**

கட்டுரைவகை வினாக்களுக்கு தகவல்களைத் தொகுத்து ஒழுங்குபடுத்தி தர்க்கரீதியான ஒரு தொடராக விடைகளை எழுதவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இது தொடர்பான கவனங்களாவன.

1. வினாவை விளங்கிக் கொள்ளும் வகையில் அதனை வாசித்து, அவ்வினாவுக்கான விடை எவ்வாறு அமைய வேண்டுமென மனத்தளவில் விரைவாகத் தீர்மானித்துக் கொள்ளல்.

2. வினாவுக்கான விடையை, அறிமுகம், கட்டுரையின் முக்கிய அம்சம் (Body) முடிவு, என்ற ஒழுங்கிலே எழுதுவதற்கான சுருக்கக்குறிப்புக்களைக் குறித்துக்கொண்டு எழுதத் தொடங்குதல்.

3. விடையை எழுதத் தொடங்கும் போது, வினாவிலுள்ள முக்கியமான அம்சத்துடனேயே அறிமுகப்பந்தியை ஆரம்பிப்பது புத்திசாலித்தனமானதாகும்.

உதாரணமாக, ஈழத்துத் தமிழ் நாடகப் பாரம்பரியம் நீண்ட வரலாற்றைக் கொண்டது என்ற கூற்றை மதிப்பிடுக?

என்ற வினாவுக்கு விடையளிக்க முற்படும் போது, "ஈழத்துத் தமிழ்நாடகப் பாரம்பரியம் என்பதனால் சுட்டப்படுவது...." என ஆரம்பிக்கலாம். அல்லது உங்களுடைய அபிப்பிராயத்தையே சொல்லும் வகையில், "ஈழத்துத் தமிழ் நாடகப் பாரம்பரியம் நீண்ட வரலாற்றைக் கொண்டது" என்ற கூற்று சர்ச்சைக் குரியதாகும் என எழுத ஆரம்பிக்கலாம்.

4. கட்டுரையின் (விடையின்) உடலில் இடம் பெற வேண்டிய ஒவ்வோர் அம்சங்களையும் தர்க்க ரீதியான ஓர் ஒழுங்கில் வெவ்வேறு பந்திகளில் எழுதிச் செல்வது அவசியம். ஒரு குறித்த அம்சத்தில் பல உப அம்சங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமெனின், அந்த உப அம்சங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பந்திகளில் எழுதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இறுதியில் முடிவாக நீங்கள் சொல்லவிருப்பதை தெளிவாக எழுதிக்கொள்ள வேண்டும்.

6. வெவ்வேறு வினாக்களுக்கான விடைகளுக்கிடையே போதிய அளவு இடைவெளியை விடுவது அவசியம். பொதுவாக புதிய வினாவொன்றுக்கான விடையை ஒரு புதிய தாளிலேயே எழுதத்தொடங்குவது பொருத்தமானது. வேறொரு வினாவுக்கு விடையளித்துக் கொண்டிருக்கும் போது, முன்னைய வினாவுக்கான விடை பற்றிய புதிய தகவல்களை பின்பு சேர்த்துக் கொள்வதற்கு இது உதவும்.

7. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய நேரத்தில் அவ்வினாவுக்கான விடையை எழுதிமுடிக்க வேண்டும். பின்பு நேரமிருப்பின் முன்னைய விடைகளில் மேலும் சேர்க்கப்பட வேண்டியன எனக் கருதுபவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

8. எல்லா வினாக்களுக்கும் பூரணமான விடைகளை எழுத முயற்சிக்க வேண்டும். நான்கு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டிய பரீட்சையில் முதல் மூன்று வினாக்களுக்கு மிகவும் அதிகமான தகவல்களுடன் விடைய ளித்துவிட்டு நான்காவது வினாவுக்கான விடையை எழுதாமல் விடுவதைவிட, மூன்றாவது வினாவை எழுதத்தொடங்கும்போது உள்ள நேரத்தைக் கணக்கிட்டு அடுத்த இரு வினாக்களுக்கும் அதனைப் பங்கிட்டு திருப்திகரமான விடையை எழுதிக் கொள்வது அதிக புள்ளிகளைப் பெற்றுத்தரும்.

### பல்தேர்வு வினாக்களுக்கு விடையளித்தல்

1. பல்தேர்வு வினாக்கள் பல சந்தர்ப்பங்களில் எம்மை ஏமாற்றிவிடக்கூடியன. எனவே வினாக்களிலுள்ள சொற்பிரயோகத்தை நன்கு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.
2. இயன்றவரை விரைவாக விடையளிக்கக்கூடிய வினாக்களுக்கு விடையளித்துக்கொண்டு செல்ல வேண்டும்.
3. வினாவை வாசிக்கும்போது இரு விடைத்தெரிவுகளில் எது சரியானதெனக் கண்டறியமுடியாதவிடத்து, அவ்விரு விடைத்தெரிவுகளையும் குறித்துக்கொண்டு. பின்பு வினத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளை மீட்டுப் பார்க்கும் போது, அவ்வினாவுக்கான விடையை முன்பு குறித்துக்கொண்ட விடைத் தெரிவிலிருந்து தீர்மானித்துக்கொள்ளலாம். அவ்வாறு விடைத் தெரிவை அவற்றிலிருந்து தீர்மானிக்க முடியாதபோது அறிவார்ந்த நிலையில் ஊகிப்பதன் மூலம் அவ்விடைத் தெரிவுகளுள் ஒன்றை விடையாகக் கொள்ளலாம்.

4. தவறான விடைகளுக்கு புள்ளிகள் கழிக்கப்பட மாட்டாது என்பதை உறுதிசெய்து கொண்டு சரியான விடைகளை முன்பு குறிப்பிட்டதுபோல இரு தெரிவுகளிலிருந்து தீர்மானிக்க முடியாதவிடத்து அத்தெரிவுகளுள் ஒன்றை ஊக விடையாகக் குறித்துக்கொள்ள வேண்டும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

இதுவரை கூறியவற்றிலிருந்து, பரீட்சைப் பயத்தை மனங்கொள்ளாது பதகளிப்புக்கு இடங்கொடுக்காது, நீங்கள் பெற்றுக்கொண்ட அறிவுடனேயே நிதானமாகப் பரீட்சையை நீங்கள் எதிர்கொள்ளின் வினாக்களைச் சரியான முறையில் விளங்கிக்கொண்டு, புத்திபூர்வமாக விடையளிப்பதற்கான சூழலை நீங்களே உருவாக்கிக்கொள்ள முடியும் என்பது இங்கு வலியுறுத்தப்படுகின்றது. அவ்வாறாயின் உங்களுக்கு வெற்றி நிச்சயம்.

பதகளிப்பு நிலைக்கு நீங்கள் உட்படக்கூடாதென்பதற்காக தவிர்த்துக் கொள்ள வேண்டியவை எவை என இங்கு சுட்டிக்காட்டப்பட்டனவோ, அவற்றை உங்கள் சக மாணவர்களுக்கு நீங்கள் ஏற்படுத்தாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பெற்றோர்கள் இவ்விடயங்களைக் கவனத்திலெடுத்து உங்கள் பிள்ளைகளுக்குப் பயத்தையும் பதகளிப்பையும் தோற்றுவிக்கக்கூடிய நெருக்கடிநிலைகளைத் தோற்றுவிக்காமல் பிள்ளைகளுக்கு உற்சாகம் வழங்கி அவர்களை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்துக்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் பிற நூல்கள்

1. நாட்கள் கணங்கள் நமது வாழ்க்கைகள் - சிறுகதைத் தொகுதி
2. பாட்டுத்திறத்தாலே - சிறுகதைத்தொகுதி
3. அம்மாவின் உலகம் - சிறுகதைத்தொகுதி
4. ஏனிந்த தேவாசுர யுத்தம் - கவிதைத்தொகுதி
5. மாற்றம்காணும் கல்வி உலகுடன் இணைதல் - கல்விசார் கட்டுரைகள்
6. புதிய கண்ணோட்டங்களும் புதிய பார்வையும் - கட்டுரைகள்
7. இளையோர் இசை நாடகங்கள் - 5 நாடகங்கள்
8. இலக்கியமும் உளவியலும் - கட்டுரைகள்
9. எம்மவர்கள் - கட்டுரைகள்
10. தெளிதல் - பல்துறைசார் கட்டுரைகள்
11. பூதத்தம்பி - இசைநாடகம்

தொகுப்பாசிரியராக

1. நதியில் விளையாடி( கவிதைத்தொகுப்பு)
2. ஜீவநதி நேர்காணல்கள்
3. காலநதியின் கற்குழிவு (சிறுகதைத்தொகுதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலைக்காலத்திலேயே மாணவர்களுக்குக் கற்றலுக்கு வலுவூட்டல் இன்றைய காலத்தின் தேவை யாகும். நாளைய உலகின் சிற்பிகளாக விளங்கப் போகும் மாணவர்களுக்கு வேண்டிய திறன்களை விருத்திசெய்து, ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்க வேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பு மாத்திரமன்று, சமூகத்தினதும் பொறுப்புமே யாகும். ஆனாலும், மாணவர்களிடத்தில் காணப்படக் கூடிய ஆற்றல்களை இனங்கண்டு அவற்றை மலர்ச்சியுறச் செய்யக் கூடிய வாய்ப்புகள் ஆசிரியர்களுக்கே அதிகம் உண்டு. இதனால் இன்றைய உலகியல் மாற்றங்களை ஒட்டியதாக ஆசிரியர்கள் செயலாற்றல் கொண்டவர் களாக விளங்க வேண்டுமெனில், ஆசிரியர்களுக்கு வலுவூட்டல்(empowering teachers) அத்தியாவசிய மானதாகும்.

ISBN: 978-955-4676-49-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org